دعاء الوظائف

துஆஉல் வளாயிப்

என்னும்

பெரிய மஸ்னூன் துஆக்கள்

வழக்கமாக ஓதிவரும் துஆக்கள்
அவைகளின் சிறப்புகள்
தினந்தோறும் செயல்படும்
சுன்னத்தான அமல்களின் முறைகள்

தொகுத்தவர் – அபூயூசுப்

வெளியிடுவோர்
ஸலாமத் பதிப்பகம்
95, லிங்கிச் செட்டித் தெரு,
2-வது மாடி, சென்னை-1.
✆ 5211981, 5230570

ஸலாமத் பதிப்பகம் SP

துஆவுல் ஙளாயிப்

என்னும்

பெரிய மஸ்னூன் துஆக்கள்

தொகுத்தவர்:

அபூயூஸுப்

வெளியீடு

ஸலாமத் பதிப்பகம்

பதிப்பாளர், விற்பனையாளர் & ஏற்றுமதியாளர்

விநியோகஸ்தர்கள்: குர்ஆன் மற்றும் இஸ்லாமிய நூல்கள்

95 (புதிய எண்197), லிங்கிச் செட்டித் தெரு,

முதல் மாடி, சென்னை—600 001.

Phone : 2521 1981, 2523 0570

Tel/fax: 25211981

Mobile: 98410 - 62614, 98413 - 81466

புத்தக விபரக் குறிப்பு

நூலின் பெயர்	: **துஆவுல் வளாயிப் என்னும் பெரிய மஸ்னூன் துஆக்கள்**
தொகுத்தவர்	: அபூயூசுப்
பதிப்புரிமை	: ஆசிரியருக்கே!
முதல் பதிப்பு	: ஏப்ரல் 1982
33ம் பதிப்பு	: ஹிஜ்ரி 1425 ஸபர் (ஏப்ரல் 2004)
34ம் பதிப்பு	: ஹிஜ்ரி 1425 ஷஃபான் (செப்டம்பர் 2004)
ஹதியா	: ரூ **40.00**

சென்னையில் எங்களின் அனைத்து நூல்களும் கிடைக்குமிடம்

ஸலாமத் புக் சென்டர்

மஸ்ஜிதே மஃமூர் வளாகம்

168/3 (புதிய எண் 184) அங்கப்ப நாயக்கன் தெரு,

சென்னை-1. ☎ : 2523 0570, 2521 1981

Mobile: 98413 - 81466, 94441 - 36115

தொகுத்தவனுரை

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

அன்புடையீர்,

அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்)

இதற்குமுன் சொர்க்கத்தின் வாசல், பிக்ஹின் அறிவுக் களஞ்சியம், அமல்களின் விளக்கம், சிறந்த உபதேசம் போன்ற நூற்களை வெளியிட எல்லாம் வல்ல அல்லாஹ் உதவியும் கிருபையும் செய்தானோ அந்த கருணையுள்ள அல்லாஹ் துஆவுல் வளாயிப் என்னும் இம் மாபெரும் பொக்கிஷத்தை வெளியிடவும் அருள் புரிந்தான். அல்ஹம்துலில்லாஹ்! அறிவிலும், அனுபவத்திலும் மிகவும் குறைவுள்ள ஒரு மனிதனால் இந்நூலை வெளியிட முடியாது என்பதை நாம் அறிவோம். ஆனால் சர்வ சக்தியுள்ள அந்த அல்லாஹ் நாடிவிட்டால் சக்தியற்றவர்களைக் கொண்டும் அவனால் எதையும் செய்ய முடியும். இதில் அணுவளவும் சந்தேகமில்லை. மேலும் இதுபோன்ற பல அறிவு நூற்களை வெளியிட அல்லாஹுதஆலா நல்லருள் புரிவானென்று அவனுடைய அருட்கொடையின் மீது நம்பிக்கை வைப்போமாக!

''அல்லாஹ்வின் தூதரிலே உங்களுக்கு அழகிய முன்மாதிரி இருக்கிறது'' என்றும் மற்றோர் இடத்தில் ''நீங்கள் மெய்யாகவே அல்லாஹ்வை நேசிப்பவர்களாயிருந்தால், என்னைப் பின் பற்றுங்கள்'' என்றும் அல்லாஹு தஆலா தன் திருமறையில் குறிப்பிடுகிறான். எனவே இந்நூலில் காணும் அன்றாடம் செயல்படும் சுன்னத்தான வழிமுறைகளையும், துஆக்களையும் நாம் பின்பற்றி வந்தால் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அன்பைப் பெறுவதுடன் அல்லாஹ்வின் நல்லுதவியையும் பெறுவதற்கு காரணமாக அமையும். எல்லாம் வல்ல அல்லாஹுதஆலா நம் யாவருக்கும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சுன்னத்தான வாழ்க்கையைப் பின்பற்ற அருள் புரிவானாக! அமீன்.

உள்ளத்தில் (நூர்) பிரகாசம் அடைவதற்கு வழி

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அந்தந்த நேரங்களில் துஆக்களை ஓதி வந்ததுடன் ஸஹாபா பெருமக்கள் (ரலியல்லாஹு அன்ஹும்) அவர்களையும் ஓதி வரும்படி ஆர்வமூட்டி வந்தார்கள். எனவே நாமும் அந்த சுன்னத்தான துஆக்களை அவ்வப்போது தொடர்ந்து ஓதி வந்தால் இன்ஷா அல்லாஹ் நம்முடைய உள்ளங்களில் நூர் என்ற பிரகாசம் உண்டாகி மன அமைதியை அடையலாம். மேலும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சுன்னத்தான வாழ்க்கையைப் பின்பற்றி வந்தால் ஹிதாயத் என்ற ஒளி அதிகமாகிக்கொண்டே போகும். எனவே, நம்மால் இயன்றவரை நம் வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் சுன்னத்துக்களைப் பின்பற்றி நடப்பதுடன் அந்தந்த நேரங்களில் ஓத வேண்டிய துஆக்களையும் ஓதி வருவது மிகவும் ஏற்றமானது.

- அபூயூஸுப்

பதிப்புரை

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

அல்ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீன் வஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலா ஸையிதினா முஹம்மதின் வ அலா ஆலிஹி வஸஹ்பிஹி அஜ்மஈன். எல்லாம் வல்ல அல்லாஹு தஆலாவின் மாபெரும் கிருபையின் காரணமாக நாங்கள் இதற்கு முன் பாபுல் ஜன்னா என்னும் ''சொர்க்கத்தின் வாசல்'' நூலையும், ''பிக்ஹின் அறிவுக் களஞ்சியம்'' என்ற நூலையும் வெளியிட்டதை வாசகர்கள் நன்கு அறிவீர்கள். அல்ஹம்துலில்லாஹ்! தற்பொழுது மூன்றாம் வெளியீடாக துஆவுல் வளாயிப் என்னும் இந்நூலை, வெளியிட வல்ல அல்லாஹ் அருள் புரிந்தமைக்கு நம்முடைய நன்றிக் கடனை நம்மால் நிறைவேற்ற முடியாது. எல்லாம் வல்ல அல்லாஹு

தஆலா மென்மேலும் பல சிறந்த நூற்களை வெளியிட அருள் புரிவானாக! ஆமீன். மேலும் இந்நூல் முஸ்லிம் சமுதாய மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என அல்லாஹ்வைக் கொண்டு ஆதரவு வைக்கிறோம். மனிதன் மறதியாளன், தவறிழைப்பவன். எனவே இந்நூலில் ஏதும் குறை காண்பவர்கள் எங்களுக்குத் தெரியப்படுத்தினால் இன்ஷா அல்லாஹ் அடுத்த பதிப்பில் திருத்திக் கொள்ள ஏதுவாக இருக்கும். எல்லாம் வல்ல அல்லாஹ் நம்முடைய அனைத்து முயற்சிகளையும் ஏற்றுக் கொள்வானாக! ஆமீன்.

- ஸலாமத் பதிப்பகம்

இந்நூல் பற்றிய சில விளக்கங்கள்

இந்நூலில் அன்றாடம் செயல்பட வேண்டிய சுன்னத்தான அமல்களின் விளக்கங்களையும், அந்தந்த நேரங்களில் ஓத வேண்டிய துஆக்களை பொருளுடனும் இடம் பெறச் செய்துள்ளோம். வாசகர்கள் இயன்றவரை இந்த துஆக்களை மனனம் செய்து கொண்டால் அவ்வப்போது ஓதுவதற்கு வசதியாக இருக்கும். மனனம் செய்ய முடியாதவர்கள் பார்த்தும் ஓதிக் கொள்ளலாம். அரபி மூலத்தை தமிழில் எழுதப்பட்டுள்ளதை அறிந்தவர்களிடம் உச்சரிப்புகளைக் கேட்டுத் தெரிந்து கொள்வது நல்லது. மேலும் ஓதத் தெரியாதவர்கள் அவ்வப்போது அதனுடைய பொருள்களை படித்துக் கொண்டாலும் நன்மையைப் பெற்றுக் கொள்ளலாம்.

1. ஆண்கள், பெண்கள் கடமையான குளிப்புள்ள சமயங்களிலும், பெண்கள் ஹைள், நிபாஸுடைய காலங்களிலும் இந்நூலிலுள்ள துஆக்களையும், அவ்ராதுகளையும் ஓதிக் கொள்ளலாம். மேலும் குர்ஆனில் வரக்கூடிய துஆக்களையும் ஓதிக் கொள்வதற்கும் மார்க்கத்தில் அனுமதியுண்டு. ஆனால் குர்ஆனை ஓதுவதற்கும், அதை சுமப்பதற்கும் - அனுமதி இல்லை.

2. துஆக்கள், திக்ர்கள், அவ்ராதுகள் ஓதும்பொழுது ஒளூவுடனிருப்பது சிறந்தது. ஆனால் ஒளூ இல்லாமலும் ஓதலாம்.

3. ஒளூவுடன் ஓர் இடத்தில் அமர்ந்து பயபக்தியுடன் அவ்ராதுகளையும், திக்ர்களையும் வழக்கமாக தொடர்ந்து ஓதிவந்தால் இன்ஷா அல்லாஹ் நிறைந்த பலனையடையலாம்.

4. காலையிலும், மாலையிலும் ஓதக்கூடிய துஆக்கள் அனைத்தையும் ஓத முடியாத நேரங்களில் சில துஆக்களை மட்டும் ஓதிக் கொள்ளலாம். மேலும் எவ்வளவு அதிகமாக ஓதுகிறோமோ அந்தளவு நன்மையை பெற்றுக் கொள்ளலாம்.

துஆ - பிரார்த்தனை

யா அல்லாஹ்! நாங்கள் மனிதர்கள், பாவம் செய்யும் தன்மையுடையவர்கள். நீயோ மாபெரும் கிருபையுள்ளவன். பாவங்களுக்கு மன்னிப்புக் கோருவதை நீ விரும்பக்கூடியவன். எனவே நாங்கள் செய்த அனைத்துப் பாவங்களையும் மன்னித்து கிருபை செய்வாயாக! நீ எங்கள் பாவங்களை மன்னிக்காவிட்டால் நாங்கள் வேறு யாரிடம் மன்னிப்புக் கோர முடியும்! யா அல்லாஹ்! எங்களுடைய பாவங்களையும், எங்கள் பெற்றோர்களின் பாவங்களையும், எங்களுடைய முன்னோர்களின் பாவங்களையும், முஸ்லிமான ஆண்கள், பெண்கள் அனைவருடைய பாவங்களையும் மன்னித்தருள்வாயாக! யா அல்லாஹ்! எங்களுக்கு முழுமையான ஈமானையும், யகீனென்ற உறுதியையும், தக்வா என்ற பயபக்தியையும், தவக்குல் என்ற பாரஞ்சாட்டுதலையும் தந்தருள்வாயாக! யா அல்லாஹ்! உன்னுடைய நேசர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வாழ்க்கை முறையை நாங்கள் முழுமையாக பின்பற்ற அருள் புரிவாயாக! யா அல்லாஹ்! நாங்கள் உள்ளச்சத்துடனும், பயபக்தியுடனும் தொழுகையை நிறைவேற்ற அருள் புரிவாயாக!

யா அல்லாஹ்! நாங்கள் மார்க்கக் கல்வியை மென்மேலும் கற்று அதன்படி அமல் செய்து மற்றவர்களுக்கும் எத்திவைக்க அருள் புரிவாயாக!

யாஅல்லாஹ்! நாங்கள் உன்னுடைய கலாம் ஷரீஃபாகிய திருக்குர்ஆனை தினந்தோறும் ஓதி அதன்படி நடப்பதற்கு அருள் புரிவாயாக! யா அல்லாஹ்! எங்களுக்கு உன்னை எல்லா நிலைகளிலும் தியானம் செய்யக்கூடிய நாவைத் தந்தருள்வாயாக!

யா அல்லாஹ்! கிருபையாளர்களுக்கெல்லாம் மாபெரும் கிருபையாளனே! எங்களுக்கு! உயர்ந்த குணங்களையும், சகிப்புத் தன்மையையும், பொறுமையையும், விட்டுக் கொடுக்கும் மனப் பக்குவத்தையும் தந்தருள்வாயாக! யாஅல்லாஹ்! நாங்கள் யார் யாருக்கு என்னென்ன கடமைகளை நிறைவேற்ற வேண்டுமோ அக்கடமைகளை சரியாக நிறைவேற்ற அருள் புரிவாயாக! யா அல்லாஹ்! நாங்கள் புறம் பேசுவதை விட்டும், பொறாமை கொள்வதை விட்டும், பொய் பேசுவதை விட்டும், இன்னும் பிறருக்கு மோசடி செய்வதை விட்டும் எங்களைக் காத்தருள்வாயாக! யா அல்லாஹ்! எங்களுக்கு இக்லாஸ் என்ற உளத் தூய்மையைத் தந்தருள்வாயாக! நாங்கள் எந்த அமல் செய்தாலும் பெருமைக் காகவோ, புகழுக்காகவோ, பதவிக்காகவோ செய்யாமல் உன் னுடைய திருப்பொருத்தத்திற்காக செய்வதற்கு எங்களுக்கு அருள் புரிவாயாக!

யா அல்லாஹ்! எங்கள் உள்ளங்களில் உம்மத்துடைய கவலையை தந்தருள்வாயாக! யா அல்லாஹ்! ஸஹாபா பெருமக்கள் உன்னுடைய பாதையில் தியாகம் செய்ததைப் போன்று நாங்களும் தியாகம் செய்ய அருள் புரிவாயாக! யா அல்லாஹ்! எங்கள் வாழ்க்கையில் ஹலாலான முறையில் அபிவிருத்தியைத் தந்தருள் வாயாக! எங்களுக்கு ஹராமான வழியில் பொருள்களைக் கிடைக்கச் செய்து விடாதே! யா அல்லாஹ்! மவுத்துக்குப் பிறகுள்ள வாழ்க்கை யில் ஏற்படும் கஷ்டங்களை விட்டும் எங்களைப் பாதுகாத்தருள் வாயாக! யா அல்லாஹ்! எங்களுடைய அனைத்து முயற்சிகளையும் நன்மை தரக்கூடியதாக ஆக்கி வைப்பாயாக! யா அல்லாஹ்! இந்த துஆவை உன்னுடைய ஹபீப் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் துஆ பரக்கத்தைக் கொண்டும், உன்னுடைய கிருபை-ரஹ்மத்தைக் கொண்டும் ஏற்றுக் கொள்வாயாக!

மனநிம்மதி தேவையா? நான்கு வகையான திக்ர்கள்

1. குர்ஆன் ஓதுதல், 2. காலை-மாலை தஸ்பீஹாத்துகளை முறையோடு பூர்த்தி செய்தல், 3. அந்தந்த நேரங்களில் ஓத வேண்டிய மஸ்னூன் துஆக்களை ஓதுதல், 4. சிறிது நேரம் தனிமையில் அமர்ந்து, சென்றுபோன வாழ்க்கையைப் பற்றியும், மவுத்தைப் பற்றியும், கப்ருடைய வாழ்க்கையைப் பற்றியும் சிந்தித்தல். மேற்கண்ட நான்கு விஷயங்களையும் தினந்தோறும் பின்பற்ற வேண்டும்.

எந்த அளவு அதிகமாக திக்ர் செய்து வருவோமோ அந்த அளவு உள்ளத்தில் நிம்மதியும், மகிழ்ச்சியும் கிடைக்கும். திக்ர்களை இடைவிடாது செய்து வந்தால் அந்த இன்பத்தைக் காண முடியும்.

மனதை நாசமாக்கும் காரியங்கள்

1. நாவினால் ஏற்படும் தீமைகள்

A.பொய் பேசுதல், B.புறம் பேசுதல், C.பிறரைத்திட்டுதல் D.கோள் சொல்லுதல், E.வீண்பேச்சு பேசுதல், F.சினிமா பாடல்கள் படித்தல், G.நாவல்கள், சினிமா பத்திரிகைகள் படித்தல்.

2. கண்களினால் ஏற்படும் தீமைகள்

A. அன்னியப் பெண்களைப் பார்த்தல்.

B. சினிமா, டெலிவிஷன் பார்த்தல்.

C. வாலிப ஆண்களை இச்சையுடன் பார்த்தல்.

3. காதுகளினால் ஏற்படும் தீமைகள்

நாவினால் பேசக் கூடாத அனைத்துக் காரியங்களையும் காதுகளினால் கேட்பதைக் கொண்டு காதுகளின் தீமை உண்டாகும். மேற்கண்ட தீமைகளைத் தொடர்ந்து செய்வதின் காரணமாக உள்ளங்கெட்டு அடிக்கடி திடுக்கமும், பயமும் உண்டாகி மன சஞ்சலமேற்படும்.

பொருளடக்கம்

ஸலாமத் வழங்கும் வளாயிப் நூல்கள்

அஹ்ஸனுல் வளாயிப் 50.00

(அன்றாடம் ஓதக்கூடிய ஸூராக்கள், மன்ஜில், 40 ஸலவாத்துகள், சுன்னத்தான துஆக்கள், அதனுடைய சிறப்புகள் – மொழிபெயர்ப்புடன்)

துஆவுல் வளாயிப் 40.00

(பெரிய மஸ்னூன் துஆக்கள்)

(தினசரி ஓத வேண்டிய சுன்னத்தான துஆக்கள் அரபி – தமிழில் ஓதும் முறை மொழி பெயர்ப்புடன் மற்றும் தினந்தோறும் செயல்படும் சுன்னத்தான அமல்களின் முறைகள்)

மின்ஹாஜுல் வளாயிப் 25.00

(அற்புத துஆக்கள்)

(தினசரி, வாராந்திரம், மாதாந்திரம், வருடந்திரம், ஓதக்கூடிய துஆக்கள் – மொழிபெயர்ப்புடன்)

அல்வளாயிஃபுல் முபாரகாத் 10.00

(மன்ஜில், ஸூரா யாஸீன், ரஹ்மான், வாகிஆ, முல்க், ஸஜ்தா)

ஸிராஜுல் வளாயிப் 5.00

(பாக்கெட் சைஸ்)

(ஸூரா யாஸீன், வாகிஆ, முல்க், மன்ஜில், மற்றும் சுன்னத்தான துஆக்கள்)

தூக்கத்திலிருந்து எழும்போது ஓதும் துஆ

اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِىْ اَحْيَانَا بَعْدَ مَا اَمَاتَنَا وَاِلَيْهِ النُّشُوْرُ

அல்ஹம்து லில்லாஹில்லதீ அஹ்யானா பஃதமா அமாத்தனா வஇலைஹின்னுஷூர்.

பொருள் :- புகழனைத்தும் அல்லாஹ்வுக்கே! அவனே நாம் மரணித்த பிறகு உயிர்ப்பித்தான். இன்னும் நாம் அவனளவிலேயே செல்லக்கூடியவர்களாக இருக்கிறோம். ('மரணித்த பிறகு' என்பது தூங்கிய பிறகு)

தஹஜ்ஜுத் தொழும் முன் ஓதும் துஆ

اَللّٰهُمَّ لَكَ الْحَمْدُ اَنْتَ قَيِّمُ السَّمٰوٰتِ وَالْاَرْضِ وَمَنْ فِيْهِنَّ وَلَكَ الْحَمْدُ اَنْتَ نُوْرُ السَّمٰوٰتِ وَالْاَرْضِ وَمَنْ فِيْهِنَّ وَلَكَ الْحَمْدُ اَنْتَ مَلِكُ السَّمٰوٰتِ وَالْاَرْضِ وَمَنْ فِيْهِنَّ وَلَكَ الْحَمْدُ اَنْتَ الْحَقُّ وَ لِقَآئُكَ حَقٌّ وَّ قَوْلُكَ حَقٌّ وَّالْجَنَّةُ حَقٌّ وَّالنَّارُ حَقٌّ

وَالنَّبِيُّوْنَ حَقٌّ وَّمُحَمَّدٌ حَقٌّ وَّالسَّاعَةُ حَقٌّ

اَللّٰهُمَّ لَكَ اَسْلَمْتُ وَبِكَ اٰمَنْتُ وَعَلَيْكَ تَوَكَّلْتُ

وَاِلَيْكَ اَنَبْتُ وَبِكَ خَاصَمْتُ وَاِلَيْكَ حَاكَمْتُ

فَاغْفِرْ لِيْ مَاقَدَّمْتُ وَمَا اَخَّرْتُ وَمَا اَسْرَرْتُ

وَمَا اَعْلَنْتُ وَمَا اَنْتَ اَعْلَمُ بِهٖ مِنِّيْ اَنْتَ الْمُقَدِّمُ

وَاَنْتَ الْمُؤَخِّرُ لَآاِلٰهَ اِلَّا اَنْتَ وَلَا اِلٰهَ غَيْرُكَ

அல்லாஹும்ம வ(க்)கல்ஹம்து அன்த்தகய்யி முஸஸமா வாத்தி வல்அர்ளி வமன்பீFஹின்ன வவ(க்)கல்ஹம்து அன்த்த நூருஸ்ஸமாவாத்தி வல் அர்ளி வமன்Fபீஹின்ன வல(க்)கல் ஹம்து அன்த்த மலி(க்)குஸ் ஸமாவாத்தி வல்அர்ளி வமன்Fபீ ஹின்ன வல(க்)கல் ஹம்து அன்த்தல் ஹக்கு வலி(க்)காவு(க்)க ஹக்குன் வல் ஜன்ன(த்)து ஹக்குன் வ கவ்லுக்க ஹக்குன் வன்னாரு ஹக்குன் வன்னபிய் யூன ஹக்குன் வ முஹம்மதுன் ஹக்குன் வஸ்ஸாஅ(த்)து ஹக்குன். அல்லாஹும்ம வ(க்)க அஸ்லம்த்து வபி(க்)க ஆமன்த்து வ அலைக்க(த்) தவக்கல்த்து வ இலைக்க அனப்த்து வபி(க்) க ஹாஸம்த்து வஇலைக்க ஹாகம்த்து FபஃஃFபிர்லீ மாகத் தம்த்து வமா அக்கர்த்து வமா அஸ்ரர்த்து வமா அஃஃலன்த்து வமா அன்த்த அஃஃலமு பிஹீ மின்னீ அன்த்தல் முகத்திமு வஅன்த்தல் முஅக்கிரு லா இலாஹ இல்லா அன்த்த வலா இலாஹ கைரு(க்)க!

பொருள் :- யா அல்லாஹ்! உனக்கே சகல புகழுரைகளும்! நீயே வானங்களையும், பூமியையும் அவற்றில் உள்ளவற்றையும் நிலைநிறுத்தி வைப்பவன். மேலும், உனக்கே சகல புகழுரைகளும்! வானங்களுக்கும், பூமிக்கும் அவற்றிலுள்ளவற்றிற்கும் நீயே ஜோதியாகவும், அதிபதியாகவும் இருக்கின்றாய். நீயே உண்மை; உன் வாக்குறுதி உண்மை; உன் தரிசனம் உண்மை; உன் சொல் உண்மை; சுவர்க்கம் உண்மை; நரகம் உண்மை; இன்னும் நபிமார்களும் உண்மை; முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் உண்மை; கியாமத் நாளும் உண்மை.

எங்கள் இறைவனே! நான் உன்னை வழிபட்டேன். உன்னைக் கொண்டு ஈமான் கொண்டேன். உன் மீது நம்பிக்கை வைத்தேன். உன்னளவில் மீண்டேன். உன்னைக் கொண்டு வாழக்காடினேன். உன்னையே நீதிபதி யாக்குகிறேன். எனவே எனக்கு நான் முன் செய்தவை, பின் செய்தவை, மறைவாக செய்தவை, பகிரங்கமாக செய்தவை, என் செயல்களில் நீ அறிந்திருக்கும் மற்ற எல்லாப் பாவங்களையும் மன்னித்து விடுவாயாக. நீயே இறைவன்! வணக்கத்திற்குரிய இறைவன். உன்னைத் தவிர வேறு நாயன் இல்லை.

பிறகு வானத்தின் பக்கம் முகத்தைத் திருப்பி ஸூராஆல இம்ரானில் (3-ஆம் ஸூரா)

இன்ன Fபீகல்கிஸ் ஸமாவாத்தியிலிருந்து ஸூரா கடைசி வரை ஓதவும். பிறகு அல்லாஹு அக்பர் பத்து தடவையும், அல்ஹம்துலில்லாஹ் பத்து தடவையும், ஸுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி பத்து தடவையும், ஸுப்ஹானல் மலிக்குல் குத்தூஸ் பத்து தடவையும், அஸ்தஃபிருல்லாஹ் பத்து தடவையும் ஓதவும். பிறகு கீழ்க்கண்ட துஆவை பத்து தடவை ஓதவும்.

اَللّٰهُمَّ اِنِّيْ اَعُوْذُ بِكَ مِنْ ضِيْقِ الدُّنْيَا

وَضِيْقِ يَوْمِ الْقِيٰمَةِ

அல்லாஹும்ம இன்னீ அஊது பி(க்)க மின் ளீக் கித்துன்யா வளீக்கி யவ்மில் கியாமா.

பொருள் :- அல்லாஹ்வே! இம்மை மறுமையின் துன்பத்திலிருந்து உன்னிடத்தில் பாதுகாப்புத் தேடுகிறேன்.

மேற்கண்டவற்றை ஓதி விட்டு தொழுகையை ஆரம்பிக்கவும்.

ஸுப்ஹு தொழுகைக்காக வெளியாகும்பொழுது ஓதும் துஆ

اَللّٰهُمَّ اجْعَلْ فِيْ قَلْبِيْ نُوْرًا وَّفِيْ بَصَرِيْ نُوْرًا

وَّفِيْ سَمْعِيْ نُوْرًا وَّعَنْ يَّمِيْنِيْ نُوْرًا وَّعَنْ

شِمَالِيْ نُوْرًا وَّاجْعَلْ لِيْ نُوْرًا وَّفِيْ عَصَبِيْ

نُوْرًا وَّفِيْ لَحْمِيْ نُوْرًا وَّفِيْ دَمِيْ نُوْرًا وَّفِيْ

شَعْرِيْ نُوْرًا وَّفِيْ بَشَرِيْ نُوْرًا وَّفِيْ لِسَانِيْ نُوْرًا

وَّاجْعَلْ فِيْ نَفْسِيْ نُوْرًا وَّاَعْظِمْ لِيْ نُوْرًا وَّ
اجْعَلْنِيْ نُوْرًا وَّاجْعَلْ مِنْ خَلْفِيْ نُوْرًا وَّمِنْ
اَمَامِيْ نُوْرًا وَّاجْعَلْ مِنْ فَوْقِيْ نُوْرًا وَّمِنْ
تَحْتِيْ نُوْرًا اَللّٰهُمَّ اَعْطِنِيْ نُوْرًا ط

அல்லா ஹும்மஜ்அல் Fபீகல்பீ நூரன் வFபீ பஸரீ நூரன் வFபீ ஸம்ஈ நூரன் வஅன்ய்யமீனீ நூரன் வஅன்ஷிமாலி நூரன் வஜ்அல்லீ நூரன் வFபீ அஸபீ நூரன் வFபீ லஹ்மீ நூரன் வFபீ தமீ நூரன் வFபீ ஷஅரீ நூரன் வFபீ பஷரீ நூரன் வFபீ லிஸாணீ நூரன் வஜ்அல்Fபீ நப்ஸி நூரன் வஅஃழிம்லி நூரன் வஜ் அல்னீ நூரன் வஜ் அல்மின் கல்பீ நூரன் வமின் அமாமீ நூரன் வஜ்அல் மின் Fபவ்கீ நூரன் வமின் தஹ்த்தீ நூரன் அல்லாஹும்ம அஃத்தினீ நூரா

பொருள் :- அல்லாஹ்வே! என்னுடைய இதயத்தில் ஒளியை உண்டாக்கு. இன்னும் என்னுடைய பார்வையில் ஒளியை உண்டாக்கு. இன்னும் என்னுடைய கேள்வியில் ஒளியை உண்டாக்கு. இன்னும் என்னுடைய வலதில் ஒளியை உண்டாக்கு. இன்னும் என்னுடைய இடதில் ஒளியை உண்டாக்கு. இன்னும் என்னையே ஒளியாக்கு. இன்னும் என்னுடைய வயிற்றில் ஒளியை உண்டாக்கு. இன்னும் என்னுடைய மாமிசத்தில் ஒளியை உண்டாக்கு. இன்னும் என்னுடைய முடியில் ஒளியை உண்டாக்கு. இன்னும் என்னுடைய தோலில் ஒளியை உண்டாக்கு. இன்னும் என்னுடைய நாவில் ஒளியை உண்டாக்கு. இன்னும் என்னுடைய நப்ஸில் ஒளியை உண்டாக்கு. இன்னும் எனக்காக அதிகமான ஒளியை உண்டாக்கு. இன்னும் என்னையே ஒளிமயமாக்குவாயாக!

இன்னும் எனக்குப் பின்னால் ஒளிமயமாக்கி வை. இன்னும் எனக்கு முன்னால் ஒளிமயமாக்கி வை. இன்னும் எனக்கு கீழே ஒளியையுண்டாக்கி வை. இன்னும் எனக்கு மேலே ஒளியையுண்டாக்கி வை. இன்னும் எனக்கு ஒளியை அளிப்பாயாக!

காலையை அடைந்ததும் ஓத வேண்டிய துஆக்கள்

இந்த துஆவைக் காலையில் ஒரு தடவை ஓதவும்

أَصْبَحْنَا وَأَصْبَحَ الْمُلْكُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۚ
اَللّٰهُمَّ اِنِّيْ اَسْئَلُكَ خَيْرَ هٰذَا الْيَوْمِ فَتْحَهٗ
وَنَصْرَهٗ وَنُوْرَهٗ وَبَرَكَتَهٗ وَهُدَاهُ وَاَعُوْذُبِكَ
مِنْ شَرِّ مَا فِيْهِ وَشَرِّ مَا بَعْدَهٗ ط

அஸ்பஹ்னா வஅஸ்பஹல் முல்க்கு லில்லாஹி ரப்பில் ஆலமீன். அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுக்க கைர ஹாதல் யவம Fபத்ஹஹூ வநஸ்ரஹூ வ நூரஹூ வ பரக்கதஹூ வஹுதாஹூ வ அஊதுபி(க்)க மின் ஷர்ரி மாஃபீஹி வஷர்ரி மாபஃதஹூ.

பொருள்:- நாங்கள் காலையை அடைந்தோம். அனைத்து ஆட்சியும் அகிலத்தார்களுடைய இரட்சகனான அல்லாஹ்வுக்கே உரியது. அல்லாஹ்வே! இந்த நாளின் வெற்றியையும், உதவியையும், அபிவிருத்தியையும் இன்னும் நேர்வழியையும் உன்னிடத்தில் வேண்டுகிறேன். இன்னும் அதன் தீங்கை விட்டும் அதற்குப் பிறகு ஏற்படும் தீங்கை விட்டும் உன்னிடத்தில் பாதுகாப்பு தேடுகிறேன்.

காலை நேரத்தில் கீழ்க்கண்ட துஆவையும் ஒரு தடவை ஓதலாம்

اَللّٰهُمَّ بِكَ أَصْبَحْنَا وَبِكَ أَمْسَيْنَا وَبِكَ
نَحْيَ وَبِكَ نَمُوْتُ وَإِلَيْكَ الْمَصِيْرُ ۞

அல்லாஹும்ம பி(க்)க அஸ்பஹ்னா வபி(க்)க அம்ஸைனா வபி(க்)க நஹ்யா வபி(க்)க நமூத்து வஇலைக்கல் மஸீர்.

பொருள் :- அல்லாஹ்வே! உன்னுடைய சக்தியைக்கொண்டு காலை நேரத்தை அடைந்தோம். இன்னும் உன்னுடைய சக்தியைக் கொண்டே மாலை நேரத்தை அடைந்தோம். இன்னும் உன்னுடைய சக்தியைக் கொண்டே ஜீவிக்கிறோம். உன்னுடைய சக்தியைக் கொண்டே மரணமாகிறோம். நாங்கள் உன்னிடமே மீளக் கூடியவர்களாக இருக்கிறோம்.

கீழ்க்கண்ட துஆவை காலையிலும் மாலையிலும் ஒரு தடவை ஓதவும்

اَللّٰهُمَّ مَا اَصْبَحَ بِيْ مِنْ نِعْمَةٍ اَوْ بِاَحَدٍ

مِّنْ خَلْقِكَ فَمِنْكَ وَحْدَكَ لَاشَرِيْكَ لَكَ

فَلَكَ الْحَمْدُ وَلَكَ الشُّكْرُ

அல்லாஹும்ம மாஅஸ்பஹ்பீ மின் னிஃமதின் அவ்பி அஹதின் மின் கல்கிக்க Fபமின்க்க வஹ்த(க்)க லாஷரீக்கலக Fபலகல் ஹம்து வலகஷ்ஷுக்ரு.

பொருள் :- அல்லாஹ்வே! காலை நேரத்தில் என் மீதோ அல்லது வேறு படைப்பினங்கள் மீதோ எந்த அருட்கொடைகள் உள்ளதோ அவை உன்னிடமிருந்து உள்ளவை. நீ தனித்தவன். உனக்கு இணை இல்லை. புகழனைத்தும் உனக்கே உரியது. இன்னும் நன்றி செலுத்துதலும் உனக்கே உரியது.

சிறப்பு :- எவர் இந்த துஆவை காலையில் ஓதுவாரோ அவர் மீது அல்லாஹ் அளித்துள்ள அன்றைய தினத்தின் அருட்கொடைகளுக்கு அவர் நன்றி செலுத்தியவராவா ரென்றும், எவர் மாலையில் இதை ஓதுவாரோ அவர் அன்றைய இரவு அவர் மீது அல்லாஹ் அளித்துள்ள அருட்கொடைகளுக்கு நன்றி செலுத்தியவராவாரென்றும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அருளினார்கள்.

குறிப்பு :- இந்த துஆவை மாலையில் ஓதும் சமயம் அஸ்பஹ்பீ என்ற இடத்தில் அம்ஸாபீ என்று ஓதவும்.

ஸுப்ஹு தொழுகைக்குப் பிறகும் மக்ரிப் தொழுகைக்குப் பிறகும் ஸலாம் கொடுத்தவுடன்

அத்தஹிய்யாத்து இருப்பில் அமர்ந்தவாறு யாருடனும் பேசாமல் கீழ்க்கண்ட கலிமாவை பத்து தடவைகள் ஓதவும்.

لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَاشَرِيْكَ لَهٗ لَهُ الْمُلْكُ
وَلَهُ الْحَمْدُ بِيَدِهِ الْخَيْرُ يُحْيِيْ وَيُمِيْتُ وَهُوَ
عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ

லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹூ லாஷரீக்கலஹூ லஹுல் முல்கு வலஹுல் ஹம்து பியதிஹில் கைரு யுஹ்யீ வயுமீ(த்)து வஹுவ அலாகுல்லி ஷைஇன் கதீர்

பொருள் :- வணக்கத்திற்குரியவன் அல்லாஹு தஆலாவைத் தவிர வேறு யாருமில்லை. அவன் தனித்தவன். அவனுக்கு இணை இல்லை. ஆட்சி அவனுக்கு உரியது. புகழனைத்தும் அவனுக்கே. இன்னும் அவன் ஒவ்வொரு வஸ்துவின் மீதும் சக்தியுடையவன். அவனே உயிர்ப்பிக்கிறான். அவனே மரணிக்கச் செய்கிறான்.

சிறப்பு :- மேலே குறிப்பிட்டுள்ளபடி. இந்தக் கலிமாவை ஓதியவருக்கு ஒவ்வொரு தடவைக்கும் ஓதினதற்குப் பகரமாக பத்து பாவங்கள் மன்னிக்கப்பட்டு பத்து நன்மைகளும் எழுதப்படுகின்றன.

மேலும் ஒவ்வொரு கெட்ட காரியத்திலிருந்தும், இன்னும் சபிக்கப்பட்ட ஷைத்தானின் தீங்கிலிருந்தும் பாதுகாக்கப்படுவார். இந்த திக்ரை ஓதியதின் காரணமாக மற்றவர்களை விட இவர் உயர்ந்து விடுகிறார். மேலும் காலை நேரத்தில் மேற்கண்ட கலிமாவை நூறு தடவைகள் ஓதிவந்தால் நிறைய நன்மைகள் அடையலாம்.

ஸுப்ஹு தொழுகைக்குப் பிறகும் மக்ரிப் தொழுகைக்குப் பிறகும் யாருடனும் பேசாமல் கீழ்க்கண்ட துஆவை ஏழு தடவைகள் ஓதவும்.

اَللّٰهُمَّ اَجِرْنِيْ مِنَ النَّارِ

அல்லாஹும்ம அஜிர்னீ மினன்னார்.

பொருள் :- அல்லாஹ்வே! என்னை நரக நெருப்பிலிருந்து பாதுகாப்பாயாக!

சிறப்பு :- இந்த துஆவை மக்ரிப் தொழுகைக்குப் பிறகு மேலே குறிப்பிட்டுள்ளபடி ஓதியவருக்கு அன்றிரவு மரணம் சம்பவித்தால் அவர் நரகத்தை விட்டும் பாதுகாக்கப்படுவார். இவ்வாறு ஸுப்ஹு தொழுகைக்குப் பிறகு ஓதியவருக்கு அன்று பகல் மரணம் சம்பவித்தாலும் அவர் நரகத்தை விட்டும் பாதுகாக்கப்படுவார்.

கீழ்க்கண்ட துஆவை காலையிலும் மாலையிலும் மும்மூன்று தடவை ஓதவும்

بِسْمِ اللّٰهِ الَّذِيْ لَا يَضُرُّ مَعَ اسْمِهٖ شَيْءٌ
فِي الْاَرْضِ وَلَا فِي السَّمَآءِ وَهُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ

பிஸ்மில்லா ஹில்லதீ லாயளுர்ரு மஅஸ்மிஹீ ஷைஉன் Fபில் அர்ளி வலா Fபிஸ்ஸமாஇ வஹுவஸ்ஸமீஉல் அளீம்.

பொருள்:- அல்லாஹ்வின் திருநாமத்தைக்கொண்டு ஆரம்பம் செய்கிறேன். அவனுடைய திருநாமத்துடன் வானத்திலும் பூமியிலுமுள்ள எந்த பொருளும் தீங்கு விளைவிக்காது. இன்னும் அவன் கேட்கக்கூடியவனும் பார்க்கக்கூடியவனுமாவான்.

சிறப்பு :- நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றதாக ஹஸ்ரத் உதுமான் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: "எவரொருவர் மேற்கண்ட துஆவை காலையிலும் மாலையிலும் மும்மூன்று முறை ஓதுவாரோ அவரை எந்த வஸ்துவும் எவ்வித சங்கடமும் செய்யாது." மேலும் காலையில் மூன்று முறை ஓதி வந்தால் மாலை வரையிலும், மாலையில் மூன்று முறை ஓதி வந்தால் காலை வரையிலும் எந்த தீங்கும் விளையாது என்ற கருத்தும் ஹதீஸில் காணப்படுகிறது.

காலையிலும் மாலையிலும் கீழ்க்கண்ட துஆவை மும்மூன்று தடவை ஓதவும்

اَعُوْذُ بِكَلِمَاتِ اللّٰهِ التَّآمَّاتِ مِنْ شَرِّ مَا خَلَقَ ط

அஊது பிகலிமாத்தில்லாஹித் தாம்மாத்தி மின்ஷர்ரி மாகலக்.

பொருள் :- எல்லா விதமான படைப்புகளின் தீங்கை விட்டும் அல்லாஹ்வின் திருவாக்கியங்களின் சக்தியைக் கொண்டு பாதுகாவல் தேடுகிறேன்.

சிறப்பு :- காலையிலும் மாலையிலும் இந்த துஆவை மூன்று தடவைகள் ஓதி வந்தால் பாம்பு, தேள் மற்றும் விஷ ஜந்துகளின் தீங்கை விட்டும் பாதுகாப்பு கிடைக்கும்.

கீழ்க்கண்ட துஆவை காலையிலும் மாலையிலும் மும்மூன்று தடவை ஓதவும்

اَعُوْذُ بِاللّٰهِ السَّمِيْعِ الْعَلِيْمِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيْمِ

அஊது பில்லாஹிஸ் ஸமீ இல் அளீமி மினஷ் ஷைத்தானிர்ரஜீம்.

பொருள் :- எல்லாவற்றையும் பார்ப்பவனும் கேட்பவனுமான அல்லாஹ்விடம் சபிக்கப்பட்ட ஷைத்தானிடமிருந்து பாதுகாப்புத் தேடுகிறேன்.

சிறப்பு :- இந்த துஆவை தொடர்ந்து ஓதுவதினால் பல நன்மைகளுண்டு. மேற்கண்ட துஆவை ஓதின பிறகு கீழ்க்கண்ட ஆயத்துகளை காலையிலும் மாலையிலும் ஓதவும்.

هُوَ اللّٰهُ الَّذِيْ لَآ اِلٰهَ اِلَّا هُوَ ۚ عَالِمُ الْغَيْبِ
وَالشَّهَادَةِ هُوَ الرَّحْمٰنُ الرَّحِيْمُ هُوَ اللّٰهُ الَّذِيْ
لَآ اِلٰهَ اِلَّا هُوَ ۚ اَلْمَلِكُ الْقُدُّوْسُ السَّلَامُ
الْمُؤْمِنُ الْمُهَيْمِنُ الْعَزِيْزُ الْجَبَّارُ الْمُتَكَبِّرُ ۗ

سُبْحٰنَ اللّٰهِ عَمَّا يُشْرِكُوْنَ ۞ هُوَ اللّٰهُ الْخَالِقُ

الْبَارِئُ الْمُصَوِّرُ لَهُ الْاَسْمَآءُ الْحُسْنٰى ۗ يُسَبِّحُ

لَهٗ مَا فِى السَّمٰوٰتِ وَالْاَرْضِ وَهُوَ الْعَزِيْزُ

الْحَكِيْمُ ۞

பொருள் :- அந்த அல்லாஹ்வைத் தவிர வேறொரு நாயனில்லை. (அவன்) இரகசியத்தையும் பரகசியத்தையும் நன்கறிவான். அவன் அளவற்ற அருளாளன்; நிகரற்ற அன்புடையோன். அந்த அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறொருவனுமில்லை. அவன்தான் (மெய்யான) அரசன்; பரிசுத்தமானவன்; சாந்தியும் சமாதானமும் அளிப்பவன்; அபயமளிப்பவன்; இரட்சகன்; (யாவரையும்) மிகைத்தவன்; அடக்கி ஆளுபவன்; பெருமைக்குரியவன். இவர்கள் கூறும் இணை(துணை)களை விட்டு அல்லாஹ் மிகப் பரிசுத்தமானவன். அந்த அல்லாஹ்தான் சிருஷ்டிகர்த்தா. (அவனே சிருஷ்டிகளை) ஒழுங்கு செய்வோன்; (அவனே சிருஷ்டிகளின்) உருவத்தை அமைப்போன். அவனுக்கு வெகு அழகான பல திருநாமங்களிருக்கின்றன. வானங்களிலும், பூமியிலும் உள்ளவை யாவும் அவனையே துதி செய்கின்றன. அவன் யாவரையும் மிகைத்தோன், ஞானமுடையோன்.

சிறப்பு :- மேற்கண்ட துஆவை ஓதின பிறகு இந்த ஆயத்துக்களையும் காலையில் ஓதியவருக்கு துஆ செய்வதற்காக அல்லாஹு தஆலா எழுபதினாயிரம் மலக்குகளை நியமிக்கிறான். அந்த மலக்குகள் அவருக்கு மாலை வரை ரஹ்மத்துகளை அனுப்பிக்கொண்டே இருக்கிறார்கள். அவர் அன்றைய தினம் மரணித்தால் ஷஹீதுடைய அந்தஸ்தை அடைவார்.

இவ்வாறே மாலையில் ஓதியவர் காலை வரை இந்த சிறப்புகளை அடைவார். அன்றைய இரவு அவர் மரணமடைந்தால் ஷஹீதுடைய அந்தஸ்தை அடைவார்.

இந்த ஹதீஸை அறிவிப்பவர் : மஃகல் இப்னு யஸார் (ரலி)

பிறகு கீழ்க்காணும் ஆயத்தை ஓதவும்

حٰمٓ ۚ تَنْزِيْلُ الْكِتٰبِ مِنَ اللّٰهِ الْعَزِيْزِ
الْعَلِيْمِۙ غَافِرِ الذَّنْۢبِ وَقَابِلِ التَّوْبِ شَدِيْدِ
الْعِقَابِۙ ذِى الطَّوْلِ لَاۤ اِلٰهَ اِلَّا هُوَ اِلَيْهِ
الْمَصِيْرُ

பொருள் :- யாவையும் மிகைத்தோனும் நன்கறிந்தோனுமாகிய அல்லாஹ்வால் அருளப்பட்ட வேதம். அவன் பாவங்களை மன்னிப்பவன். பாவ மீட்சியை ஏற்றுக்கொள்பவன். (மனமுரண்டாக குற்றம் புரியும் பாவிகளை) வேதனை செய்வதிலும் கடினமானவன். நல்லவர்களின் மீது அருள் புரிபவன். அவனைத் தவிர (வணக்கத்திற்குரியவன்) வேறு நாயன் இல்லை. அவனிடமே யாவரும் விசாரணைக்காக) செல்ல வேண்டியதிருக்கிறது.

சிறப்பு :- மேற்கண்ட ஆயத்துக்களையும் கீழ்க்காணும் 'ஆயத்துல் குர்ஸீ' என்னும் ஆயத்தையும் காலையில் ஓதியவருக்கு மாலை வரை எவ்வித ஆபத்துகளும் ஏற்படாதென்றும், இவ்வாறே மாலையில் ஓதியவருக்கு

காலை வரை எவ்வித ஆபத்துகளும் ஏற்படாதென்றும், நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அருளியதாக அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள் இந்த ஸூராவின் சிறப்புக்கள் அனேகமுள்ளன.

பிறகு இதில் காணும் ஆயத்துல் குர்ஸீயை ஓதவும்

اَللّٰهُ لَآ اِلٰهَ اِلَّا هُوَ الْحَيُّ الْقَيُّوْمُ ۚ لَا تَاْخُذُهٗ سِنَةٌ
وَّلَا نَوْمٌ ۗ لَهٗ مَا فِي السَّمٰوٰتِ وَمَا فِي الْاَرْضِ ۗ مَنْ
ذَا الَّذِيْ يَشْفَعُ عِنْدَهٗٓ اِلَّا بِاِذْنِهٖ ۗ يَعْلَمُ مَا بَيْنَ
اَيْدِيْهِمْ وَمَا خَلْفَهُمْ ۚ وَلَا يُحِيْطُوْنَ بِشَيْءٍ مِّنْ
عِلْمِهٖٓ اِلَّا بِمَا شَآءَ ۚ وَسِعَ كُرْسِيُّهُ السَّمٰوٰتِ
وَالْاَرْضَ ۚ وَلَا يَـُٔوْدُهٗ حِفْظُهُمَا ۚ وَهُوَ الْعَلِيُّ الْعَظِيْمُ

பொருள் :- அல்லாஹ், அவனைத் தவிர வேறு நாயனில்லை. (அவன்) நித்திய ஜீவன், நிலையானவன். அவனை நித்திரையும் உறக்கமும் தொடாது. வானங்களிலும் பூமியிலுமுள்ள யாவும் அவனுக்கே உரியது. அவனுடைய அனுமதியின்றி அவனிடத்தில் யார்தான் சிபாரிசு செய்ய முடியும்? அவர்களுக்கு எதிரில் உள்ளவற்றையும் புறம்பாக உள்ளவற்றையும் அவன் நன்கறிவான். அவனுடைய நாட்டமின்றி அவனுக்குத் தெரிந்தவற்றிலிருந்து

யாதொன்றையும் அறிந்து கொள்ள முடியாது. அவனுடைய அரசாட்சி வானங்களிலும் பூமியிலும் பரவி இருக்கிறது. அவ்விரண்டையும் காப்பது அவனுக்கு சிரமமானதல்ல. இன்னும் அவன் மிகவும் உயர்ந்தவன், மகத்தானவன்.

காலையிலும் மாலையிலும் கீழ்க்கண்ட துஆவை மும்மூன்று தடவை ஓதவும்

رَضِيْتُ بِاللّٰهِ رَبًّا وَّبِالْاِسْلَامِ دِيْنًا وَّبِمُحَمَّدٍ نَبِيًّا ؕ

ரளீத்து பில்லாஹி ரப்பன் வபில் இஸ்லாமி தீனன் வபி முஹம்மதின் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) நபிய்யா.

பொருள் :- அல்லாஹ்வை எங்களுடைய இரட்சகனாகவும், இஸ்லாத்தை எங்கள் மார்க்கமாகவும், முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை எங்களின் நபியாகவும் நான் பொருந்திக் கொண்டேன்.

சிறப்பு :- இந்த துஆவை காலையிலும் மாலையிலும் மும்மூன்று தடவைகள் ஓதி வந்தால் மறுமை நாளில் அல்லாஹ்வின் பொருத்தமும் சந்தோஷமும் கிடைக்கும்.

காலையிலும் மாலையிலும் கீழ்க்காணும் ஆயத்துக்களை ஒரு தடவை ஓதவும்

فَسُبْحَانَ اللّٰهِ حِيْنَ تُمْسُوْنَ وَحِيْنَ تُصْبِحُوْنَ

وَلَهُ الْحَمْدُ فِي السَّمٰوَاتِ وَالْأَرْضِ وَعَشِيًّا وَّ
حِيْنَ تُظْهِرُوْنَ ۝ يُخْرِجُ الْحَيَّ مِنَ الْمَيِّتِ وَيُخْرِجُ
الْمَيِّتَ مِنَ الْحَيِّ وَيُحْيِ الْأَرْضَ بَعْدَ مَوْتِهَا وَكَذٰلِكَ
تُخْرَجُوْنَ ۝

பொருள் :- காலையிலும் மாலையிலும் அல்லாஹ்வை துதி செய்யுங்கள். இன்னும் வானங்களிலும் பூமியிலும் புகழ் அனைத்தும் அவனுக்கே உரியது. இன்னும் ஜவாலுக்குப் பிறகும், ளுஹருடைய நேரத்திலும் புகழ் அனைத்தும் அவனுக்கே உரியது! மரணித்தவற்றிலிருந்து உயிருள்ளவற்றையும், உயிருள்ளவற்றிலிருந்து மரணித்தவற்றையும் அவனே வெளிப்படுத்துகிறான். இன்னும் இறந்து போன பூமியை அவனே செழிப்பாக்கி வைக்கிறான். இவ்வாறே நீங்களும் வெளியேற்றப்படுவீர்கள்.

சிறப்பு :- ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: எவரொருவர் மேற்கண்ட ஆயத்துகளை காலையில் ஓதுவாரோ அவர் வழக்கமாக ஓதி வரும் விர்துகளை ஓதத் தவறிவிட்டால், அந்த ஆயத்தை ஓதியதின் காரணமாக அனைத்து விர்துகளின் நன்மையையும், மாலையில் ஓதி வந்தால் அன்றைய மாலை ஓதத் தவறி விட்டவற்றின் நன்மைகளனைத்தையும் அடைந்து கொள்வார்.

اَللّٰهُمَّ اِنِّيْ اَعُوْذُ بِكَ مِنَ الْكُفْرِ وَالْفَقْرِ
اَللّٰهُمَّ اِنِّيْ اَعُوْذُ بِكَ مِنْ عَذَابِ الْقَبْرِ

لَآ اِلٰهَ اِلَّآ اَنْتَ

அல்லாஹும்ம இன்னீ அஊதுபி(க்)க மினல் குFப்ரி வல்Fபக்ரி அல்லாஹும்ம இன்னீ அஊது பி(க்)க மின் அதாபில் கப்ரி லாஇலாஹ இல்லா அன்த்த.

பொருள் :- அலலாஹ்வே! நிராகரிப்பைவிட்டும் ஏழ்மைத்தனத்தை விட்டும் உன்னிடத்தில் பாதுகாப்புத் தேடுகிறேன். அல்லாஹ்வே! கப்ருடைய வேதனையை விட்டும் உன்னிடத்தில் பாதுகாப்புத் தேடுகிறேன். வணக்கத்திற்குரியவன் உன்னைத் தவிர யாருமில்லை.

சிறப்பு :- எவர் மேற்கண்ட துஆவைக் காலையில் ஓதுவாரோ அவர் அன்று முழுவதும் சகலவிதமான முஸீபத்து(சோதனை)களை விட்டும் பாதுகாக்கப்படுவார்.

கீழ்க்கண்ட துஆவையும் காலையிலும் மாலையிலும் ஒரு தடவை ஓதவும்

يَا حَيُّ يَا قَيُّوْمُ بِرَحْمَتِكَ اَسْتَغِيْثُ اَصْلِحْ لِيْ

شَأْنِيْ كُلَّهٗ وَلَا تَكِلْنِيْ اِلٰى نَفْسِيْ طَرْفَةَ عَيْنٍ

யாஹய்யு யாகய்யூம் பிரஹ்ம(த்)தி(க்)க அஸ்தஙீது அஸ்லிஹ்லீ ஷஃனீ குல்லஹூ வலாத்த(க்)கில்னீ இலா நFப்ஸீ(த்) தர்ப(த்)த அய்னின்.

பொருள் :- எப்பொழுதும் நிரந்தரமாக இருக்கக்கூடியவனே! உன்னுடைய அருட்கொடையைக் கொண்டு இரட்சிப்பை

வேண்டுகிறேன். என்னுடைய காரியங்கள் யாவற்றையும் சீராக்கி வை. கண் மூடி விழிக்கும் நேரம் கூட என் காரியங்களை என்னளவில் சாட்டி விடாதே!

சிறப்பு :- முஸீபத் (சோதனை) நிகழ்ந்த நேரத்தில் ஸஜ்தாவிலிருந்து இந்த துஆவை ஓதினால் நிறைந்த பலன் உண்டு. நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பத்ருடைய யுத்த நேரத்தில் ஸஜ்தாவில் மேற்கண்ட துஆவை அதிகமாக ஓதி வந்தார்கள்.

கீழ்க்கண்ட துஆவை காலையிலும் மாலையிலும் ஏழு தடவை ஓதவும்

حَسْبِيَ اللّٰهُ لَآ اِلٰـهَ اِلَّا هُوَ عَلَيْهِ تَوَكَّلْتُ وَهُوَ
رَبُّ الْعَرْشِ الْعَظِيْمِ

ஹஸ்பியல்லாஹு லாஇலாஹ இல்லாஹுவஅலைஹி தவக்கல்த்து வஹுவ ரப்புல் அர்ஷில் அளீம்.

பொருள் :- அல்லாஹ்வே எனக்குப் போதுமானவன். அவனைத் தவிர வணங்குவதற்குரிய நாயன் வேறு யாருமில்லை. அவன் மீதே நான் பொறுப்பு சாட்டினேன். அவன் மகத்தான அர்ஷுடைய இரட்சகன்.

சிறப்பு :- இந்த துஆவை காலையிலும் மாலையிலும் ஏழு ஏழு தடவைகள் ஓதி வந்தால் இரு உலகிலும் எல்லா விதமான துக்கங்களிலிருந்தும் பாதுகாப்பு கிடைக்கும்.

கீழ்க்கண்ட துஆவை ஒவ்வொரு நாளும் காலையிலும் மாலையிலும் நான்கு தடவை ஓதவும்

اَللّٰهُمَّ اِنِّىْ اَصْبَحْتُ اُشْهِدُكَ وَاُشْهِدُ حَمَلَتَ عَرْشِكَ وَمَلٰٓئِكَتِكَ وَجَمِيْعَ خَلْقِكَ بِاَنَّكَ اَنْتَ اللّٰهُ لَآ اِلٰـهَ اِلَّآ اَنْتَ وَاَنَّ مُحَمَّدًا عَبْدُكَ وَرَسُوْلُكَ

அல்லாஹும்ம இன்னீ அஸ்பஹ்த்து உஷ்ஹிது(க்)க வ உஷ்ஹிது ஹமல(த்)த அர்ஷி(க்)க வமலா இக(த்)த(க்)க வஜமீஅ கல்க்கி(க்)க பி அன்ன(க்)க அன்த்தல்லாஹு லா இலாஹ இல்லா அன்த்த வ அன்ன முஹம்மதன் அப்து(க்)க வரஸூலு(க்)க.

பொருள்:- நான் காலையை அடைந்தேன். நான் உன்னை சாட்சியாக்குகிறேன். உன்னுடைய அர்ஷை சுமந்த மலக்குகளையும் இன்னும் மற்ற மலக்குகளையும் இன்னும் உன்னுடைய படைப்பினங்கள் யாவற்றையும் சாட்சியாக்குகிறேன். நிச்சயமாக நீதான் அல்லாஹ். உன்னைத் தவிர வணக்கத்திற்குரியவன் யாருமில்லை. நிச்சயமாக முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உன்னுடைய அடியாராகவும் தூதராகவுமிருக்கிறார்கள்.

கீழ்க்கண்ட துஆவை காலையிலும் மாலையிலும் மும்மூன்று தடவை ஓதவும்

اَللّٰهُمَّ اِنِّىْ اَسْئَلُكَ الْعَافِيَةَ فِى الدُّنْيَا وَالْاٰخِرَةِ

اَللّٰهُمَّ اِنِّيْ اَسْئَلُكَ الْعَفْوَ وَالْعَافِيَةَ فِيْ دِيْنِيْ وَ

دُنْيَايَ وَاَهْلِيْ وَمَالِيْ اَللّٰهُمَّ اسْتُرْ عَوْرَتِيْ

وَاٰمِنْ رَوْعَتِيْ اَللّٰهُمَّ احْفَظْنِيْ مِنْ بَيْنِ يَدَيَّ

وَمِنْ خَلْفِيْ وَعَنْ يَّمِيْنِيْ وَعَنْ شِمَالِيْ

وَمِنْ فَوْقِيْ وَاَعُوْذُ بِعَظْمَتِكَ اَنْ اُغْتَالَ مِنْ

تَحْتِيْ

பொருள் :- அல்லாஹ்வே! இம்மையிலும் மறுமையிலும் நலவையும் நற்சுகத்தையும் உன்னிடத்தில் வேண்டுகிறேன். அல்லாஹ்வே! துன்யாவிலும், மறுமையிலும் மன்னிப்பையும், என்னுடைய பொருள்களிலும் என்னுடைய குடும்பத்திலும் நலவையும் வேண்டுகிறேன். அல்லாஹ்வே! என்னுடைய ஐபுகளை (இரகசியங்களை) மறைத்து என்னுடைய பயத்தையும் கஷ்டத்தையும் நீக்கி எனக்கு நிம்மதியளிப்பாயாக! எனக்கு முன்பக்கத்திலும் பின்பக்கத்திலும் வலப்பக்கத்திலும் இடப்பக்கத்திலும் இன்னும் எனக்கு மேலும் பாதுகாப்பளிப்பாயாக! இன்னும் என்னுடைய கீழ்ப் பாகத்திலிருந்து திடீரென்று அபாயம் வராமல் உன்னிடத்தில் பாதுகாவல் தேடுகிறேன்.

கீழ்க்கண்ட துஆவையும் காலையிலும் மாலையிலும் மும்மூன்று தடவை ஓதவும்

اَللّٰهُمَّ عَافِنِيْ فِيْ بَدَنِيْ اَللّٰهُمَّ عَافِنِيْ فِيْ
سَمْعِيْ اَللّٰهُمَّ عَافِنِيْ فِيْ بَصَرِيْ لَآ اِلٰهَ اِلَّا اَنْتَ

அல்லாஹும்ம ஆFபினீ Fபீபதனீ அல்லாஹும்ம ஆFபினீ Fபீஸம்ஈ அல்லாஹும்ம ஆFபினீFபீபஸரீ லா இலாஹ இல்லா அன்த்த.

பொருள் :- அல்லாஹ்வே! என்னுடைய உடலில் நல்ல ஆரோக்கியத்தை அளிப்பாயாக! அல்லாஹ்வே! என்னுடைய செவியிலே நல்ல ஆரோக்கியத்தை அளிப்பாயாக! அல்லாஹ்வே! என்னுடைய பார்வையில் நல்ல ஆரோக்கியத்தை அளிப்பாயாக! வணக்கத்திற்குரியவன் உன்னைத் தவிர யாருமில்லை.

சூரியன் உதயமாகும் பொழுது ஓதும் துஆ

اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِيْ اَقَالَنَا يَوْمَنَا هٰذَا وَلَمْ
يُهْلِكْنَا بِذُنُوْبِنَا

அல்ஹம்து லில்லாஹில்லதீ அகாலனா யவ்மனா ஹாதா வலம் யுஹ்லிக்னா பிதுனூபினா.

பொருள் :- புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே, அவன் தான் இன்றைய தினம் நமக்கு மன்னிப்பை வைத்தான். நம்முடைய பாவங்களைக் கொண்டு நம்மை அவன் நாசமாக்கவில்லை.

ளுஹர் தொழுகைக்குப் பிறகு ஓதும் துஆ

اَللّٰهُمَّ بِكَ اُحَاوِلُ وَبِكَ اُصَاوِلُ وَبِكَ اُقَاتِلُ

அல்லாஹும்ம பி(க்)க உஹாவிலு வபி(க்)க உஸாவிலு வபி(க்)க உகாத்திலு.

பொருள் :- அல்லாஹ்வே! உன்னிடத்திலேயே என்னுடைய நோக்கங்கள் நிறைவேறிட தேடுகிறேன். இன்னும் உன்னுடைய உதவியைக் கொண்டே விரோதிகளிடம் போராடுகிறேன். இன்னும் உன்னுடைய உதவியைக் கொண்டே ஜிஹாது செய்கிறேன்.

மாலையில் மட்டும் ஓதக்கூடிய துஆக்கள்

اَمْسَيْنَا وَاَمْسَى الْمُلْكُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ط اَللّٰهُمَّ اِنِّيْٓ اَسْئَلُكَ خَيْرَ هٰذِهِ اللَّيْلَةِ فَتْحَهَا وَنَصْرَهَا وَنُوْرَهَا وَبَرَكَتَهَا وَهُدَاهَا وَاَعُوْذُ بِكَ مِنْ شَرِّ مَا فِيْهَا وَشَرِّ مَا بَعْدَهَا ؕ

அம்ஸைனா வஅம்ஸல் முல்க்கு லில்லாஹி ரப்பில் ஆலமீன். அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுக்க கைர ஹாதிஹில்

லைலத்தி Fபத்ஹஹா வநஸ்ரஹா வநூரஹா வபரக்கத்தஹா வஹுதாஹா வஅஊதுபி(க்)க மின் ஷர்ரி மாFபீஹா வஷர்ரி மாபஅதஹா.

பொருள் :- நாங்கள் மாலையை அடைந்தோம். புகழனைத்தும் அகிலத்தார்களின் இரட்சகனான அல்லாஹ்வுக்கே உரியது. அல்லாஹ்வே! இந்த இரவின் நலனையும், இந்த இரவின் வெற்றியையும், இந்த இரவின் உதவியையும், இந்த இரவின் பிரகாசத்தையும், இந்த இரவின் அபிவிருத்தியையும், இன்னும் இந்த இரவின் நேர்வழியையும் உன்னிடத்தில் வேண்டுகிறேன். இன்னும் அவற்றின் தீங்கை விட்டும், இன்னும் இந்த இரவிற்குப் பிறகு ஏற்படும் தீங்கை விட்டும் உன்னிடத்தில் பாதுகாவல் தேடுகிறேன்.

மாலை நேரத்தில் கீழ்க்கண்ட துஆவையும் ஓதலாம்

اَللّٰهُمَّ بِكَ اَمْسَيْنَا وَبِكَ اَصْبَحْنَا وَبِكَ
نَحْيَى وَبِكَ نَمُوْتُ وَاِلَيْكَ النُّشُوْرُ ط

அல்லாஹும்ம பி(க்)க அம்ஸைனா வபி(க்)க அஸ்பஹ்னா வபி(க்)க நஹ்யா வபிக நமூத்து வ இலைக்கன்னுஷூர்.

பொருள் :- அல்லாஹ்வே! உன்னுடைய வல்லமையைக் கொண்டே நாங்கள் மாலையை அடைந்தோம். இன்னும் உன்னுடைய வல்லமையைக் கொண்டே காலையை அடைந்தோம். இன்னும் உன்னுடைய வல்லமையைக் கொண்டே உயிர் வாழ்கிறோம். இன்னும் உன்னுடைய வல்லமையைக் கொண்டே மரணிக்கிறோம். இன்னும் உன் அளவிலேயே நாங்கள் மீளக்கூடியவர்களாக இருக்கிறோம்.

மக்ரிப் உடைய பாங்கு கூறக் கேட்கும்போது ஓதும் துஆ

اَللّٰهُمَّ اِنَّ هٰذَا اِقْبَالُ لَيْلِكَ وَاِدْبَارُ نَهَارِكَ وَ

اَصْوَاتُ دُعَاتِكَ فَاغْفِرْ لِيْ

அல்லாஹும்ம இன்ன ஹாதா இக்பாலு லைலிக்(க்)க வஇத்பாரு நஹாரி(க்)க வஅஸ்வாத்து துஆத்தி(க்)க Fப்ஃFபிர்லீ.

பொருள் :- அல்லாஹ்வே! இது உன்னுடைய இரவு வரக் கூடியதும் உன்னுடைய பகல் போக்க் கூடியதுமான நேரமாகும். இன்னும் உன்னுடைய அழைப்பாளர்களின் சப்தங்களாகும். எனவே என்னை நீ மன்னிப்பாயாக!

மூன்று குல் ஸூராக்களின் சிறப்பு

قُلْ هُوَ اللّٰهُ اَحَدٌ

குல்ஹுவல்லாஹு அஹத்

قُلْ اَعُوْذُ بِرَبِّ الْفَلَقِ

குல்அஊது பிரப்பில் Fபலக்

قُلْ اَعُوْذُ بِرَبِّ النَّاسِ

குல்அஊது பிரப்பின்னாஸ்

ஆகிய மூன்று ஸூராக்களைக் காலையிலும் மாலையிலும் மும்மூன்று தடவைகள் ஓதி வரும்படி ஹதீஸ்களில் காணப்படுகின்றது.

காலை மாலை தஸ்பீஹாத்துகளின் விளக்கம்

பொதுவாக அல்லாஹ்வின் திக்ரை எல்லா நேரங்களிலும் (மலஜலம் கழிக்கும் இடத்தைத் தவிர) ஒளூவில்லாமலும் செய்யலாம். திக்ர் செய்வதற்கு கணக்கே கிடையாது. ஆனால் குறிப்பாக ஸுப்ஹு தொழுகைக்குப் பிறகும் அஸர் தொழுகைக்குப் பிறகும் கீழ்க்கண்ட முறைப்படி கீழ்க்கண்ட திக்ருகளை விடாமல் தொடர்ந்து செய்து வந்தால் மன அமைதி ஏற்பட்டு-மிகவும் சந்தோஷமாக இவ்வுலக காரியங்களையும், தீனுடைய காரியங்களையும் செய்யலாம். இது அனுபவத்தில் கண்ட உண்மை.

காலை மாலை தஸ்பீஹாத்து ஓதும் முறை

1. ஒளூவுடனிருக்க வேண்டும்.

2. கிப்லாவின் பக்கம் நோக்கி அமர்ந்து கொள்ள வேண்டும்.

3. கண்களை மூடிக் கொள்ள வேண்டும்.

4. தஸ்பீஹாத்தை ஓதி முடிக்கும் முன் யாருடனும் பேசக் கூடாது. அவ்வாறு யாரிடத்திலேனும் பேசி விட்டால் ஆரம்பத்திலிருந்தே ஓத வேண்டும்.

5. தஸ்பீஹ் ஓதும்போது யாரேனும் பேசினால் தஸ்பீஹை காட்ட வேண்டும்.

6. சப்தமில்லாமல் தம்முடைய காதுகளுக்கு கேட்கும் அளவில் ஓத வேண்டும்.

ஸுப்ஹுத் தொழுகைக்குப் பிறகு ஓத நேரமில்லாவிட்டால் லுஹருக்குள் முடித்து விடலாம். மேலும் அஸர் தொழுகைக்குப் பிறகு நேரம் கிடைக்காவிட்டால் தூங்குவதற்குள் முடித்து விடலாம்.

காலை மாலை ஓதும் தஸ்பீஹாத்தூக்கள்

மூன்றாம் கலிமா

سُبْحَانَ اللهِ وَالْحَمْدُ لِلّٰهِ وَلَآ اِلٰـهَ اِلَّا اللهُ وَاللهُ اَكْبَرُ وَلَا حَوْلَ وَلَا قُوَّةَ اِلَّا بِاللهِ

ஸுப்ஹானல்லாஹி வல்ஹம்துலில்லாஹி வலா இலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர் வலாஹவ்ல வலா குவ்வத்த இல்லா பில்லாஹ்.

பொருள் :- அல்லாஹ் மிகப் பரிசுத்தமானவன். புகழனைத்தும் அவனுக்கே உரித்தானது. மேலும் வணக்கத்திற்குரியவன் அவனைத் தவிர வேறு யாரும் இல்லை. இன்னும் அல்லாஹ் மிகப் பெரியவன். மகத்தான அல்லாஹ்வின் உதவியின்றிப் பாவத்திலிருந்து தப்பித்துக் கொள்ளவும் நன்மையான காரியங்களை செய்யவும் முடியாது.

இஸ்திஃபார்

اَسْتَغْفِرُ اللهَ الَّذِيْ لَآ اِلٰـهَ اِلَّا هُوَ الْحَيُّ الْقَيُّوْمُ وَاَتُوْبُ اِلَيْهِ

அஸ்த்தஃFபிருல்லா ஹல்லதீ லா இலாஹ இல்லாஹுவல் ஹையுல் கய்யூம் வஅ(த்)தூபு இலைஹி.

பொருள் :- அல்லாஹ்விடம் பாவ மன்னிப்புக் கோருகிறேன். அவன் எத்தகையவனென்றால் அவனைத் தவிர வணக்கத்திற்குரியவன் யாருமில்லை; அவன் ஜீவித்திருப்பவன், நிலைத்திருப்பவன். அவனளவிலேயே நான் பாவ மன்னிப்புக் கோருகிறேன்.

ஸலவாத்து

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِ مُحَمَّدٍ وَّ

بَارِكْ وَسَلِّمْ عَلَيْهِ

அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் வபாரிக் வஸல்லிம் அலைஹி.

பொருள் :- அல்லாஹ்வே! முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும், அவர்களின் கிளையார்களின் மீதும், ஸலவாத்து சொல்வாயாக! மேலும் அவர்கள் மீது சாந்தியையும் அபிவிருத்தியையும் அளிப்பாயாக!

குறிப்பு :- மேற்கண்டவற்றை ஒவ்வொன்றையும் நூறு தடவைகள் ஓத வேண்டும். மேலும் அதிகமாக ஓதுவது அவரவர்களின் வசதியைப் பொறுத்த விஷயம்.

காலை மாலை தஸ்பீஹாத்துகள் (சுருக்கம்)

1. மூன்றாம் கலிமாவை வல்லாஹு அக்பர் வரை ஓதலாம்.

سُبْحَانَ اللّٰهِ وَالْحَمْدُ لِلّٰهِ وَلَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَاللّٰهُ اَكْبَرُ

اَسْتَغْفِرُ اللّٰهَ الْعَظِيْمَ

2. அஸ்தஃFபிருலலாஹல் அளீம்.

صَلَّى اللّٰهُ عَلٰى مُحَمَّدٍ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ

3. ஸல்லல்லாஹு அலா முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம். ஒவ்வொன்றையும் நூறு முறைகள் ஓத வேண்டும்.

மூன்றாம் கலிமாவின் சிறப்பு

1. 'ஸுப்ஹானல்லாஹ்' என்று நூறு முறை ஓதினால் நூறு அரபி அடிமைகளை உரிமையளித்த பலன் கிடைக்கும்.

2. 'அல்ஹம்துலில்லாஹ்' என்று நூறு முறை ஓதினால் லகாம் உள்பட அல்லாஹ்வின் பாதையில் நூறு குதிரைகளை அளித்த நன்மைகள் அடையலாம்.

3. 'அல்லாஹு அக்பர்' என்று நூறு முறை ஓதினால் நூறு ஒட்டகங்களை குர்பானி கொடுத்த (ஒப்புக் கொள்ளப்பட்ட) நன்மைகள் கிடைக்கும்.

4. 'லா இலாஹ இல்லல்லாஹ்' என்று நூறு முறை ஓதினால், அதனுடைய நன்மை வானம் பூமிக்கு இடையிலுள்ள எல்லாவற்றையும் நன்மையால் நிரப்பி விடுகிறது.

மேலும் இவற்றை நூறு தடவை ஓதி வந்தால் உஹத் மலையளவு நன்மை கிடைக்குமென்றும் வேறு பல சிறப்புகளும் உண்டென்றும் ஹதீஸ்களில் காணப் படுகின்றன.

இஸ்திஃபாரின் சிறப்பு

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தினந்தோறும் நூறு தடவை இஸ்திஃபார் செய்து வந்ததாகவும், மற்றொரு ஹதீஸில் எழுபது தடவை இஸ்திஃபார் செய்து வந்ததாகவும் காணப்படுகின்றன.

இஸ்திஃபார் அதிகமாக ஓதி வந்தால் பாவங்கள் மன்னிக்கப்படுவதுடன் உணவில் பர(க்)கத் (அபிவிருத்தி) ஏற்படுவதாகவும், இஸ்திஃFபார் ஓதுவதின் காரணமாக

கடலளவு பாவங்களிலிருந்தாலும் மன்னிக்கப்படுகிறது என்றும் ஹதீஸ்களில் காணப்படுகின்றன.

ஸலவாத்தின் சிறப்பு

ஒருவர் ஒரு முறை ஸலவாத்து ஓதினால் அவர் மீது அல்லாஹுˇ தஆலா பத்து ரஹ்மத்துகளை அனுப்புகிறான். மேலும், அவருடைய பத்து பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. மேலும் துஆ ஓதும்பொழுது ஸலவாத்து ஓதாவிட்டால், அது ஒப்புக் கொள்ளப்படாமல் வானத்திற்கும் பூமிக்குமிடையில் தொங்கிக் கொண்டிருக்கின்றது. மேலும் ஸலவாத்து ஓத மறந்தவர் சொர்க்கத்தின் பாதையையே மறந்து விட்டார் என்றும் ஹதீஸ்களில் காணப்படுகின்றன.

தூக்கத்தின் ஒழுக்கங்களும், துஆக்களும்

1. ஒளுவுடன் இருக்க வேண்டும்.

2. படுக்கையை மூன்று முறை உதற வேண்டும்.

3. படுக்கையில்மர்ந்து ஸூரா பாத்திஹா ஒரு தடவை, குல்ஹுˇவல்லாஹுˇ ஸூரா 3 தடவைகள், குல்அஊது பிரப்பில் பலக் 3 அல்லது ஒரு தடவை, குல்அஊது பிரப்பின்னாஸ் 3 அல்லது ஒரு தடவை ஓதி இரு உள்ளங்கைகளிலும் ஊதி, உடம்பு பூராவும் மூன்று முறை தடவிக் கொள்ள வேண்டும். குதிகால்களிலும் மர்ம ஸ்தானத்திலும் தடவ வேண்டியதில்லை.

4. பிறகு குல்யா அய்யுஹல் காபிரூன் ஸூரா ஒரு தடவை, ஆயத்துல் குர்ஸீ ஒரு தடவை, ஆமனர் ரஸூல் ஒரு தடவை ஓதவும்.

5. பிறகு,

سُبْحَانَ اللهِ

ஸுப்ஹானல்லாஹ் 33 தடவைகள்,

اَلْحَمْدُ لِلّٰهِ

அல்ஹம்துலில்லாஹ் 33 தடவைகள்,

اَللّٰهُ اَكْبَرُ

அல்லாஹு அக்பர் 34 தடவைகள் ஓதிக் கொள்ளவும்;

6. சிறிது நேரம் கண்களை மூடிக் கொண்டு அன்று செய்த நல்ல, கெட்ட அமல்களையும் மவ்த்தைப் பற்றியும் கப்ருடைய வாழ்க்கையைப் பற்றியும் சிந்திக்க வேண்டும்.

7. தஹஜ்ஜுத் தொழுகைக்கு எழுந்திருப்பதற்கு நிய்யத்து செய்ய வேண்டும்.

8. இரு கண்களுக்கும் மும்மூன்று முறைகள் சுர்மா இட்டுக் கொள்ள வேண்டும்.

9. துஆவை ஓதி வலது கன்னத்தில், வலது கையை வைத்து கிப்லாவின் பக்கம் முகத்தைத் திருப்பி வைத்து படுத்துக் கொள்ள வேண்டும்.

10. வடக்கு பக்கம் அல்லது மேற்குப் பக்கம் தலையை வைத்துக் கொள்ளலாம்.

வடக்குப் பக்கம் தலையை வைப்பதுதான் சிறந்தது.

11. படுக்கையிலிருந்து எழும் சமயம் துஆ ஓதிக் கொள்ள வேண்டும்.

குறிப்பு :- இரவு தூங்குவதற்கு முன் ஸூரா அலிப் லாம் மீம் ஸஜ்தா, ஸூரா தபாரக் இவற்றை ஓதுவதினால் பல சிறப்புகளுண்டு. இரவு நேரங்களில் வாக்கிஆ ஸூரா ஓதுவதும் சிறந்தது.

தூங்கும் சமயம் ஓதும் துஆ

اَللّٰهُمَّ بِاسْمِكَ اَمُوْتُ وَاَحْيٰ

அல்லாஹும்ம பிஸ்மிக அமூத்து வஅஹ்யா.

பொருள் :- அல்லாஹ்வே! உன்னுடைய திருநாமத்தைக் கொண்டு மரணித்து இன்னும் உயிர் வாழ்வேன்.

குறிப்பு :- தூக்கம் என்பது சிறிய மரணமாகும்.

அல்லது கீழ்க்கண்ட துஆவையும் ஓதலாம்.

اَللّٰهُمَّ قِنِىْ عَذَابَكَ يَوْمَ تَجْمَعُ عِبَادَكَ

அல்லாஹும்ம கினீ அதாப(க்)க யவ்ம தஜ்மஉ இபாத(க்)க.

பொருள் :- அல்லாஹ்வே! எந்த நாளையில் உன்னுடைய அடியார்களை ஒன்று சேர்ப்பாயோ அந்த நாளையில் உன்னுடைய வேதனையை விட்டும் என்னைக் காப்பாற்றுவாயாக!

அல்லது கீழ்க்கண்ட துஆவையும் ஓதலாம்.

اَللّٰهُمَّ اَسْلَمْتُ نَفْسِىٓ اِلَيْكَ وَ وَجَّهْتُ وَجْهِىٓ

اِلَيْكَ وَ فَوَّضْتُ اَمْرِيْ اِلَيْكَ وَاَلْجَاْتُ ظَهْرِيٓ

اِلَيْكَ رَغْبَةً وَّرَهْبَةً اِلَيْكَ لَامَلْجَاَ وَلَامَنْجَا مِنْكَ اِلَّا اِلَيْكَ اٰمَنْتُ بِكِتَابِكَ الَّذِيْٓ اَنْزَلْتَ وَبِنَبِيِّكَ الَّذِيْٓ اَرْسَلْتَ

அல்லாஹ்வே! என்னுடைய உயிரை உன்னிடத்தில் ஒப்படைத்து விட்டேன். இன்னும் என்னுடைய முகத்தை உன் பக்கமாகவே திருப்பி விட்டேன். இன்னும் என்னுடைய காரியத்தை உன்னளவிலேயே சாட்டி விட்டேன். இன்னும் என்னுடைய தேவையை உன்னிடத்தில் நாடி விட்டேன். உன்னுடைய அருட்கொடைகளை ஆசையுடனும், பயத்துடனும். உன்னைத் தவிர வேறு யாரும் பாதுகாவல் தேட இடமும் வெற்றியுமில்லை. நீ அனுப்பிய வேதத்தின் மீது நான் ஈமான் கொண்டேன். இன்னும் நீ அனுப்பிய நபியின் மீது ஈமான் கொண்டேன்.

சிறப்பு :- மேற்கண்ட துஆவை தூங்குமுன் ஓதிவருபவருக்கு மவ்த்து வந்து விட்டால், அது மேலானதாக இருக்கும். அவர் படுக்கையிலிருந்து உயிருடன் எழுந்தால் கைரான நஸீபாகும்.

சிறப்பு

தூங்கும் சமயம் ஒளு செய்து கொண்டு தூங்குவோமேயானால் நாம் தூங்கிய பிறகு நம்முடைய ஆத்மாக்கள் அல்லாஹ்வின் சந்நிதானத்திற்கு செல்கின்றன. ஒளுவுடன் தூங்கிய ஆத்மாக்கள் அல்லாஹ்விற்கு முன் ஸஜ்தா செய்கின்றன. ஒளு இல்லாமல் தூங்கிய ஆத்மாக்கள் ஸஜ்தா செய்யாமல் திரும்பி வந்து விடுகின்றன. மேலும் எவரொருவர் ஒளுவுடன் இருக்கும்போது மரணமடைவாரோ அவருக்கு ஷஹீதுடைய அந்தஸ்து கிடைப்பதாகவும், உயிரைக் கைப்பற்ற மலக்குல் மவ்த்

(அலை) அவர்கள் வரும்போது ஜிப்ரஈல் (அலை) அவர்களும் உடன் வருவதாகவும் கூறப்படுகின்றது.

ஆயத்துல் குர்ஸீயை ஓதிக் கொண்டு தூங்கினால் ஷைத்தானுடைய தீங்கை விட்டும் பாதுகாப்புகள் கிடைக்கின்றன. மூன்று குல் ஸூராக்களை ஓதிக் கொண்டு தூங்கினால் விஷ ஜந்துக்களின் தீங்கை விட்டும் பாதுகாப்பு உண்டாகும்.

'குல்ஹுவல்லாஹு' ஓதி விட்டு தூங்குவதின் காரணமாக மவ்த்தைத் தவிர வேறு எந்த பயமும் உண்டாகாது. 'குல்யா அய்யுஹல் காபிரூன்' ஓதி விட்டு தூங்குவதின் காரணமாக ஷிர்க்கை விட்டும் பாதுகாப்பு கிடைக்கும். ஹல்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குல்ஹு வல்லாஹு அஹத், குல்அஊது பிரப்பில் பலக், குல்அஊது பிரப்பின்னாஸ் ஆகிய ஸூராக்களை ஓதி, இரு கைகளிலும் ஊதி, உடம்பில் தடவிக் கொள்வார்கள். தஸ்பீஹ் பாத்திஹா என்று சொல்லக்கூடிய 'ஸுப்ஹானல்லாஹ்' 33 தடவை; 'அல்ஹம்துலில்லாஹ்' 33 தடவை; 'அல்லாஹு அக்பர்' 34 தடவை இவற்றை ஓதி விட்டு தூங்குவதின் காரணமாக உடம்பில் ஏற்பட்டுள்ள அசதி நீங்கிவிடும்.

أَسْتَغْفِرُ اللّٰهَ الَّذِيْ لَآ اِلٰهَ اِلَّا هُوَ الْحَيُّ الْقَيُّوْمُ
وَاَتُوْبُ اِلَيْهِ ۚ

"அஸ்தஃFபிருல்லா ஹல்லதீ லா இலாஹ இல்லா ஹுவல் ஹைய்யுல் கைய்யூம் வஅ(த்)தூபு இலைஹி"

என்று தூங்குவதற்கு முன் பன்னிரண்டு தடவை ஓதினால் கடலின் நுரையளவு பாவங்களிருப்பினும் மன்னிக்கப்படும்.

மனிதர்கள் தூங்குவதற்காகத் தங்களின் படுக்கையை அடைந்ததும் அவர்களை மலக்கும் ஷைத்தானும் நெருங்குகின்றனர். எவர் அல்லாஹ்வுடைய திக்ருடன் தூங்குவாரோ அவரை அம்மலக்கு பாதுகாத்து கொள்கிறார். ஆனால் எவர் திக்ரில் ஈடுபடாமல் தூங்குவாரோ அவரை ஷைத்தான் கெடுதியின் பக்கம் ஈடுபடுத்துகிறான்.(ஹதீஸ்)

தூக்கம் வராத சமயங்களில் ஓதும் துஆ

اَللّٰهُمَّ غَارَتِ النُّجُوْمُ وَهَدَاتِ الْعُيُوْنُ وَاَنْتَ
حَيٌّ قَيُّوْمٌ لَا تَأْخُذُكَ سِنَةٌ وَّلَا نَوْمٌ يَاحَيُّ يَاقَيُّوْمُ
اَهْدِ اَلَيْلِيْ وَاَنِمْ عَيْنِيْ ۝

அல்லாஹும்ம ஙாரதின் னுஜூம் வஹதாத்தில் உயூனு வஅன்த்த ஹய்யுன் கைய்யூமுல்லா தஃகுது(க்)க ஸினத்துன் வஅலா நவ்முன் யாஹைய்யு யாகைய்யூமு அஹ்தில் லைலீ வஅனிம் ஐனீ.

பொருள் :- அல்லாஹ்வே! நட்சத்திரங்கள் தூரமாகிவிட்டன. இன்னும் கண்கள் ஓய்வு எடுத்துக் கொண்டன. இன்னும் நிலையானவனும் உயிருள்ளவனுமாக இருக்கிறாய். உனக்கு உறக்கமோ நித்திரையோ வராது. நிலையானவனே! உயிருள்ளவனே! நீ இந்த இரவில் எனக்கு ஓய்வையும் இன்னும் என் கண்களுக்கு தூக்கத்தையும் கொடுத்து விடு.

தூங்கிக் கொண்டிருக்கும்போது திடுக்கம் வந்தால் ஓதும் துஆ

أَعُوْذُ بِكَلِمَاتِ اللّٰهِ التَّامَّةِ مِنْ غَضَبِهٖ وَ
عِقَابِهٖ وَشَرِّ عِبَادِهٖ وَمِنْ هَمَزَاتِ الشَّيَا
طِيْنِ وَاَنْ يَّحْضُرُوْنَ ۔

அஊது பிகலிமாத்தில்லா ஹித்தாம்மத்தி மின் ஙளபிஹி வஇகாபிஹி வஷர்ரி இபாதிஹி வமின்ஹமஸாத்திஷ் ஷயாத்தீனி வஅன் யுஹ்ளரூன்.

பொருள் :- அல்லாஹூ தஆலாவுடைய எல்லா கலி மாக்களையும் கொண்டு அவனுடைய கோபத்தை விட்டும், இன்னும் அவனுடைய தண்டனையை விட்டும், இன்னும் அவனுடைய அடியார்களின் தீங்கை விட்டும், இன்னும் ஷைத்தானுடைய ஊசலாட்டத்தை விட்டும், இன்னும் அவன் என்னிடம் வருவதை விட்டும் பாதுகாவல் தேடுகிறேன்.

தூங்கும் சமயம் நல்ல கனவுகள் கண்டால் 'அல்ஹம்துலில்லாஹ்' என்று கூறவும். அந்தக் கனவைப் பற்றி நல்ல மனிதர்களிடம் பிரஸ்தாபப்படுத்தவும். தீனுடைய விளக்கமற்றவர்களிடம் கனவு கண்டதை சொல்லக் கூடாது. ஆனால் கெட்ட கனவுகள் கண்டால் இடது பக்கமாக மூன்று முறை துப்பி விட்டு, படுக்கையை விட்டு மறு பக்கமாக திரும்பிப் படுக்கவும். மேலும் கீழ்க்கண்டவற்றை மூன்று முறை ஓதவும்.

أَعُوذُ بِاللهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيمِ وَمِنْ
شَرِّ هٰذِهِ الرُّؤْيَا

அஊதுபில்லாஹி மினஷ்ஷைத்தானிர்ரஜீம் வ மின் ஷர்ரி ஹாதிஹிர்ருஃயா.

பொருள் :- சபிக்கப்பட்ட ஷைத்தானின் தீங்கை விட்டும், இன்னும் அவனுடைய கெட்ட கனவின் தீங்கை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடுகிறேன்.

குறிப்பு :- கெட்ட கனவுகள் கண்டால் யாரிடமும் சொல்லக் கூடாது. மேலும் மேற்கண்ட முறையைப் பின்பற்றினால் கெட்ட கனவுகள் கண்டிருந்தால் துன்பம் விளைவிக்காது.

வீட்டிலிருந்து வெளியேறும்போது ஓதும் துஆக்கள்

வீட்டை விட்டு வெளியேறும்போது இடது காலை முன் வைத்து கீழ்க்கண்ட துஆவை ஓதவும்.

بِسْمِ اللهِ تَوَكَّلْتُ عَلَى اللهِ لَا حَوْلَ
وَلَا قُوَّةَ إِلَّا بِاللهِ

பிஸ்மில்லாஹ் தவக்கல்த்து அலல்லாஹி லா ஹவ்ல வலா குவ்வத்த இல்லாபில்லாஹ்.

பொருள் :- அல்லாஹ்வின் திருநாமத்தைக் கொண்டு வெளியேறுகிறேன். இன்னும் அல்லாஹ்வின் மீதே பொறுப்பு சாட்டினேன். கெடுதியை விட்டும் பாதுகாத்துக் கொள்வதற்கும், இன்னும் நன்மையை செய்வதற்கு சக்தியைத் தருவதற்கும் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை.

சிறப்பு :- எவர் இந்த துஆவை வீட்டிலிருந்து வெளியேறும் போது ஓதுவாரோ அவருக்கு மறைமுகமாக சப்தம் உண்டாகும். "உன்னுடைய தேவைகள் பூர்த்தியாகும். இன்னும் நீ கெடுதியை விட்டும் - நஷ்டத்தை விட்டும் பாதுகாக்கப்படுவாய்." இவற்றைக் கேட்டதும் ஷைத்தான் அவ்விடமிருந்து தூரமாகி விடுகிறான்.

பிறகு வானத்தின் பக்கம் முகத்தைத் திருப்பி கீழ்க்கண்ட துஆவை ஓதவும்

اَللّٰهُمَّ اِنِّيْ اَعُوْذُبِكَ اَنْ اَضِلَّ اَوْاُضَلَّ اَوْ اَظْلِمَ اَوْاُظْلَمَ اَوْاَجْهَلَ اَوْيُجْهَلَ عَلَيَّ ؕ

அல்லாஹும்ம இன்னீ அஊதுபி(க்)க அன் அளில்ல ஔ உளல்ல ஔ அள்லிம ஔ உள்லம ஔ அஜ்ஹல ஔ யுஜ்ஹல அலய்ய

பொருள் :- அல்லாஹ்வே! நான் வழி தவறுவதை விட்டும் அல்லது மற்றவர்களை நான் கெடுதியான வழியில் இழுப்பதை விட்டும் அல்லது நான் அநீதம் செய்வதை விட்டும் அல்லது பிறரால் நான் அநீதம் செய்யப்படுவதை விட்டும் அல்லது நான் அறிவிலியாக ஆகுவதை விட்டும் அல்லது என் மீது அறியாமை சுமத்தப்படுவதை விட்டும் உன்னிடம் நான் பாதுகாவல் தேடுகிறேன்.

சிறப்பு :- மேற்கண்ட துஆவை ஓதுவதின் காரணமாக ஷைத்தான் தூரமாவதுடன் தொந்தரவு கொடுப்பதை விட்டும், ஏமாற்றம் செய்வதை விட்டும் விலகிக் கொள்கிறான். (ஹதீஸ்)

வீட்டிற்குள் நுழையும்போது ஓதும் துஆ

اَللّٰهُمَّ اِنِّيْ اَسْئَلُكَ خَيْرَ الْمَوْلَجِ وَخَيْرَ الْمَخْرَجِ بِسْمِ اللّٰهِ وَلَجْنَا بِسْمِ اللّٰهِ خَرَجْنَا وَعَلَى اللّٰهِ رَبِّنَا تَوَكَّلْنَا

அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுக்க கைரல் மவ்லஜி வகைரல் மக்ரஜி பிஸ்மில்லாஹி வலஜ்னா பிஸ்மில்லாஹி கரஜ்னா வ அலல்லாஹி ரப்பனா தவக்கல்னா

பொருள் :- அல்லாஹ்வே! நல்ல நுழைதலையும் இன்னும் நல்ல வெளியேறுதலையும் நிச்சயமாக உன்னிடத்தில் நான் வேண்டுகிறேன்; அல்லாஹ்வின் திருநாமத்தைக் கொண்டு நுழைந்தோம். மேலும் அல்லாஹ்வின் திருநாமத்தைக் கொண்டு வெளியேறினோம். இன்னும் எங்களின் இரட்சகனான அல்லாஹ்வின் மீதே பாரம் சாட்டினோம்.

மேற்கண்ட துஆவை ஓதி விட்டு வீட்டிலுள்ளவர்களுக்கு 'அஸ்ஸலாமு அலைக்கும்' என்று கூற வேண்டும்; வீட்டிற்குள் நுழையும்போது வலது காலை முன் வைத்து நுழைய வேண்டும்.

சிறப்பு :- நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றுள்ளார்கள்: எவரொருவர் தம் வீட்டினுள் நுழையும் பொழுது அல்லாஹ்வுடைய திக்ரை செய்வாரோ அப்பொழுது ஷைத்தான் தன்னுடைய கூட்டாளிகளிடம் "இன்று இரவு இந்த வீட்டில் நாம் தங்கவும் முடியாது. மேலும் இந்த வீட்டிலுள்ளவர்களுடன் சேர்ந்து நாம் எதையும் சாப்பிடவும் முடியாது" என்று கூறுகிறான் மேலும் எவர் தம் வீட்டினுள் நுழையும் பொழுது அல்லாஹ்வினுடைய திக்ரை செய்யவில்லையோ அப்பொழுது

ஷைத்தான் தன்னுடைய கூட்டாளிகளிடம் "இன்றிரவு நீங்கள் இங்கு தங்குவதற்கு இடம் கிடைத்து விட்டது" என்று கூறுகிறான்.

பாங்கு சப்தம் கேட்டதும் ஓத வேண்டிய துஆ

أَشْهَدُ أَنْ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ رَضِيْتُ
بِاللّٰهِ رَبًّا وَّبِمُحَمَّدٍ رَّسُوْلًا وَّبِالْإِسْلَامِ دِيْنًا

அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல்லாஹு வஹ்தஹூ லாஷரீ(க்)கலஹூ வ அஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹூ வரஸூலுஹூ ரளீத்து பில்லாஹி ரப்பன்வ் வபி முஹம்மதிர் ரஸூலன்வ் வபில் இஸ்லாமி தீனா

பொருள் :- வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர யாருமில்லை என்று நான் சாட்சி கூறுகிறேன். அவன் தனித்தவன். அவனுக்கு இணை யாருமில்லை. நிச்சயமாக முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவனுடைய அடியாரும் அவனுடைய தூதருமாவார் என்று சாட்சி கூறுகிறேன். அல்லாஹ்வை இரட்சகனாகவும், முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை தூதராகவும் இன்னும் இஸ்லாத்தை தீனாகவும் நான் பொருந்திக் கொண்டேன்.

சிறப்பு :- எவர் பாங்கு சப்தத்தைக் கேட்டு மேற்கண்ட துஆவை ஓதுவாரோ அவருடைய பாவங்களெல்லாம் மன்னிக்கப்படுகின்றன. மேலும் எவர் பாங்கு கூறும்பொழுது அதற்கு பதில் கூறுவாரோ அவருக்காக சொர்க்கம் உண்டு.

- ஹதீஸ் (முஸ்லிம், மிஷ்காத்)

குறிப்பு :- பாங்கிற்கு பதில் கூறுவதென்பது முஅத்தின் கூறுவதையே திருப்பிக் கூற வேண்டும். ஆனால் ஹைய அலஸ்ஸலாஹ்-ஹய்ய அலல் பலாஹ் கூறும்போது 'லாஹவ்ல வலாக்குவ்வத்த இல்லா பில்லாஹில் அலிய்யுல் அளீம்' என்று கூற வேண்டும்.

பாங்கு சொன்ன பிறகு ஓதும் துஆ

اَللّٰهُمَّ رَبَّ هٰذِهِ الدَّعْوَةِ التَّآمَّةِ وَالصَّلٰوةِ
الْقَآئِمَةِ اٰتِ مُحَمَّدَنِ الْوَسِيْلَةَ وَالْفَضِيْلَةَ
وَابْعَثْهُ مَقَامًا مَّحْمُوْدَنِ الَّذِيْ وَعَدْتَّهٗ اِنَّكَ لَا
لَا تُخْلِفُ الْمِيْعَادَ ۝

பொருள் :- யா அல்லாஹ்! இந்த பூர்த்தியான (புனித) அழைப்பிற்கும், நிலைப்பாடான தொழுகைக்கும் உரியவனான இரட்சகனே! எங்கள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு மேன்மையையும், உயர்ந்த அந்தஸ்தையும் அளிப்பாயாக! மேலும் நீ வாக்குறுதி செய்திருக்கின்ற 'மகாமம் மஹ்மூதி'ல் அவர்களை எழுப்புவாயாக! நியாயத் தீர்ப்பு நாளில் அவர்களின் சிபாரிசையும் எங்களுக்கு கொடுத்தருள்வாயாக! நிச்சயமாக நீ வாக்குறுதிக்கு மாறுசெய்ய மாட்டாய்.

குறிப்பு :- பாங்கு துஆவிற்குப் பிறகு ஆயத்துல் குர்ஸீ ஓதுவது சிறந்தது.

சிறப்பு :- பாங்கு கூறிய பிறகு மேற்கண்ட பாங்கு துஆவை ஓதி வருபவருக்கு நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சிபாரிசு (மறுமை நாளில்) கிடைப்பது கடமையாகி விட்டது.

மலஜலம் கழிக்கும் போதுள்ள ஒழுக்கங்களும் துஆக்களும்

மலஜலம் கழிக்கப் போகும்போது 'பிஸ்மில்லாஹ்' என்று கூறி கீழ்க்கண்ட துஆவை ஓதவும்.

اَللّٰهُمَّ اِنِّيْ اَعُوْذُبِكَ مِنَ الْخُبُثِ وَالْخَبَآئِثِ

அல்லாஹும்ம இன்னீ அஊதுபி(க்)க மினல் குபுஸி வல்கபாயிஸி

பொருள் :- அல்லாஹ்வே! ஆண், பெண் ஷைத்தானின் தீங்குகளை விட்டும் உன்னிடம் பாதுகாப்பு தேடுகிறேன்.

மலஜலம் கழித்து விட்டு வெளியே வரும்போது கீழ்க் கண்ட துஆவை ஓதவும்.

غُفْرَانَكَ اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِيْٓ اَذْهَبَ عَنِّى الْاَذٰى وَعَافَانِيْ

குFப்ரானக்க அல்ஹம்து லில்லா ஹில்லதீ அத்ஹப அன்னியல்அதா வஆFபானீ

பொருள் :- அல்லாஹ்வே! நான் உன்னிடத்தில் மன்னிப்பைக் கோருகிறேன். என்னுடைய வயிற்றில் வேதனை செய்யக்கூடிய

அசுத்தங்களை வெளியாக்கி என் கஷ்டங்களை நீக்கி சுகத்தைக் கொடுத்த அல்லாஹ்வுக்கே புகழனைத்தும்!

மலஜலம் கழிக்கும்போது கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கங்கள்

1. காலணிகள் அணிந்திருக்க வேண்டும்.

2. தலையை மறைத்துக் கொள்ள வேண்டும்.

3. குர்ஆன், ஹதீஸ்கள், அல்லாஹ், ரஸூலுடைய திரு நாமங்கள் எழுதப்பட்டவற்றை உடன் வைத்துக் கொள்ளக் கூடாது.

4. இடது காலை முன் வைத்து துஆவை ஓதிக் கொண்டு நுழைய வேண்டும்.

5. ஆடைகளை ஒரே நேரத்தில் பூரணமாக உயர்த்தாமல் சிறுகச் சிறுக உயர்த்த வேண்டும்.

6. மலஜலம் கழிக்கும்போது திக்ர் செய்வதோ, குர்ஆன் ஓதுவதோ கூடாது. மேலும் பேசவும் கூடாது.

7. மலஜலம் கழிக்கும்போது இடது காலின் மீது பாரம் இருக்குமாறு சாய்ந்து உட்கார வேண்டும்.

8. கிப்லாவை முன்னோக்குவது கூடாது. நிர்ப்பந்தத்தின் காரணமாக அவ்வாறிருக்க நேர்ந்தால் மூன்று முழத்திற்குள் திரை இருக்க வேண்டும். இவ்வாறு செய்வது மக்ரூஹ் ஆகும். இயலாத நேரத்தில் செய்து கொள்ளலாம். ஆனால் கிப்லாவின் பக்கம் திரை இல்லாமலிருப்பது ஹராம் (விலக்கப்பட்டது).

9. பலன் தரக்கூடிய மரங்களுக்கு சமீபத்திலும், மக்கள் நடமாடக்கூடிய இடங்களிலும், பொந்துகளிலும் மலஜலம் கழிக்கக் கூடாது.

10. வியாதியஸ்தர்கள், இயலாதவர்களைத் தவிர மற்றவர்கள் நின்று கொண்டு மலஜலம் கழிக்கக் கூடாது.

11. டேலாவினால் மட்டும் சுத்தம் செய்வதாக இருந்தால் மூன்று டேலாவைக் கொண்டு சுத்தம் செய்ய வேண்டும்.

12. டேலாக் கட்டி, தண்ணீர் இவை இரண்டையும் கொண்டு சுத்தம் செய்வது ஏற்றம்.

13. நீண்ட நேரம் தேவையில்லாமல் உட்காரக் கூடாது.

குறிப்பு :- டேலாவினால் மட்டும் சுத்தம் செய்திருந்தால் தன்னுடைய மனைவியுடன் சேர்க்கை செய்வது கூடாது என்று ஷாபியீ நூற்களில் காணப்படுகிறது.

இதன் மற்ற விபரங்களை 'பிக்ஹின் அறிவுக் களஞ்சியம்' (ஷாபியீ-ஹனபி) என்ற நூலில் பார்த்துக் கொள்ளவும்.

பள்ளியினுள் நுழையும்போது ஓதும் துஆ

பள்ளிக்குள் நுழையும் போது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலவாத்துக் கூறி வலது காலை முன் வைத்து கீழ்க்கண்ட துஆவை ஓதவும்:

اَللّٰهُمَّ افْتَحْ لِيْ اَبْوَابَ رَحْمَتِكَ

அல்லாஹும்மFப்த்தஹ்லீ அப்வாப ரஹ்மத்தி(க்)க

பொருள் : அல்லாஹ்வே! உன்னுடைய ரஹ்மத்துடைய வாசலை எனக்கு திறந்து கொடுப்பாயாக!

பள்ளியிலிருந்து வெளிவரும்பொழுது இடது காலை முன் வைத்து கீழ்க்கண்ட துஆவை ஓதவும்.

اَللّٰهُمَّ اِنِّيْٓ اَسْئَلُكَ مِنْ فَضْلِكَ ۵

அல்லாஹும்ம இன்னீ அஸ்அலு(க்)க மின்Fபள்லி(க்)க வரஹ்ம(த்)தி(க்)க

பொருள் :- அல்லாஹ்வே! நிச்சயமாக நான் உன்னுடைய பாக்கியத்தை வேண்டியவனாக வெளியேறுகிறேன்.

ஒளு செய்யும்போது ஓதும் துஆக்கள்

ஒளு செய்ய ஆரம்பிக்கும்போது கீழ்க்கண்ட துஆவை ஓதவும்:

بِسْمِ اللّٰهِ الْعَظِيْمِ وَالْحَمْدُ لِلّٰهِ عَلٰى دِيْنِ الْاِسْلَامِ

பிஸ்மில்லாஹில் அளீமி வல்ஹம்து லில்லாஹி அலா தீனில் இஸ்லாம்

பொருள் :- மகத்தான அல்லாஹு தஆலாவுடைய திருநாமத்தைக் கொண்டு தொடங்குகிறேன். இன்னும் (இப்புகழ்) தீனுல் இஸ்லாத்தின் மீது சகல புகழுரைகளும் அல்லாஹ்வுக்கே உரியது.

கை கழுவும்போது ஓதும் துஆ

اَللّٰهُمَّ اِنِّيْٓ اَسْئَلُكَ الْيُمْنَ وَالْبَرَكَةَ وَاَعُوْذُبِكَ مِنَ الشُّؤْمِ وَالْهَلَاكَةِ ط

அல்லாஹூம்ம இன்னீ அஸ்அலுக்கல்யும்ன வல்பர(க்) க(த்)த வஅஊது(பி)க மினஷ்ஷூமி வல்ஹலா(க்)க(த்)தி

பொருள் :- யா அல்லாஹ்! நிச்சயமாக நான் உன்னிடத்தில் நன்மையையும் பரகத்தையும் வேண்டிக் கொள்கிறேன். இன்னும் உன்னிடத்தில் கஷ்டத்தை விட்டும், நாசத்தை விட்டும் பாதுகாப்புத் தேடுகிறேன்.

வாய் கொப்பளிக்கும்போது ஓதும் துஆ

اَللّٰهُمَّ اَعِنِّيْ عَلٰى تِلَاوَةِ كِتَابِكَ وَكَثْرَةِ الذِّكْرِ
لَكَ وَالشُّكْرِ لَكَ

அல்லாஹூம்ம அஇன்னீ அலா திலாவ(த்)தி கி(த்)தாபி(க்)க வகஸ்ரத்தித் திக்ரில(க்)க வஷ் ஷூக்ரி ல(க்)க

பொருள்:- யா அல்லாஹ்! உன்னுடைய குர்ஆன் ஷரீபை ஓதுவதற்கு எனக்கு இதைக் கொண்டு உதவி செய்வாயாக. உன்னை அதிகமாக தியானம் (திக்ர்) செய்வதற்கும், உன்னை நன்றி செய்வதற்கும் உதவி செய்வாயாக!

மூக்கில் தண்ணீர் செலுத்தும்போது ஓதும் துஆ

اَللّٰهُمَّ اَرِحْنِيْ رَائِحَةَ الْجَنَّةِ وَاَنْتَ عَنِّيْ رَاضٍ ط

அல்லாஹூம்ம அரிஹ்னீ ராஇஹ(த்)தல் ஜன்னத்தி வ அன்த்த அன்னீ ராளின்

பொருள் :- யா அல்லாஹ்! என்னைப் பற்றிப் பொருந்தி இருக்கும் நிலைமையில் நான் சுவர்க்கத்தின் நறுமணத்தை நுகரச் செய்வாயாக!

மூக்கு சிந்தும்போது ஓதும் துஆ

اَللّٰهُمَّ اِنِّيْ اَعُوْذُبِكَ مِنْ رَوَائِحِ النَّارِ وَمِنْ سُوْءِ الدَّارِ

அல்லாஹும்ம அஊதுபி(க்)க மின் ரவாஇஹின்னாரி வமின் ஸூஇத்தாரி

பொருள் :- யா அல்லாஹ்! நரகத்தின் துர்நாற்றத்தை விட்டும் அந்த கெட்ட வீட்டை விட்டும் உன்னிடத்தில் பாதுகாவல் தேடிக் கொள்கிறேன்.

முகத்தைக் கழுவும்போது ஓதும் துஆ

اَللّٰهُمَّ بَيِّضْ وَجْهِيْ يَوْمَ تَبْيَضُّ وُجُوْهُ اَوْلِيَآئِكَ وَلَا تُسَوِّدْ وَجْهِيْ يَوْمَ تَسْوَدُّ وُجُوْهُ اَعْدَآئِكَ

அல்லாஹும்ம பய்யிள் வஜ்ஹீ யவ்ம தப்யள்ளு வுஜூஹு அவ்லியாஇ(க்)க வலா துஸவ்விது வஜ்ஹி யவ்ம தஸ்வத்து வுஜூஹு அஃதாஇ(க்)க

பொருள் :- யா அல்லாஹ்! நீ உன் அடியார்களின் முகங்களை ஒளியுடையதாகச் செய்து வைக்கும் நாளில் என்னுடைய முகத்தையும் ஒளியுடையதாகச் செய்து வைப்பாயாக! மேலும் உன் விரோதிகளின் முகங்களை கறுப்பாக்கி வைக்கும் நாளில் என் முகத்தை கறுப்பாக்கி வைக்காதிருப்பாயாக!

வலது கரத்தை முழங்கை வரை கழுவும்போது ஓதும் துஆ

اَللّٰهُمَّ اَعْطِنِىْ كِتَابِيْ بِيَمِيْنِيْ وَحَاسِبْنِيْ حِسَابًا يَّسِيْرًا ۝

அல்லாஹும்ம அஃதினி கிதாபி பியமீனி வஹா ஸிப்னீ ஹிஸாபன்ய் யஸீரா

பொருள் :- யா அல்லாஹ்! என்னுடைய செயல் ஏட்டை - அஃமால் நாமாவை-என்னுடைய வலக்கரத்தில் கொடுப்பாயாக! இன்னும் என்னுடைய கணக்கை இலேசான கணக்காக வாங்கிக் கொள்வாயாக!

இடது கரத்தை முழங்கை வரை கழுவும்போது ஓதும் துஆ

اَللّٰهُمَّ اِنِّيْ اَعُوْذُ بِكَ اَنْ تُعْطِيَنِيْ كِتَابِيْ بِشِمَالِيْ اَوْمِنْ وَّرَآءِ ظَهْرِيْ

அல்லாஹும்ம இன்னீ அஊதுபி(க்)க, அன் துஃ(த்)தியனீ கிதாபி பிஷிமாலீ அவ்மின்வ் வராஇ ளஹ்ரீ

பொருள் :- யா அல்லாஹ்! என்னுடைய பட்டோலையை என் இடக்கரத்தில் கொடுப்பதை விட்டும், என் முதுகுக்குப் பின்னால் கொடுப்பதை விட்டும் பாதுகாப்புத் தேடிக் கொள்கிறேன்.

தலைக்கு மஸ்ஹு செய்யும்போது ஓதும் துஆ

اَللّٰهُمَّ اَظِلَّنِيْ تَحْتَ ظِلِّ عَرْشِكَ يَوْمَ لَا ظِلَّ اِلَّا ظِلَّ عَرْشِكَ ط

அல்லாஹும்ம அளில்லினீ தஹ்தளில்லி அர்ஷி(க்)க யவ்மலாளில்ல இல்லா ளில்ல அர்ஷி(க்)க

பொருள் :- யா அல்லாஹ்! உன் அர்ஷுடைய நிழலைத் தவிர வேறு நிழலே இருக்கமாட்டாதே! அப்படிப்பட்ட (கியாமத்து) நாளில் என்னை உன்னுடைய அர்ஷுடைய நிழலில் இருக்கச் செய்வாயாக!

காதுக்கு மஸ்ஹு செய்யும்போது ஓதும் துஆ

اَللّٰهُمَّ اجْعَلْ مِنَ الَّذِيْنَ يَسْتَمِعُوْنَ الْقَوْلَ فَيَتَّبِعُوْنَ اَحْسَنَهٗ اَللّٰهُمَّ اَسْمِعْنِيْ مُنَادِيَ الْجَنَّةِ مَعَ الْاَبْرَارِ ط

அல்லாஹும்மஜ்அல்னீ மினல்லதீன யஸ்தமிஊனல் கவ்ல Fபயத்தபிஊன அஹ்ஸனஹு அல்லாஹும்ம அஸ்மிஃனீ முனாதியல் ஜன்னத்தி மஅல் அப்ரார்

பொருள் :- யா அல்லாஹ்! நல்ல வார்த்தைகளைக் கேட்டு அதில் நல்லவற்றைப் பின்பற்றி நடக்கும் நல்லவர்களில் என்னைச் சேர்த்து வைப்பாயாக. யா அல்லாஹ்! உத்தமர்களுடன் சேர்த்து என்னையும் சுவர்க்கத்திற்கு அழைக்கும்படி செய்வாயாக!

கழுத்திற்கு மஸ்ஹு செய்யும்போது ஓதும் துஆ

اَللّٰهُمَّ فُكَّ رَقَبَتِيْ مِنَ النَّارِ وَاَعُوْذُ بِكَ مِنَ
السَّلَاسِلِ وَالْاَغْلَالِ

அல்லாஹும்ம Fபுக்க ர(க்)கப(த்)தீ மினன்னாரி வஅஊது பி(க்)க மினஸ் ஸலாஸிலி வல்அங்லால்

பொருள் :- யா அல்லாஹ்! என்னுடைய கழுத்தை நரகத்திலிருந்து காப்பாற்றுவாயாக. இன்னும் நான் நரகச் சங்கிலிகளை விட்டும் விலங்குகளை விட்டும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன்.

வலது காலை கழுவும்போது ஓதும் துஆ

اَللّٰهُمَّ ثَبِّتْ قَدَمَيَّ عَلٰى صِرَاطِكَ الْمُسْتَقِيْمِ

அல்லாஹும்ம ஸப்பித் கதமய்ய அலா ஸிராத்திகல் முஸ்தகீம்

பொருள் :- யா அல்லாஹ்! என்னுடைய இரு பாதங்களையும் உன்னுடைய நேரான சன்மார்க்கத்தில் நிலைப்படுத்துவாயாக.

இடது காலை கழுவும்போது ஓதும் துஆ

اَللّٰهُمَّ اِنِّيْ اَعُوْذُ بِكَ اَنْ تَزِلَّ قَدَمَيَّ عَلَى
الصِّرَاطِ يَوْمَ تَزِلُّ اَقْدَامُ الْمُنَافِقِيْنَ فِي النَّارِ ط

அல்லாஹும்ம இன்னீ அஊது பி(க்)க அன்த்தஜில்ல கதமய்ய அலஸ்ஸிராத்தில் யவ்ம தஸில்லு அக்தாமுல் முனாபிகீன பின்னார்

பொருள் :- யா அல்லாஹ்! நரகத்தில் முனாபிக்கு (நய வஞ்சகர்)களின் பாதங்கள் சறுக்கிப் போகக்கூடிய (கியாமத்து) நாளில் ஸிராத்துல் முஸ்தகீம் பாலத்தில் என் கால்கள் சறுக்கிப் போகாதிருக்க நான் உன்னிடம் பாதுகாப்புத் தேடிக் கொள்கிறேன்.

ஒளு செய்யும்போது இடையிடையே ஓதும் துஆ

اَللّٰهُمَّ اغْفِرْ لِيْ ذَنْبِيْ وَوَسِّعْ لِيْ فِيْ دَارِيْ وَبَارِكْ لِيْ فِيْ رِزْقِيْ

அல்லாஹும் மஃFபிர்லீ தன்பீ வவஸ்ஸிஃலீ Fபீதாரீ வபாரிக்லீ Fபீரிஸ்கீ

பொருள் :- அல்லாஹ்வே! என்னுடைய பாவத்தை மன்னிப்பாயாக! என் கப்ருடைய வீட்டை விசாலமாக்கி வைப்பாயாக! இன்னும் என்னுடைய உணவில் அபிவிருத்தியைத் தருவாயாக!

ஒளு செய்த பின்பு ஓதும் துஆ

ஒளு செய்த பின்பு வானத்தின் பக்கம் முகத்தை நோக்கி கீழ்க்கண்ட கலிமாவை ஓதவும்.

اَشْهَدُ اَنْ لَّآ اِلٰـهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ

وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ

அஷ்ஹது அன்லாயிலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லா ஷரீக்கலஹு வ அஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரஸுலுஹு

பொருள் :- வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்று நான் சாட்சி கூறுகிறேன். அவன் தனித்தவன். அவனுக்கு இணை யாருமில்லை. இன்னும் நிச்சயமாக முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவனுடைய அடியாரென்றும் இன்னும் அவனுடைய தூதரென்றும் நான் சாட்சி கூறுகிறேன்.

பிறகு இந்த துஆவை ஓதவும்.

اَللّٰهُمَّ اجْعَلْنِيْ مِنَ التَّوَّابِيْنَ وَاجْعَلْنِيْ مِنَ الْمُتَطَهِّرِيْنَ ط

அல்லாஹும்ம மஜ்அல்னீ மினத்தவ்வாபீன வஜ்அல்னீ மினல் மு(த்)த தஹ்ஹிரீன்

பொருள் :- அல்லாஹ்வே! பாவ மன்னிப்புக் கோருபவர்களில் நின்றும் என்னை ஆக்குவாயாக! இன்னும் பரிசுத்தமானவர்களில் நின்றும் என்னை ஆக்குவாயாக!

பிறகு இதை ஓதவும்.

سُبْحٰنَكَ اللّٰهُمَّ وَبِحَمْدِكَ اَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ

إِلَّا أَنْتَ أَسْتَغْفِرُكَ وَأَتُوْبُ إِلَيْكَ ؕ

ஸுப்ஹானக்கல்லாஹும்ம வபிஹம்தி(க்)க அஷ்ஹது அன்லா இலாஹ இல்லா அன்த்த அஸ்தஃFபிரு(க்)க வஅ(த்) தூபு இலைக்க

சிறப்பு :- இந்த துஆவை ஒளு செய்த பின்பு ஓதியவருக்கு சொர்க்கத்தின் எட்டு கதவுகளும் திறக்கப்படுகின்றன. அவர் எந்த வாசல் வழியாகவும் பிரவேசிக்கலாம். சில ரிவாயத்துகளில் மேற்கண்ட கலிமாவை மூன்று தடவைகள் ஓதும்படி குறிப்பிடப்பட்டிருக்கிறது.

குறிப்பு :- மேற்கண்ட மூன்று துஆக்களையும் ஓதின பிறகு முடிவில் ஸலவாத்து ஓதிக் கொள்ளவும்.

சாப்பாட்டின் ஒழுக்கங்களும், அதனுடைய துஆக்களும்

1. சாப்பிடும் முன்பும் சாப்பிட்ட பின்பும் இரு கைகளையும் கழுவி வாய் கொப்பளிக்க வேண்டும்.

2. தஸ்தர்கான் (விரிப்பு) விரிக்க வேண்டும்.

3. சாப்பிடும் முன்பு 'இந்த உணவை அல்லாஹ்தான் அளித்தான். எனவே இந்த உணவின் மூலம் கிடைக்கும் சக்தியை அல்லாஹ்வின் வழியிலே செலவு செய்வேன்' என்று நிய்யத்து வைக்க வேண்டும்.

4. பிறகு துஆ ஓதி சாப்பிட ஆரம்பிக்க வேண்டும்.

5. சாப்பிடும்பொழுது முன் பகுதியில் ஓரமாக சிறு சிறு பிடியாக சாப்பிட வேண்டும்.

6. ஒரு பாத்திரத்தில் பலர் சேர்ந்து சாப்பிடுவது ஏற்றமானது.

7. பலர் சேர்ந்து சாப்பிடும் பொழுது தனக்கு முன்னாலுள்ளதை சாப்பிட வேண்டும். ஆனால் பல தரப்பட்ட உணவுகள் அப்பாத்திரத்திலிருந்தால் தன் மனம் விரும்பியதை எடுத்துச் சாப்பிடலாம். மேலும் தன்னுடன் சேர்ந்து சாப்பிடக்கூடியவர்களும் திருப்தியாக சாப்பிடுவதை கவனித்துச் சாப்பிட வேண்டும்.

8. சாப்பிடும் பொழுது தண்ணீர் பருக நேர்ந்தால் இடது கையில் தாங்கி வலது கையினால் தண்ணீரைப் பருக வேண்டும்.

9. வலது கையினால் சாப்பிட வேண்டும்.

10. சாப்பிடும் பொழுது உணவுப் பொருள்கள் கீழே விழுந்தால் உடனே எடுத்து உட்கொள்ள வேண்டும்.

11. பாத்திரத்தில் வைக்கப்பட்ட உணவுகளில் தனக்கு பிடித்தமில்லாதவையிருந்தால் மௌனமாக இருந்து விட வேண்டும். மேலும் உணவிலுள்ள குறைகளை வெளிப்படுத்தக் கூடாது.

12. இருவரோ அல்லது அதற்கதிகமான நபர்களோ சேர்ந்து உணவருந்தும் பொழுது, தனக்கு உணவு போது மென்றிருந்தாலும் மற்றவர்கள் சாப்பிட்டு முடியும் முன்பு எழுந்திருக்கக் கூடாது. முன்னதாகவே எழுந்திருக்க வேண்டிய நிர்ப்பந்தமேற்பட்டால், மற்றவர்களிடம் அனுமதி வாங்கி எழுந்திருக்க வேண்டும்.

13. மிகவும் சூடுள்ள உணவுகளை உட்கொள்ளக் கூடாது.

14. அத்தஹிய்யாத்து இருப்பு இருத்தல், இடது காலின் பாதத்தின் மீது இடது புட்டத்தை வைத்து, வலது காலை உயர்த்தி வைத்து இருத்தல் அல்லது குந்தி இருத்தல்

ஆகிய ஏதேனுமொரு முறையில் அமர்ந்து உணவு உட்கொள்வதுதான் சிறந்தது.

15. நாற்காலியின் மீதமர்ந்தோ மேஜையின் மீது வைத்தோ உணவுட் கொள்ளுதல் சுன்னத்திற்கு மாற்றமானது.

16. உணவுட் கொள்ளும் பொழுது இடையிடையே விரல்களை சூப்புவதும், மேலும் கையை உன்றிக் கொள்வதும் சிறந்ததல்ல.

17. பள்ளிகளில் பச்சை வெங்காயம் சாப்பிடுவதும் முறையல்ல. மேலும் பள்ளிக்கு வெளியே பச்சை வெங்காயம் சாப்பிட்டிருந்தாலும், அதனுடைய வாடையை நீக்கி விட்டு பள்ளியினுள் பிரவேசிக்க வேண்டும்.

18. உணவுட்கொண்ட பிறகு விரல்களை சூப்பி பாத்திரத்தையும் வழித்து சாப்பிட வேண்டும். மேலும் துஆ ஓதிக் கொள்ள வேண்டும்.

19. சாப்பிட்டு முடிந்ததும் முதலில் உணவு வகைகளையும் விரிப்பையும் (தஸ்தர்கான்) எடுக்க வேண்டும். மேலும் தஸ்தர்கானை எடுத்த பிறகுதான் உணவுட் கொண்டவர்கள் எழுந்திருக்க வேண்டும்.

20. உணவருந்தும் முன்பும் உணவருந்திய பின்பும் சிறிது உப்பை உட்கொள்வது சிறந்ததென்று சில பெரியார்களால் கூறப்பட்டிருக்கிறது.

சிறப்பு:- உணவு உட்கொள்ளும் முன்பு 'பிஸ்மில்லாஹ்' சொல்லா விட்டால் ஷைத்தானும் சேர்ந்து சாப்பிடுகிறான். 'பிஸ்மில்லாஹ்' கூற மறந்தவர்கள் 'பிஸ்மில்லாஹி அவ்வலஹூ வ ஆகிரஹூ' என்று இடையில் கூறி விட்டால் ஷைத்தான் சாப்பிட்டதை வாந்தி எடுத்து விடுகிறான். மேலும் உணவு வைக்கப்பட்ட பாத்திரத்தின்

நடுவில் ரஹ்மத் இறங்குவதால் நடுவில் சாப்பிடாமல் ஓரமாக சாப்பிட வேண்டும். உணவு பாத்திரத்தை விரிப்பின் மீது வைத்து சாப்பிடுவதின் காரணமாக 'பர(க்)கத்' உண்டாகிறது. மேலும் கீழே விழும் உணவை எடுத்துச் சாப்பிட்டால் ஸாலிஹான (நற்கிரியை புரியும்) குழந்தை பிறக்கும். உட்கொண்டிருக்கும் உணவைப் பாத்திரத்தில் மீதம் வைத்தால் அது ஷைத்தானுக்கு உணவாகி விடும். நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சாப்பிட்ட பாத்திரத்தைப் பார்த்தால் சாப்பிட்ட அடையாளமே தெரியாது. அவ்வளவு சுத்தமாக இருக்கும். மேலும் அவர்கள் சாப்பிட்ட பிறகு விரல்கள் சிவக்குமளவு அவ்விரல்களை சூப்புவார்கள். மேலும் விரல்களை சூப்புவதினால் குறைவாக சாப்பிட்டிருந்தாலும் நிறைவு ஏற்படும். அதிகமாக சாப்பிட்டிருந்தாலும் அது ஜீரணித்து விடும்.

உணவருந்தும் பொழுது ஒவ்வொரு கவளத்தை வாயில் வைக்கும் பொழுது,

ஸுப்ஹானல்லாஹ் என்றும்,

(பொருள் :- அல்லாஹ் மிகவும் பரிசுத்தமானவன்)

ஒவ்வொரு கவளம் உணவை விழுங்கியதும்,

அல்ஹம்துலில்லாஹ் என்றும்

(பொருள் :- புகழனைத்தும் அல்லாஹ்விற்கு) கூறுவதினால் நிறைந்த நன்மைகளுண்டு. உணவருந்தும் முன்பும் பின்பும் சிறிது உப்பை உட்கொள்வதினால் பல வியாதிகள் பீடிக்காதென்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

உணவருந்தும் சமயம் இடையிடையே,

"அல்லாஹும்ம வ(க்)கல் ஹம்து வல(க்)கஷ்ஷுக்ரு"

(பொருள் :- அல்லாஹ்வே! உனக்கே புகழ். இன்னும் உனக்கே நன்றி) என்று கூறுவதினால் ஒரு நபிலான-ஏற்றுக்கொள்ளப்பட்ட நோன்பின் நன்மையுண்டு என்று கூறப்படுகிறது.

விருந்துண்ணும் பொழுது கடைபிடிக்க வேண்டிய ஒழுக்கங்கள்

1. விருந்துண்ணக் கூடியவர்கள், விருந்தளிப்பவர் குறிப்பிட்டழைத்த நேரத்தில் சென்று விட வேண்டும்.

2. விருந்தருந்தும் வீட்டிற்கு செல்லும்பொழுது உள்ளே வரும்படி அனுமதி கிடைத்த பிறகு அங்குள்ளவர்களுக்கு ஸலாம் கூறிக் கொண்டு உள்ளே நுழைய வேண்டும்.

3. வீட்டினுள் சென்றமர்ந்ததும் அங்குமிங்கும் நோட்டமிடக் கூடாது.

4. முதன் முதலாக வயதில் முதிர்ந்தவர்களையும் ஆலிம்களையும் அமரச் செய்ய வேண்டும். மேலும் வயது முதிர்ந்த பக்திமான்களை முதலில் கை கழுவச் செய்து, அவருக்கு வலது புறமாக உள்ளவர்களைத் .தொடர்ந்து அவருக்கு இடது புறமுள்ளவரை கடைசியாகக் கை கழுவச் செய்ய வேண்டும். மேலும் உணவு பரிமாறும் போதும் பானங்களைக் குடிக்க செய்யும்போதும் இவ்வாறே செய்ய வேண்டும்.

5. உணவருந்தக் கூடியவர்கள் உணவளிப்பவரிடம் தண்ணீரையும் உப்பையும் தவிர வேறெதையும் கேட்கக் கூடாது.

6. உணவருந்துபவர்கள் தமக்கு தேவையானதை மட்டும் மற்றவர்களை அனுசரித்து தாமே எடுத்துக் கொள்ள வேண்டும். மேலும் தங்களுக்குள் தாங்களாகவே மற்றவருக்கு உணவு வகைகளை எடுத்துப் போடக்கூடாது. ஆனால்

பாத்திரத்திலுள்ள உணவை மொத்தமாக பாத்திரத்துடன் எடுத்துக் கொடுக்கலாம்.

7. உணவுட் கொண்டு முடிந்ததும் சுணக்கமின்றி வெளியேறி விட வேண்டும்.

8. விருந்து கொடுப்பவர்-விருந்துண்டவர்கள் வெளியில் செல்லும் பொழுது, உடன் சென்று வழியனுப்ப வேண்டும்.

உணவு பரிமாறும்போது ஓதும் துஆ

اَللّٰهُمَّ بَارِكْ لَنَا فِيْمَا رَزَقْتَنَا وَقِنَا عَذَابَ النَّارِ

அல்லாஹும்ம பாரிக்லனா Fபீமாரஸக்த்தனா வகினா அதாபன்னார்.

பொருள் :- அல்லாஹ்வே! எங்களுக்கு அளித்தவற்றில் (இந்த உணவில்) அபிவிருத்தியை (பர(க்)கத்தை)யளித்து எங்களை நரக வேதனையை விட்டும் பாதுகாப்பாயாக!

சிறப்பு :- நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உணவு பரிமாறும் பொழுது மேற்கண்ட துஆவை ஓதுவார்கள். (ஹதீஸ்)

சாப்பிட ஆரம்பிக்கும்பொழுது ஓதும் துஆ

بِسْمِ اللّٰهِ وَعَلٰى بَرَكَةِ اللّٰهِ

பிஸ்மில்லாஹி வஅலா பர(க்)க(த்)தில்லாஹி

பொருள் :- அல்லாஹ்வுடைய திருநாமத்தைக் கொண்டும்

அவனுடைய பரக்கத்தைக் கொண்டும் இதைச் சாப்பிடத் தொடங்குகிறேன்.

பிஸ்மில்லாஹ்வை ஆரம்பத்தில் கூற மறந்துவிட்டால் கீழ்க்காணும் துஆவைக் கூற வேண்டும்.

بِسْمِ اللّٰهِ اَوَّلَهٗ وَاٰخِرَهٗ

பிஸ்மில்லாஹி அவ்வலஹு வஆகிரஹு

பொருள் :- அல்லாஹ்வின் திருநாமத்தைக் கொண்டு இதன் ஆரம்பத்திலும் முடிவிலும் கூறுகிறேன்.

சாப்பிட்டு முடிந்தபின் ஓதும் துஆ

اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِيْٓ اَطْعَمَنَا وَسَقَانَا وَجَعَلَنَا

مِنَ الْمُسْلِمِيْنَ ط

அல்ஹம்து லில்லாஹில்லதீ அத்அமனா வஸகானா வஜஅலனா மினல் முஸ்லிமீன்

பொருள் :- எல்லாப் புகழுரைகளும் அல்லாஹ்வுக்கே. அவனே எங்களுக்கு உணவு அளித்தான். தாகம் தீர்த்து வைத்தான். எங்களை முஸ்லிமாகவும் ஆக்கி வைத்தான்.

பிறர் வீட்டில் சாப்பிட்டால் ஓதும் துஆ

اَللّٰهُمَّ اَطْعِمْ مَنْ اَطْعَمَنِيْ وَاسْقِ مَنْ سَقَانِيْ

அல்லாஹும்ம அத்இம் மன் அத்அமனீ வஸ்கி மன் ஸகானீ

பொருள் :- யா அல்லாஹ்! எனக்கு உணவளித்தவருக்கு நீ உணவளிப்பாயாக! எனக்கு தாகம் தீர்த்து வைத்தவருக்கு தாகம் தீர வைப்பாயாக!

பிறகு இந்த துஆவை ஓதவும்:

اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِيْ هُوَ اَشْبَعَنَا وَاَرْوَانَا وَ
اَنْعَمَ عَلَيْنَا وَاَفْضَلَ

அல் ஹம் துலில்லாஹில்லதீ ஹுவ அஷ்பஃனா வஅர் வானா வஅன்-அம அலைனா வஅFப்ளல

பொருள் :- புகழனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது. அவனே நம்முடைய வயிற்றை நிரப்பச் செய்தான். இன்னும் நமக்கு அருட்கொடைகளைத் தந்தான்.

சிறப்பு :- இந்த துஆவை உணவருந்திய பின்பு ஓதினால் மறுமை நாளையில் நாம் அருந்திய உணவைப் பற்றி விசாரணை இருக்காது.

விருந்தளித்தவரின் வீட்டை விட்டு வெளியேறும்போது ஓதும் துஆ

اَللّٰهُمَّ بَارِكْ لَهُمْ فِيْمَا رَزَقْتَهُمْ وَاغْفِرْ لَهُمْ
وَارْحَمْهُمْ ط

அல்லாஹும்ம பாரிக் லஹும் Fபீமா ரஜக்த்தஹும் வங்Fபிர் லஹும் வர்ஹம்ஹும்

பொருள் :- அல்லாஹ்வே! அவருக்கு நீ அளித்தவற்றில்

(உணவில்) பரக்கத்தை அளிப்பாயாக. இன்னும் அவர்களை மன்னித்து அவர்களுக்கு கிருபை செய்வாயாக.

பானங்கள் அருந்தும் ஒழுக்கமும் துஆவும்

1. பானங்களருந்தும் சமயம் அமர்ந்து கொள்ள வேண்டும்.

2. அருந்தக் கூடியவற்றை பார்வையிட வேண்டும்.

3. வலது கையினால் அருந்த வேண்டும்.

4. அருந்தும் சமயம் 'பிஸ்மில்லாஹிர்-ரஹ்மானிர் ரஹீம்' என்று கூற வேண்டும்.

5. ஒரே மூச்சில் குடிக்காமல் எடுத்தெடுத்து முடக்கு முடக்காக குறைந்தது மூன்று முடக்குகளாகக் குடிக்க வேண்டும். (அதிகம் எத்தனை முடக்குகளும் குடிக்கலாம்.)

6. அருந்தக்கூடிய பானங்களில் மூச்சு விடாமல் குடிக்க வேண்டும்.

7. பானங்களருந்தி முடிந்த பின்பு 'அல்ஹம்து லில்லாஹ்' என்று கூற வேண்டும்.

தண்ணீர் அருந்திய பின் ஓத வேண்டிய துஆ

اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِيْ سَقَانِيْ عَذْبًا فُرَاتًا بِرَحْمَتِهٖ
وَلَمْ يَجْعَلْهُ مِلْحًا اُجَاجًا بِذُنُوْبِنَا

அல்ஹம்து லில்லாஹில்லதீ ஸகானீ அத்பன் Fபுராத்தன் பிரஹ்ம(த்)திஹீ வலம் யஜ்அல்ஹு மில்ஹன் உஜாஜன் பிது னூபினா.

பொருள் :- புகழனைத்தும் அல்லாஹ்விற்கே. அவன் எனக்கு மதுரமான மெல்லிய தண்ணீரைப் புகட்டினான். மேலும் எங்களுடைய பாவத்தின் காரணமாக அத்தண்ணீரை உப்பாகவோ கரிப்பாகவோ அவன் உண்டாக்கவில்லை.

ஒருவர் மற்றவருக்காக பானங்களருந்தச் செய்தால் பானமருந்தியவர் கீழ்க்கண்ட துஆவை ஓதவும்.

اَشْرَبَكَ اللّٰهُ شَرَابًا طَهُوْرًا فِى الْجَنَّةِ

அஷ்ரப(க்)கல்லாஹு ஷராபன் தஹூரன் Fபில் ஜன்னா

பொருள் :- அல்லாஹ் சொர்க்கத்தில் பரிசுத்த குடிப்பை உனக்கு குடிக்க வைப்பானாக!

பால் குடித்த பின்பு ஓதும் துஆ

اَللّٰهُمَّ بَارِكْ لَنَا فِيْهِ وَزِدْنَا مِنْهُ

அல்லாஹும்ம பாரிக்லனா Fபிஹி வஜித்னா மின்ஹு

பொருள் :- அல்லாஹ்வே! இதில் எங்களுக்கு அபிவிருத்தியை உண்டாக்குவாயாக! இன்னும் இதிலிருந்து எங்களுக்கு அதிகமாக்கித் தருவாயாக!

புதிய பழங்களைக் கண்டதும் ஓதும் துஆ

اَللّٰهُمَّ بَارِكْ لَنَا فِىْ ثَمَرِنَا وَبَارِكْ لَنَا فِى

مَدِيْنَتِنَا وَبَارِكْ لَنَا فِىْ صَاعِنَا وَبَارِكْ لَنَا فِىْ مُدِّنَا

அல்லாஹும்ம பாரிக்லனா Fபீதமரினா வபாரிக் லனா Fபீமதீனத்தினா வபாரிக்லனா Fபீ ஸாஇனா வபா ரிக்லனா Fபீ முத்தினா

பொருள் :- அல்லாஹ்வே! எங்களுடைய பழங்களில் அபிவிருத்தியை அளிப்பாயாக! இன்னும் எங்களுடைய பட்டணத்தில் அபிவிருத்தியை அளிப்பாயாக!

குறிப்பு :- இந்த துஆவை ஓதின பிறகு அந்த சபையில் அமர்ந்திருப்பவர்களில் மிகவும் குறைந்த வயதுடையவருக்கு முதன் முதலில் அப்பழத்தைக் கொடுக்கவும்.

புதிய ஆடை அணியும்பொழுது ஓதும் துஆ

اَللّٰهُمَّ لَكَ الْحَمْدُ كَمَا كَسَوْتَنِيْهِ اَسْئَلُكَ خَيْرَمَا صُنِعَ لَهٗ وَاَعُوْذُ مِنْ شَرِّهٖ وَشَرِّ مَا صُنِعَ لَهٗ

அல்லாஹும்ம வ(க்)கல் ஹம்து கமா கஸவ்த்தனீஹி அஸ்அலு(க்)க கைரஹு வகைரமாஸுனிஅ லஹு வஅஊது மின்ஷர்ரிஹி வஷர்ரி மாஸுனிஅ லஹு

பொருள் :- அல்லாஹ்வே! புகழனைத்தும் உனக்கே உரியது. இந்த உடையை நீ எனக்கு அளித்ததைப் போன்று இந்த உடையில் நின்றும் நலவையும், இன்னும் இது எதற்காக செய்யப்பட்டதோ அதனின் நன்மையையும் உன்னிடம் வேண்டுகிறேன். இன்னும் இதனுடைய தீங்கை விட்டும், மேலும் இது எதற்காக செய்யப்பட்டதோ அதன் தீங்கை விட்டும் பாதுகாப்பு தேடுகிறேன்.

குறிப்பு :- உடைகளைக் களையும் பொழுது 'பிஸ்மில்லாஹ்' என்று கூற வேண்டும். இவ்வாறு கூறியவருடைய வெட்கத்தலத்தை ஷைத்தானால் பார்க்க முடியாது.

இந்த துஆவையும் ஓதலாம்

اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِيْ كَسَانِيْ مَا أُوَارِيْ بِهٖ عَوْرَتِيْ وَأَتَجَمَّلُ بِهٖ فِيْ حَيَاتِيْ

அல்ஹம்து லில்லாஹில்லதீ கஸானீ மாஉவாரீ பிஹீ அவ்ர(த்)தீ வஅ(த்)த ஜம்மலு பிஹீ பீஹயாத்தி

பொருள் :- எல்லாப் புகழுரைகளும் அல்லாஹ்வுக்கே! அவனே என்னுடைய மானத்தை மறைக்கும்படியான உடையை அளித்தான். அதைக் கொண்டு என்னுடைய வாழ்க்கையை அலங்கரித்துக் கொள்கிறேன்.

சிறப்பு :- நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றதாக உமர் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள்: புதிய உடை அணியும்போது இந்த துஆவை ஓதி உடையை அணிந்த பிறகு, பழைய உடையை எவர் தர்மம் செய்வாரோ அவருக்கு இந்த

உலகத்திலும் மறுமையிலும் அல்லாஹ்வுடைய உதவி கிடைக்கும். மேலும் முஸீபத்துக்களை விட்டும் பாதுகாக்கப்படுவதுடன், பாவங்களை விட்டும் மன்னிக்கப்படுவார்.

ஆடைகளை அணியும்போது ஓதும் துஆ

اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِيْ كَسَانِيْ هٰذَا وَرَزَقَنِيْهِ
مِنْ غَيْرِ حَوْلٍ مِّنِّيْ وَلَا قُوَّةٍ

அல்ஹம்து லில்லாஹில்லதீ கஸானீ ஹாதா வரஜகனீஹி மின் ஙைரி ஹவ்லின்(ம்) மின்னீ வலாக் குவ்வ(த்)தின்

பொருள் :- எனக்கு ஆடை அணிவித்த அல்லாஹ்வுக்கே புகழனைத்தும். இன்னும் என்னுடைய சக்தியோ முயற்சியோ இல்லாமலிருந்தும் ஆடையை எனக்கு அளித்தான்.

சிறப்பு:- ஆடையை அணியும்பொழுது இந்த துஆவை ஓதுவதினால், அவருடைய முன் பின் பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன.

மற்றவர் புதிய உடை அணிந்திருப்பதைக் கண்டால் கீழ்க்கண்ட துஆவை ஓதவும்.

“(த்)துப்லீ வயுக்லிFபுல்லாஹு”

பொருள் :- அல்லாஹ் உன்னுடைய வயதில் முன்னேற்றத்தை அளிப்பானாக! ஏனென்றால் நீ இந்த உடையை பழையதாக்குவதற்காக வேண்டி. மேலும் அல்லாஹ் இன்னும் ஆடைகளை அளிப்பானாக!

கண்ணாடியில் முகத்தைப் பார்க்கும்போது ஓதும் துஆ

اَللّٰهُمَّ اَنْتَ حَسَّنْتَ خَلْقِىْ فَحَسِّنْ خُلُقِيْ

அல்லாஹும்ம அன்த்த ஹஸ்ஸன்த்த கல்கீ Fபஹஸ்ஸின் குல்(க்)கீ

பொருள் :- நாயனே! நீ என் வெளித் தோற்றத்தை அழகுபடுத்தியது போன்று என் குணங்களையும் அழகு படுத்துவாயாக.

பயணத்தின் ஒழுக்கங்களும், துஆக்களும்

பயணமாகக் கூடியவருக்காக ஓதும் துஆ

اَسْتَوْدِعُ اللّٰهَ دِيْنَكَ وَاَمَانَتَكَ وَخَوَاتِيْمَ عَمَلِكَ

அஸ்தவ்திஉல்லாஹ தீன(க்)க வஅமான(த்)த(க்)க வகவாத்தீம அமலி(க்)க

பொருள் :- நான் உன்னுடைய தீனையும் உன்னிடமுள்ள அமானத்துக்களையும் உன்னுடைய காரியங்களின் முடிவையும் அல்லாஹு தஆலாவுடைய பொறுப்பில் ஒப்படைக்கிறேன்.

பயணமானவுடன் அப்பயணிக்காக ஓதும் துஆ

زَوَّدَكَ اللّٰهُ التَّقْوٰى وَغَفَرَلَكَ ذَنْبَكَ وَيَسَّرَ

لَكَ الْخَيْرَ حَيْثُ كُنْتَ

ஐவ்வத(க்)கல்லாஹூத் தக்வா வஙFபரல(க்)க தன்ப(க்)க வயஸ்ஸரல(க்)கல் கைர ஹைஸு(க்) குன்த்த

பொருள் :- அல்லாஹ்வுக்கு வழிபடுவதை உன்னுடைய பயணப் பொருள்களாக ஆக்குவானாக! உன்னுடைய பாவத்தை மன்னிப்பானாக. இன்னும் நீ எங்கு சென்றாலும் அங்கு உனக்கு நல்லவற்றை இலகுவாக்குவானாக!

பயணி சென்ற பிறகு அப்பயணிக்காக ஓதும் துஆ

اَللّٰهُمَّ اَطْوِ لَهُ الْبُعْدَ وَهَوِّنْ عَلَيْهِ السَّفَرَ

அல்லாஹூம்ம அத்விலஹூல் புஃத வஹவ்வின் அலைஹிஸ்ஸFபர

பொருள் :- அல்லாஹ்வே! செல்லக்கூடியவருடைய வழியை விரைவில் கடக்கச் செய்வாயாக! அவருடைய பயணத்தை இலகுவாக்கி வைப்பாயாக!

பயணமனுப்பியவருக்கு பயணி ஓதும் துஆ

اَسْتَوْدِعُكُمُ اللّٰهَ الَّذِىْ لَا تَضِيْعُ وَدَائِعُهٗ

அஸ்தவ்திஉ(க்)குமுல்லாஹல்லதீ லா(த்)தளீஉ வதாஇஅஹூ

பொருள் :- உங்களை அல்லாஹ்விடம் ஒப்படைக்கிறேன். அவனுடைய பொறுப்பில் ஒப்படைக்கக்கூடிய பொருள்கள் வீணாகுவதில்லை.

பயணம் தொடங்கும் பொழுது ஓதும் துஆ

اَللّٰهُمَّ بِكَ اَصُوْلُ وَبِكَ اَحُوْلُ وَبِكَ اَسِيْرُ

அல்லாஹும்ம பி(க்)க அஸூலு வபி(க்)க அஹூலு வபி(க்)க அஸீரு

பொருள் :- அல்லாஹ்வே! உன்னுடைய உதவியைக் கொண்டு பயணத்தை தொடங்குகிறேன். இன்னும் உன்னுடைய உதவியைக் கொண்டே வீடு திரும்புவேன். மேலும் உன் உதவியைக் கொண்டே பயணம் செய்கிறேன்.

பிறகு கீழ்க்கண்ட துஆவை ஓதவும்:

اَللّٰهُمَّ اِنَّا نَسْئَلُكَ فِيْ سَفَرِنَا هٰذَا الْبِرَّ وَالتَّقْوٰي
وَمِنَ الْعَمَلِ مَا تَرْضٰى اَللّٰهُمَّ هَوِّنْ عَلَيْنَا
سَفَرَنَا هٰذَا وَاَطْوِلَنَا بُعْدَهٗ اَللّٰهُمَّ اَنْتَ الصَّا
حِبُ فِي السَّفَرِ وَالْخَلِيْفَةُ فِي الْاَهْلِ اَللّٰهُمَّ اِنِّيْ
اَعُوْذُ بِكَ مِنْ وَّعْثَاءِ السَّفَرِ وَكَاٰبَةِ الْمَنْظَرِ
وَسُوْءِ الْمُنْقَلَبِ فِي الْمَالِ وَالْاَهْلِ وَاَعُوْذُبِكَ
مِنَ الْحَوْرِ بَعْدَ الْكَوْرِ وَدَعْوَةِ الْمَظْلُوْمِ ط

யா அல்லாஹ்! நான் இந்த பிரயாணத்தில் நன்மையான காரியங்களையும் அல்லாஹ்வுக்கு வழிப்படுதலையும் கோருகிறேன். மேலும் அதனால் பொருந்திக் கொள்ளக்கூடிய அமல்களைச் செய்ய உன்னிடத்தில் வேண்டுகிறேன்! இறைவனே! எங்களுடைய பயணத்தை நீ சுலபமாக்கி வைத்து எங்களுக்கு அதன் அதிக தூரத்தை சுருக்கித் தருவாயாக! யா அல்லாஹ்! நீயே எங்கள் பயணத்தில் உடன் இருப்பவன். மேலும் எங்களுடைய வீடு வாசல்களையும் காப்பாற்றக் கூடியவனும் நீயே! யா அல்லாஹ்! பிரயாணத்தில் ஏற்படும் கஷ்டங்களை விட்டும், தீய பார்வைகளை விட்டும், பயணத்திலிருந்தும் திரும்பிய பின் எங்களின் பொருள்களிலும், குடும்பத்தினர்களிலும் நஷ்டத்தைப் பார்ப்பதை விட்டும், காரியம் கை கூடியும் அதில் கெடுதிகள் சம்பவிப்பதை விட்டும், அநீதம் இழைக்கப்பட்டவனின் சாபத்தை (பத்வாவை) விட்டும் உன்னிடத்தில் காவல் தேடுகிறேன்.

பஸ், இரயில் நிலையங்களில்

أَعُوْذُ بِكَلِمَاتِ اللّٰهِ التَّامَّاتِ مِنْ شَرِّ مَا خَلَقَ

அஊது பிகலிமாத்தில்லாஹித் தாம்மாத்தி மின் ஷர்ரி மாகலக்

பொருள் :- அல்லாஹு தஆலாவின் அனைத்து கலிமாவின் காரணமாக, அல்லாஹ்விடம் அவனுடைய படைப்புகளின் தீங்கை விட்டும் பாதுகாவல் தேடுகிறேன்.

வாகனத்தில் செல்வதின் ஒழுக்கங்கள்

வாகனத்தில் ஏறும்பொழுது 'பிஸ்மில்லாஹ்' என்று கூறி வலது காலை முன் வைத்து வாகனத்தில் ஏறி அமர்ந்ததும் 'அல்ஹம்துலில்லாஹ்' (புகழனைத்தும் அல்லாஹ்விற்கே) என்று கூறவும். பிறகு இந்த துஆவை ஓதவும்.

سُبْحَانَ الَّذِيْ سَخَّرَلَنَا هٰذَا وَمَا كُنَّا لَهٗ مُقْرِنِيْنَ وَاِنَّا اِلٰى رَبِّنَا لَمُنْقَلِبُوْنَ ۵

சுப்ஹானல்லதீ சக்கரலனா ஹாதா வமா குன்னா லஹு முக்ரினீன் வஇன்னா இலா ரப்பினா லமுன்கலிபூன்

பொருள் :- எங்களின் சக்தியால் வசப்படுத்திக் கொள்ள முடியாத வாகனத்தை எங்களுக்கு வசப்படுத்தி தந்த அல்லாஹ்வை துதி செய்கிறோம்.

பிறகு 'அல்ஹம்துலில்லாஹ்' மூன்று தடவை, 'அல்லாஹு அக்பர்' மூன்று தடவை ஓதவும். பிறகு கீழ்க் கண்ட துஆவை ஓதவும்.

سُبْحَانَكَ اِنِّيْ ظَلَمْتُ نَفْسِيْ فَاغْفِرْلِيْ فَاِنَّهٗ لَا يَغْفِرُ الذُّنُوْبَ اِلَّا اَنْتَ

ஸுப்ஹான(க்)க இன்னீளலம்த்து நFப்ஸீ FபஃஃFபிர்லீFப இன்னஹூ லாயஃஃFபிருத் துனூப இல்லா அன்த்த

பொருள் :- அல்லாஹ்வே! எனக்கு நானே தீங்கிழைத்துக் கொண்டேன். எனவே என்னை மன்னிப்பாயாக! பாவங்களை உன்னைத் தவிர மன்னிப்பவன் (வேறு) யாருமில்லை.

பிரயாண நேரத்தில் கீழ்க்கண்ட ஸூராக்களை ஓதிக்கொள்ளவும்.

قُلْ يٰۤاَيُّهَا الْكٰفِرُوْنَ ۝ اِذَا جَآءَ نَصْرُ اللّٰهِ ۝

قُلْ هُوَ اللّٰهُ اَحَدٌ ۝ قُلْ اَعُوْذُ بِرَبِّ الْفَلَقِ ۝
قُلْ اَعُوْذُ بِرَبِّ النَّاسِ ۝

1. 'குல்யா அய்யுஹல் காFபிரூன்'
2. 'இதாஜாஅ நஸ்ருல்லாஹ்'
3. 'குல்ஹுவல்லாஹு அஹத்'
4. 'குல்அஊது பிரப்பில் Fபலக்'
5. 'குல்அஊது பிரப்பின்னாஸ்'

ஒவ்வொரு ஸூராவின் ஆரம்பத்திலும் 'பிஸ்மில்லாஹ்' வுடன் ஆரம்பிக்க வேண்டும். குல்அஊது பிரப்பின்னாஸ் ஓதி முடித்த பிறகும் 'பிஸ்மில்லாஹ்' ஒரு முறை கூற வேண்டும்.

குறிப்பு :- வாகனத்தில் அமர்வதற்கு இடம் கிடைக்காவிட்டாலும் இந்த முறைகளையே பின்பற்ற வேண்டும். மேலும் இரயில், பஸ், கார், சைக்கிள், குதிரை இது போன்ற எந்த வாகனத்தில் சென்றாலும் ஓத வேண்டியவற்றை முறைப்படி ஓதிக் கொள்ள வேண்டும்.

மேலும் பயணத்திலிருக்கும் சமயம் துன்யாவின் பேச்சுக்களை தூரமாக்கி விட்டு, அல்லாஹ்வின் பக்கம் சிந்தனையை செலுத்த வேண்டும். இவ்வாறு கடைப்பிடிப்பவருடன் மலக்குகளும் சேர்ந்திருப்பார்கள். எவர் பயண சமயத்தில் தேவையற்ற விஷயங்களில் ஈடுபடுவாரோ அவருடன் ஷைத்தானும் சேர்ந்திருப்பான். பிரயாண நேரத்தில் விரோதிகளின் பயமேற்பட்டால், 'லி ஈலாFபிகுரைஷின்' ஸூராவை ஓதிக் கொள்ளும்படி குறிப்பிடப்பட்டிருக்கிறது.

பயணமாகுமுன் தன்னுடைய வீட்டில் இரண்டு ரக்அத் நபில் தொழுது கொள்வது முஸ்தஹப்பு. பயண சமயங்களில் உயரமான இடத்தில் செல்ல நேர்ந்தால், 'அல்லாஹு அக்பர்' என்றும், தாழ்வான இடங்களில் செல்ல நேர்ந்தால், 'ஸுப்ஹானல்லாஹ்' என்றும், தண்ணீர் அல்லது மைதானங்களில் செல்ல நேர்ந்தால் 'லா இலாஹ இல்லல் லாஹு வல்லாஹு அக்பர்' என்றும் கூற வேண்டும்.

பயணத்தில் இரவை அடைந்தவர் ஓதும் துஆ

يَا اَرْضُ رَبِّيْ وَرَبُّكَ اللّٰهُ اَعُوْذُ بِاللّٰهِ مِنْ شَرِّكِ وَشَرِّ
مَا خُلِقَ وَشَرِّ مَا يَدِبُّ عَلَيْكِ وَاَعُوْذُ بِاللّٰهِ مِنْ
اَسَدٍ وَّاَسْوَدَ وَمِنَ الْحَيَّةِ وَالْعَقْرَبِ وَمِنْ شَرِّ
سَاكِنِي الْبَلَدِ وَمِنْ وَّالِدٍ وَّمَا وَلَدَ ط

பொருள் :- ஏ பூமியே! என்னுடைய, இன்னும் உன்னுடைய இரட்சகன் அல்லாஹ்வாக இருக்கிறான். நான் உன்னுடைய தீங்கிலிருந்தும், இன்னும் உன் மீது செல்லக் கூடியவற்றின் தீங்கிலிருந்தும் அல்லாஹ்விடமே பாதுகாப்புத் தேடுகிறேன். இன்னும் சிங்கம், தேள், பாம்பு இவற்றின் தீங்கிலிருந்தும், இன்னும் இந்த ஊரில் வசிப்பவர்கள், அவர்களின் தந்தை, இன்னும் பிள்ளைகளின் தீங்குகளிலிருந்தும் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகிறேன்.

பயணத்தில் ஸஹர் நேரத்தின் போது ஓதும் துஆ

سَمِعَ سَامِعٌ بِحَمْدِ اللّٰهِ وَنِعْمَتِهِ وَحُسْنِ بَلَآئِهِ عَلَيْنَا رَبَّنَا صَاحِبْنَا وَاَفْضِلْ عَلَيْنَا عَائِذًا بِاللّٰهِ مِنَ النَّارِ ۵

ஸமிஅ ஸாமிஉன் பிஹம்திலாஹி வனிஃம(த்)திஹி வஹுஸ்னி பலாஇஹி அலைனா ரப்பனா ஸாஹிப்னா வஅFப்ளில் அலைனா ஆஇதன் பில்லாஹி மினன்னார்

பொருள்:- அல்லாஹ்வின் புகழை பேசியதையும், அவனுடைய நிஃமத்தை எடுத்துச் சொல்லியதையும், இன்னும் அவன் நம்மை நல்ல நிலையில் வைத்திருக்கும் விஷயத்தில் அவனிடத்தில் நாம் உறுதி எடுத்துக் கொண்டதையும் கேட்கக்கூடியவன் கேட்டுக் கொண்டான். எங்களின் இரட்சகனே! எங்களுடனே இருப்பாயாக! எங்களின் மீது அருளைப் பொழியச் செய்வாயாக! அல்லாஹ்வைக் கொண்டு நரகத்தை விட்டும் பாதுகாப்பு தேடியவனாக.

குறிப்பு :- மேற்கண்ட துஆவை உயர்ந்த சப்தத்துடன் ஓத வேண்டுமென்றும், மேலும் மூன்று தடவைகள் ஓத வேண்டுமென்றும் சில அறிவுப்புகளில் காணப்படுகின்றது.
(ஹதீஸ்)

கடலில் பயணமாகும்போது ஓதும் துஆ

بِسْمِ اللّٰهِ مَجْرِهَا وَمُرْسٰهَا اِنَّ رَبِّيْ لَغَفُوْرٌ رَّحِيْمٌ وَمَا قَدَرُوا اللّٰهَ حَقَّ قَدْرِهٖ وَالْاَرْضُ جَمِيْعًا قَبْضَتُهٗ

يَوْمَ الْقِيٰمَةِ وَالسَّمٰوٰتُ مَطْوِيّٰتٌۢ بِيَمِيْنِهٖ
سُبْحٰنَهٗ وَتَعٰلٰى عَمَّا يُشْرِكُوْنَ ۝

பிஸ்மில்லாஹி மஜ்ரேஹா வமுர்ஸாஹா இன்ன ரப்பீ லஙFபூருர் ரஹீம். வமா கதருல்லாஹ ஹக்க கத்ரிஹி வல் அர்ளு ஜமீஅன் கப்ள(த்)துஹூ யவ்மல் கியா ம(த்)தி வஸ்ஸமாவாத்து மத்விய்யாத்துன் பியமீனிஹி ஸுப்ஹானஹூ வதஆலா அம்மா யுஷ்ரி(க்)கூன்.

பொருள் :- அலலாஹ்வுடைய திருநாமத்தைக் கொண்டு இது (கப்பல், தோணி) செல்லக்கூடியதாகவும், சென்று தங்கக்கூடியதாகவும் அமைந்திருக்கிறது. நிச்சயமாக என்னுடைய இரட்சகன் மன்னிப்பவனாகவும் அருள் பாலிப்பவனாகவும் இருக்கிறான். அல்லாஹு தஆலாவை மதிக்க வேண்டிய மதிப்பின்படி மக்கள் மதிக்கவில்லை. பூமியனைத்தையும் கைவசப்படுத்தி வைத்திருக்கிறான். கியாமத் நாளையும் ஆதிக்கம் கொண்டிருக்கிறான். வானங்களையெல்லாம் அவன் தன் வலக்கையில் சுருட்டி வைத்திருக்கிறான். இணை வைப்பதை விட்டும் அல்லாஹு தஆலா மிகவும் பரிசுத்தமானவனாக இருக்கிறான்.

செல்லக்கூடிய ஊர் தென்படும் சமயம் ஓதும் துஆ

اَللّٰهُمَّ رَبَّ السَّمٰوٰتِ السَّبْعِ وَمَا اَظْلَلْنَ وَرَبَّ
الْاَرَضِيْنَ السَّبْعِ وَمَا اَقْلَلْنَ وَرَبَّ الشَّيَاطِيْنِ
وَمَا اَضْلَلْنَ وَرَبَّ الرِّيَاحِ وَمَا ذَرَيْنَ فَاِنَّا

نَسْئَلُكَ خَيْرَ هٰذِهِ الْقَرْيَةِ وَخَيْرَ اَهْلِهَا وَنَعُوْذُ بِكَ مِنْ شَرِّهَا وَشَرِّ اَهْلِهَا وَشَرِّ مَا فِيْهَا

அல்லாஹும்ம ரப்பஸ் ஸமாவாத்திஸ்ஸப்இ வமா அள்லல்ன வரப்பல் அர்ளீனஸ்ஸப்இ வமா அக்லல்ன வரப்பஷ் ஷயாத்தீனி வமா அள்லல்ன வரப்பர்ரியாஹி வமா தரைன Fபஇன்னா நஸ்அலு(க்)க கைர ஹாதிஹில் கர்ய(த்)தி வகைரஅஹ்லிஹா வநஊது பி(க்)க மின்ஷர்ரிஹா வஷர்ரி அஹ்லிஹா வஷர்ரி மாFபீஹா

பொருள் :- அல்லாஹ்வே! ஏழு வானங்கள், ஏழு பூமி இன்னும் அவற்றுக்கு நிழல் அளித்த இரட்சகனே! ஏழு பூமி இன்னும் அவற்றை கனமாக்கியதின் இரட்சகனே! ஷைத்தானின்-இன்னும் அவன் வழி கெடுத்தவற்றின் இரட்சகனே! இன்னும் காற்றின் இரட்சகனே! இன்னும் அக்காற்றினால் அடித்துச் செல்லக்கூடியவற்றின் இரட்சகனே! அல்லாஹ்வே! இந்த ஊரில் நலவையும் இன்னும் இங்குள்ளவர்களின் நலவையும் உன்னிடம் வேண்டுகிறோம். இன்னும் இவ்வூரின் தீங்கை விட்டும் இங்குள்ளவர்களின் தீங்கை விட்டும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறோம்.

வாகனத்திலிருந்து இறங்கும்போது ஓதும் துஆ

رَبِّ اَنْزِلْنِيْ مُنْزَلًا مُّبَارَكًا وَّاَنْتَ خَيْرُ الْمُنْزِلِيْنَ

"ரப்பி அன்ஜில்னீ முன்ஜலன் முபார(க்)கன் வஅன்த்த கைருல் முன்ஜிலீன்"

பொருள் :- இரட்சகனே! பரக்கத்தான இறக்குதலாக என்னை இறக்கி வைப்பாயாக! இன்னும் இறக்கி வைப்பவர்களிலேயே நீ மிகவும் மேலானவன்.

பயணத்திலிருந்து ஊருக்குள் புகும்போது ஓதும் துஆ

رَبِّ اَدْخِلْنِىْ مُدْخَلَ صِدْقٍ وَاَخْرِجْنِىْ مُخْرَجَ صِدْقٍ وَاجْعَلْنِىْ مِنْ لَّدُنْكَ سُلْطَانًا نَّصِيْرًا وَقُلْ جَآءَ الْحَقُّ وَزَهَقَ الْبَاطِلُ اِنَّ الْبَاطِلَ كَانَ زَهُوْقًا

பொருள் :- "என் இரட்சகனே! என்னை இந்த ஊருக்குள் நலவுடன் புகச் செய். மேலும் நலவுடன் என்னை வெளிப்படுத்தி வை. இன்னும் எனக்கு உன்னிடமிருந்து உதவியுடன் சேர்ந்த வெற்றியை ஆக்கித் தந்தருள். மேலும் சத்தியம் வந்து விட்டது. அசத்தியம் மறைந்து விட்டது. நிச்சயமாக அசத்தியம் மறைந்தே தீரும்" என்று (நபியே) நீர் கூறுவீராக!

பிறகு கீழ்க்கண்ட துஆவை ஓதவும்.

اَللّٰهُمَّ بَارِكْ لَنَا فِيْهَا

"அல்லா<u>ஹு</u>ம்ம பாரிக்லனா Fபீ<u>ஹா</u>"

பொருள்:- நீ எங்களுக்கு இவ்வூரில் அபிவிருத்தியை (பரக்கத்தை) அருள்வாயாக!

பிறகு கீழ்க்கண்டதை ஓதவும்:

اَللّٰهُمَّ ارْزُقْنَا جَنَاهَا وَحَبِّبْنَا اِلٰى اَهْلِهَا وَحَبِّبْ
صَالِحِىْ اَهْلِهَا اِلَيْنَا

அல்லாஹும்மர்ஜுக்னா ஜனாஹா வஹப்பிப்னா இலா அஹ்லிஹா வஹப்பிப் ஸாலிஹீ அஹ்லிஹா இலைனா

பொருள் :- அல்லாஹ்வே! இவ்வூரிலுள்ள கனி வர்க்கங்களை எங்களுக்களித்தருள்வாயாக! மேலும் இவ்வூரிலுள்ளவர்களின் உள்ளங்களில், எங்கள் மீது அன்பு ஏற்படுத்தி வைப்பாயாக! இவ்வூரிலுள்ள நல்லவர்களின் மீது எங்கள் உள்ளங்களில் அன்புண்டாகும்படி செய்வாயாக!

பயணத்திலிருந்து திரும்பும்போது ஓதும் துஆ

பயணத்திலிருந்து திரும்பும் சமயம் முன்பு ஓதிய 'அல்லாஹும்ம இன்னா நஸ்அலுக்க பீஸபரினா' கடைசி வரை ஓதிய பிறகு (மற்ற) சுன்னத்துக்களையும் கடைப்பிடித்து 'அல்லாஹு அக்பர்' மூன்று முறை கூற வேண்டும்.

பிறகு இந்த துஆவை ஓதவும்.

لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ لَهُ الْمُلْكُ وَلَهُ
الْحَمْدُ وَهُوَ عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ اٰئِبُوْنَ تَائِبُوْنَ
عَابِدُوْنَ سَاجِدُوْنَ لِرَبِّنَا حَامِدُوْنَ صَدَقَ اللّٰهُ
وَعْدَهٗ وَنَصَرَ عَبْدَهٗ وَهَزَمَ الْاَحْزَابَ وَحْدَهٗ

பொருள் :- வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமே இல்லை. அவன் தனித்தவன். அவனுக்கு இணை யாருமில்லை. ஆட்சி அவனுக்கே உரியது. ஒவ்வொரு வஸ்துவின் மீதும் சக்தியுடையவன். நாம் திரும்பக் கூடியவர்கள். நாம் தவறு செய்யக் கூடியவர்கள். நாம் (அல்லாஹ்வை) வணங்கக் கூடியவர்கள். நாம் நம்முடைய இரட்சகனுக்கு ஸஜ்தா செய்யக் கூடியவர்கள்.

நாம் புகழக் கூடியவர்கள். அல்லாஹ் அவனுடைய வாக்குறுதியை உண்மையாக்கினான். இன்னும் அவனுடைய அடியார்க்கு உதவி செய்தான். அவனுக்கு மாற்றமான கூட்டத்தினருக்கு அவன் தனித்து உதவி செய்தான்.

குறிப்பு :- பயணத்திலிருந்து திரும்பும் பொழுது மேட்டின் மீது ஏறும்பொழுது 'அல்லாஹு அக்பர்' என்று மூன்று தடவையும், தாழ்வான இடங்களில் 'ஸுப்ஹானல்லாஹ்' என்று மூன்று தடவையும் ஓதவும்.

பயணத்திலிருந்து திரும்பி தன்னுடைய ஊரையடைந்ததும் கீழ்க்கண்ட துஆவை ஓதவும்:

آيِبُوْنَ تَآئِبُوْنَ عَابِدُوْنَ لِرَبِّنَا حَامِدُوْنَ

ஆயிபூன(த்) தாயிபூன ஆபிதூன லிரப்பினா ஹாமிதூன்

பொருள் :- நாம் திரும்பக் கூடியவர்கள், தவ்பா செய்யக் கூடியவர்கள், (அல்லாஹ்வை) வணங்கக் கூடியவர்கள், நம்முடைய இரட்சகனைப் புகழக் கூடியவர்கள்.

சிறப்பு :- நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பயணத்திலிருந்து ஊர் திரும்பி வந்த சமயம் அது லுஹாவுடைய நேரமாக இருந்தால், முதன் முதலாக பள்ளிக்குச் சென்று தொழுது விட்டு சிறிது நேரம் அங்கு அமர்ந்து விட்டு பிறகுதான் வீட்டிற்குச் செல்வது

வழக்கமாக இருந்தது. நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வியாழக்கிழமைகளில் பயணம் செய்வதைப் பிரியப்பட்டார்கள்.

பயணத்திலிருந்து திரும்பி வந்து வீட்டிற்குள் நுழையும்போது கீழ்க்கண்ட துஆவை ஓதவும்:

آوْبًا آوْبًا لِرَبِّنَا تَوْبًا لَا يُغَادِرُ عَلَيْنَا حَوْبًا ۝

அவ்பன், அவ்பன் லிரப்பினா (த்)தவ்பன் லாயுகாதிரு அலைனா ஹவ்பன்

பொருள்:- நான் திரும்ப வந்துள்ளேன். நான் திரும்ப வந்துள்ளேன். நம் மீது எந்த பாவங்களும் விட்டு வைக்காமல் தவ்பா செய்கிறேன். (தவ்பா-பாவமீட்சி)

கடைத் தெருவில் நுழைந்ததும் ஓதும் துஆ

لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ لَهُ الْمُلْكُ
وَلَهُ الْحَمْدُ يُحْيِيْ وَيُمِيْتُ وَهُوَ حَيٌّ لَّا يَمُوْتُ بِيَدِهِ
الْخَيْرُ وَهُوَ عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ ۝

லா இலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லா ஷரீக்கலஹு லஹுல் முல்க் வலஹுல் ஹம்து யுஹ்யீ வயுமீத்து வஹுவ ஹையுன்லாயமூத்து பியதிஹில கைரு வஹுவ அலா குல்லி ஷைஇன்கதீர்

பொருள்:- அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்கு தகுதியானவன் வேறு யாருமில்லை. அவனுக்கு இணையுமில்லை; துணையுமில்லை. அவனுக்கு அரசாங்கம் உரியது; சகல புகழுரைகளும் அவனுக்கேயுரியது; உயிர் கொடுப்பவனும் இறக்கச் செய்பவனும் அவனே. அவன் உயிர் உள்ளவன். மரணம் அவனை அணுகாது. நற்காரியங்கள் யாவும் அவன் வசமே. படைப்பினங்கள் அனைத்தும் அவன் ஆதிக்கத்தின் கீழ் உள்ளவையாகும்.

சிறப்பு :- எவர் இந்தக் கலிமாவை கடை வீதியில் ஓதுவாரோ அவருக்குப் பத்து இலட்சம் பாவங்கள் மன்னிக்கப்பட்டு, பத்து இலட்சம் நன்மைகள் எழுதப்படுகின்றன. மேலும் பத்து இலட்சம் அந்தஸ்துகள் உயர்த்தப்படுவதுடன், அவருக்காக சொர்க்கத்தில் ஒரு வீடு தயார் செய்யப்படுகிறது.

கடை வீதியில் பொருள்கள் வாங்கும்போது ஓதும் துஆ

بِسْمِ اللّٰهِ اَللّٰهُمَّ اِنِّيْ اَسْئَلُكَ خَيْرَ هٰذِهِ السُّوْقِ

وَخَيْرَ مَا فِيْهَا وَاَعُوْذُ بِكَ مِنْ شَرِّهَا وَشَرِّ مَا فِيْهَا

اَللّٰهُمَّ اِنِّيْ اَعُوْذُ بِكَ اَنْ اُصِيْبَ فِيْهَا يَمِيْنًا فَاجِرَةً

اَوْ صَفْقَةً خَاسِرَةً ؕ

பிஸ்மில்லாஹி அல்லாஹும்ம இன்னீ அஸ்அலு(க்)க கைர ஹாதிஹிஸ்ஸூ(க்)கி வகைரமாFபீஹா வஅஊது பி(க்)க மின் ஷர்ரிஹா வஷர்ரி மா Fபீஹா அல்லாஹும்ம இன்னீ அஊது பி(க்)க அன்உஸீப Fபீஹா யமீனன் Fபாஜிரதன் அவ்ஸப்க(த்)தன் காஸிரா

பொருள் :- அல்லாஹுத் தஆலாவின் திருநாமத்தைக் கொண்டு ஆரம்பிக்கிறேன். யா அல்லாஹ்! நிச்சயமாக நான் உன்னிடம் இந்தக் கடைத் தெருவின் நன்மையை வேண்டிக் கொள்கிறேன். இதில் உள்ள நலனையும் வேண்டுகிறேன். இதன் தீங்கையும், இதிலுண்டாகும் தீங்கையும் விட்டு பாதுகாப்பு வேண்டிக்கொள்கிறேன். யா அல்லாஹ்! நான் இந்தக் கடைத்தெருவில் (கொடுக்கல்-வாங்கலில்) பாவமான சத்தியம் செய்வதை விட்டும், நடவடிக்கைகளை விட்டும் பாதுகாப்பு வேண்டிக் கொள்கிறேன்.

குறிப்பு:- கடையிலிருந்து திரும்பியதும் குர் ஆனிலி ருந்து ஏதேனும் பத்து ஆயத்துக்களை ஓதவும்.

மனதைக் கெடுக்கும் பொருள் தென்பட்டால் ஓதும் துஆ

اَلْحَمْدُ لِلّٰهِ عَلٰى كُلِّ حَالٍ

அல்ஹம்துலில்லாஹி அலா குல்லி ஹால்

பொருள்:- ஒவ்வொரு நிலையிலும் புகழனைத்தும் அல்லாஹ்வுக்கே.

அன்னியப் பெண்களை பார்த்த சமயம் ஓதும் துஆ

اَللّٰهُمَّ اِنِّيْ اَعُوْذُبِكَ مِنْ فِتْنَةِ النِّسَاءِ

அல்லாஹும்ம இன்னீ அஊதுபி(க்)க மின்Fபித்ன(த்) தின்னிஸாஇ

பொருள் :- அல்லாஹ்வே! இந்த பெண்ணிடமிருந்து ஏற்படும் கெடுதியை விட்டும் உன்னிடத்தில் பாதுகாவல் தேடுகிறேன்.

குறிப்பு :- அன்னியப் பெண்களின் எந்த உறுப்பையும் உற்று நோக்கக் கூடாது. மேலும் அவர்களின் நகத்தைக் கூட

பார்க்கக் கூடாது. ஆனால் தற்செயலாக அவர்களின் மீது பார்வை விழுந்து விட்டால் இந்த துஆவை ஓதவும். மேலும் மற்ற சமயங்களிலும் இந்த துஆவை ஓதி வரலாம். மஹ்ரமான பெண்களைத் தவிர வேறு எந்த அன்னிய பெண்களுடனும் தனிமையில் இருப்பது குற்றமாகும். சிறிய தந்தை, பெரிய தந்தையின் பிள்ளைகள், சின்னம்மா, பெரியம்மாவின் பிள்ளைகள், சகோதரி முறையானாலும் அவர்களை திருமணம் செய்து கொள்வது ஆகுமாதலால் அவர்களுடனும், கொளுந்தியாளுடனும் அன்னிய பெண்களுக்குள்ள சட்டத்தையே பின்பற்ற வேண்டும். பெண்கள் அன்னிய ஆண்களைப் பார்க்கக் கூடாது.

மணமக்களை வாழ்த்த ஓதும் துஆ

பாரக்க அலைக்குமா வஜமஅ

பைனகுமா பீ கைரின்

பொருள்:- அல்லாஹ் உங்களுக்கு பரக்கத் (அபிவிருத்தி) கொடுப்பானாக! மேலும் உங்கள் இருவர் மீதும் பரக்கத்தைச் சொரிவானாக! மேலும் உங்கள் இருவரையும் பரிபூரண நட்புடன் கூடி வாழ நன்மை செய்வானாக.

திருமணம் ஆன புதுப் பெண்ணை அழைத்து வந்த சமயம் ஓதும் துஆ

اَللّٰهُمَّ اِنِّىْ اَسْئَلُكَ خَيْرَهَا وَخَيْرَ مَا جَبَلْتَهَا
عَلَيْهِ وَاَعُوْذُبِكَ مِنْ شَرِّهَا وَشَرِّ مَا جَبَلْتَهَا
عَلَيْهِ ط

அல்லாஹும்ம இன்னீ அஸ்அலு(க்)க கைரஹா வகைர மாஜபல்த்தஹா அலைஹி வஅஊது பி(க்)க மின்ஷர்ரிஹா வஷர்ரிமா ஜபல்த்தஹா அலைஹி

பொருள்:- யா அல்லாஹ்! நிச்சயமாக நான் உன்னிடம் இவளிலிருந்து நன்மையை வேண்டிக் கொள்கிறேன். இவளுடைய இயற்கை சுபாவத்தின் மீது நன்மையை வேண்டுகிறேன். இன்னும் இவளிடமிருந்து உண்டாகும் தீமையை விட்டும், இவள் மீது இயற்கையாலுண்டாகும் தீமையை விட்டும் உன்னிடம் பாதுகாப்பு வேண்டிக் கொள்கிறேன்.

குறிப்பு :- ஏதேனுமொரு மிருகத்தை வீட்டிற்கு வாங்கி வந்தாலும் இந்த துஆவையே ஓதவும். மேலும் புதுப்பெண்ணை வீட்டிற்கழைத்து வந்த சமயம் மேற்கண்ட துஆவை ஓதுவதுடன், அப்பெண்ணின் முன் நெற்றி ரோமத்தைப் பிடித்து பரக்கத்திற்காக துஆ செய்யவும்.

மனைவியுடன் சேரும்போது (மனதிற்குள்) ஓதும் துஆ

بِسْمِ اللّٰهِ اَللّٰهُمَّ جَنِّبْنَا الشَّيْطَانَ وَجَنِّبِ
الشَّيْطَانَ مَارَزَقْتَنَا

பிஸ்மில்லாஹி அல்லாஹும்ம ஜன்னிப்னஷ் ஷைத்தான வஜன்னிபிஷ் ஷைத்தான மாரஜக்தனா

பொருள் :- அல்லாஹ்வுடைய திருநாமத்தைக் கொண்டு இதை ஆரம்பிக்கிறேன். யா அல்லாஹ்! எங்களை ஷைத்தானுடைய தீங்கை விட்டும் தூரமாக்கி வைப்பாயாக! இன்னும் இதனால் எங்களுக்கு அளிக்கும் (புத்திர) சந்ததிகளையும் ஷைத்தானை விட்டும் தூரமாக்கி வைப்பாயாக! (ஆமீன்).

இந்திரியம் வெளியாகும்போது ஓதும் துஆ

اَللّٰهُمَّ لَا تَجْعَلْ لِلشَّيْطَانِ فِيْمَا رَزَقْتَنِيْ نَصِيْبًا

அல்லாஹும்ம லா(த்)தஜ்அல் லிஷ்ஷைத்தானி Fபீமா ரஜக்தனீ நஸீபா

பொருள் :- அல்லாஹ்வே! நீ எனக்கு அளித்துள்ள செல்வத்திலிருந்து ஷைத்தானுக்கு விட்டு விடாதே.

குழந்தை பிறந்ததும் செய்ய வேண்டியவை

குழந்தை பிறந்ததும் கழுவி சுத்தம் செய்த பிறகு பாங்கு கூறி வலது காதிலும், இகாமத் கூறி இடது காதிலும் ஓதி ஊத வேண்டும். தக்வாவுடையவர்கள் ஈத்தம் பழத்தை சுவைத்து குழந்தையின் வாயில் வைக்கவும். பிறகு குழந்தைக்காக பரக்கத்துடைய துஆ செய்யவும். ஏழாம் நாள் அகீக்கா கொடுக்கவும். அப்பிள்ளைக்கு ஏழாம் நாள் பெயர் வைப்பது சுன்னத்து. மேலும் பிள்ளைப் பிறந்து ஏழாம் நாள் அப்பிள்ளையின் தலை முடியை இறக்கி அம்முடியின் எடைக்கு தங்கம் அல்லது வெள்ளி தர்மம் செய்வது சுன்னத்து. அகீக்கா என்றால் ஆண் குழந்தைக்கு இரண்டு ஆடுகளும், பெண் குழந்தைக்கு ஓர் ஆடும் அறுத்துக் கொடுப்பது. ஏழாம் நாள் அகீக்கா கொடுக்க விடுபட்டால் வயது வந்த பிறகும் கொடுக்கலாம். அகீக்காவின் மற்ற விஷயங்களை பிக்ஹின் அறிவுக் களஞ்சியம் என்ற புத்தகத்தில் பார்த்துக் கொள்ளவும்.

குழந்தை பேச ஆரம்பித்ததும் ஓதும் துஆ

'லாஇலாஹ இல்லல்லாஹு' என்ற கலிமாவைக் கற்று கொடுக்கவும். அக்குழந்தை நன்றாகப் பேச ஆரம்பித்ததும் கீழ்க்கண்ட ஆயத்தையும் கற்றுக் கொடுக்கவும்.

لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَقُلِ الْحَمْدُ لِلّٰهِ الَّذِيْ لَمْ يَتَّخِذْ
وَلَمْ يَكُنْ لَّهٗ شَرِيْكٌ فِي الْمُلْكِ وَلَمْ يَكُنْ لَّهٗ وَلِيٌّ
مِنَ الذُّلِّ وَكَبِّرْهُ تَكْبِيْرًا

(மழையின்) மேகம் தென்பட்டால் ஓதும் துஆ

اَللّٰهُمَّ اِنَّا نَعُوْذُ بِكَ مِنْ شَرِّ مَا اُرْسِلَ بِهٖ اَللّٰهُمَّ
صَيِّبًا نَّافِعًا

அல்லாஹும்ம இன்னா நஊது பி(க்)க மின் ஷர்ரி மாஉர்ஸிலபிஹீ அல்லாஹும்ம ஸய்யிபன் நாFபிஆ

பொருள் :- அல்லாஹ்வே! உன்னால் அனுப்பப்பட்டவற்றின் தீங்கிலிருந்து உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன். அல்லாஹ்வே! பயனளிக்கக்கூடிய மழையைப் பொழிவிப்பாயாக!

மழை பொழியும் பொழுது ஓதும் துஆ

اَللّٰهُمَّ صَيِّبًا نَّافِعًا

அல்லாஹும்ம ஸய்யிபன் நாFபிஆ

பொருள :- அல்லாஹவே! இதை அதிகமாகப் பொழியச் செய்து நற்பலனையுண்டாக்குவாயாக!

இடி முழக்கத்தைக் கேட்கும்போது ஓதும் துஆ

اَللّٰهُمَّ لَا تَقْتُلْنَا بِغَضَبِكَ وَلَا تُهْلِكْنَا بِعَذَابِكَ وَعَافِنَا قَبْلَ ذَالِكَ

அல்லாஹும்ம லாதக்த்துல்னா பிஙளபிக வலாத் துக் லிக்னா பிஅதா்பிக வஆFபினா கப்லதாலிக

பொருள் :- அல்லாஹ்வே! உன்னுடைய கோபத்தைக் கொண்டு எங்களைக் கொன்று விடாதே! இன்னும் உன்னுடைய வேதனையைக் கொண்டு எங்களை அழித்து விடாதே! இதற்கு முன்பாக எங்களுக்கு நிம்மதியைக் கொடு.

மழை எல்லைக்கு அதிகமாகப் பெய்தால் ஓதும் துஆ

اَللّٰهُمَّ حَوَالَيْنَا وَلَا عَلَيْنَا اَللّٰهُمَّ عَلَى الْاٰكَامِ وَالْاٰجَامِ وَالظِّرَابِ وَالْاَوْدِيَةِ وَمَنَابِتِ الشَّجَرِ

அல்லாஹும்ம ஹவாலயனா வலா அலய்னா அல்லா ஹும்ம அலல் ஆகாமி வல்ஆஹாமி வள்ளிராபி வல்அவ்தி ய(த்)தி வமனா பித்திஷ் ஷஜரி

பொருள்:- யா அல்லாஹ்! எங்களைச் சூழ மழை பொழியச் செய்வாயாக! ஆனால் எங்கள் மீது (கெடுதியாக) பொழியச் செய்யாதே! யா அல்லாஹ்! இன்னும் மேடுகள் மீதும், எங்கள் பாலைவனங்கள் மீதும், மலைகளின் மீதும், கால்வாய்களின் மீதும், மரம், செடி, கொடிகளின் மீதும் (அளவு போல்) மழை பொழியச் செய்வாயாக! (ஆமீன்)

புயல் காற்று அடிக்கும்போது ஓதும் துஆ

اَللّٰهُمَّ اجْعَلْهَا رَحْمَةً وَّلَا تَجْعَلْهَا عَذَابًا اَللّٰهُمَّ اجْعَلْهَا رِيَاحًا وَّلَا تَجْعَلْهَا رِيْحًا

அல்லாஹும்மஜ்அல்ஹா ரஹ்மத்த(ன்)வ் வலா தஜ்அல்ஹா அதாபன் அல்லாஹும்மஜ்அல்ஹா ரியாஹ(ன்)வ் வலாதஜ்அல்ஹாரீஹன்

பொருள்:- அல்லாஹ்வே! இதை அருளாக ஆக்குவாயாக! மேலும் இதை வேதனையாய் ஆக்கி விடாதே! இதை பயனுள்ள காற்றாக ஆக்குவாயாக! நஷ்டத்தை உண்டாக்கும் காற்றாக ஆக்கி விடாதே!

குறிப்பு:- காற்றுடன் இருள் சூழ்ந்தால் குல்அஊது பிரப்பில்பலக், குல்அஊது பிரப்பின்னாஸ் ஆகிய ஸூராக்களை ஓதவும்.

கோபம் வரும்போது ஓதும் துஆ

اَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيْمِ

அஊது பில்லாஹி மினஷ் ஷைத்தானிர் ரஜீம்.

பொருள்:- சபிக்கப்பட்ட ஷைத்தானின் தீங்கை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடுகிறேன்.

குறிப்பு :- கழுதைக் கத்தினாலும், நாய் குரைத்தாலும், 'வஸ்வாஸ்' என்ற எண்ணமேற்பட்டாலும் மேற்கண்டவற்றையே ஓத வேண்டும். இதை தினந்தோறும் பத்து முறை ஓதி வந்தால் ஷைத்தானின் தீங்கிலிருந்து பாதுகாப்பதற்காக அல்லாஹு தஆலா ஒரு வானவரை ஏற்படுத்துகிறான்.

(ஹதீஸ்)

ஒவ்வொரு பொருளிலும் முன்னேற்றம் அடைய ஓதும் துஆ

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ عَبْدِكَ وَرَسُوْلِكَ وَعَلَى الْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنَاتِ وَعَلَى الْمُسْلِمِيْنَ وَالْمُسْلِمَاتِ

அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் அப்தி(க்)க வரஸூலி(க்)க வ அலல் முஃமினீன வல்முஃமினாத்தி வ அலல் முஸ்லிமீன வல்முஸ்லிமா(த்)தி

பொருள் :- அல்லாஹ்வே! உன்னுடைய அடியாரும் தூதருமாகிய ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ரஹ்மத்தைப் பொழிவாயாக! இன்னும் முஃமினான ஆண்கள், முஃமினான பெண்கள் இன்னும் முஸ்லிமான ஆண்கள், முஸ்லிமான பெண்கள் மீதும் உன்னுடைய ரஹ்மத்தைப் பொழிவாயாக!

கடன் சுமை நீங்க ஓதும் துஆ

اَللّٰهُمَّ اِنِّيْ اَعُوْذُ بِكَ مِنَ الْهَمِّ وَالْحُزْنِ وَاَعُوْذُ بِكَ مِنَ الْعَجْزِ وَالْكَسَلِ وَاَعُوْذُ بِكَ مِنَ الْبُخْلِ وَ الْجُبْنِ وَاَعُوْذُ بِكَ مِنْ غَلَبَةِ الدَّيْنِ وَقَهْرِ الرِّجَالِ

அல்லாஹும்ம இன்னீ அஊது பி(க்)க மினல் ஹம்மி வல்ஹுஸ்னி வ அஊது பி(க்)க மினல் இஜ்ஸிவல் கஸ்லி

அஊது பி(க்)க மினல் புக்லி வல்ஜுப்னி வஅஊது பி(க்)க மின் ஙலப(த்) தித்தைனி வகஹ்ரிர் ரிஜால்.

பொருள்:- அல்லாஹ்வே! கோழைத்தனம் ஏற்படுவதை விட்டும், கஞ்சத்தனம் ஏற்படுவதை விட்டும், உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன். மேலும் முதிர்ந்த வயதையடைந்து நான் கஷ்டப்படுவதை விட்டும், உலகிலேற்படும் சோதனையை விட்டும், இன்னும் கப்ருடைய வேதனையை விட்டும் உன்னிடத்தில் நான் பாதுகாவல் தேடுகிறேன்.

சிறப்பு :- நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் ஒருவர் வந்து, "அல்லாஹ்வின் தூதர் அவர்களே! எனக்கு கடன் சுமை ஏற்பட்டு மிகவும் சிரமப்படுகிறேன்" என்று கூறினார். இதைக் கேட்ட நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், "உம்முடைய கடன் சுமைகளும் குறைந்து உம்முடைய கவலைகளும் நீங்குவதற்கு அல்லாஹ் உதவி செய்வான். எனவே இந்த சொற்களை காலையிலும் மாலையிலும் ஓதி வருவீராக" என்று கூறி மேற்கண்ட துஆவை ஓதி வரும்படி அவருக்குக் கூறினார்கள். இதை செவிமடுத்த அந்த மனிதர் தொடர்ந்து ஓதி வந்ததால் கடன் சுமைகள் குறைந்து கவலைகள் நீங்கி விட்டதாக அவரே அறிவித்தார்.

இந்த ஹதீஸை அறிவித்தவர்கள் அபூ ஸஈதுல் குத்ரீ ரலியல்லலாஹு அன்ஹு அவர்கள். நூல் : அபூதாவூத்

கடன் வாங்கியவர் கடனைத் திருப்பிக் கொடுத்தால் ஓதும் துஆ

اَوْفَيْتَنِىْ اَوْفَى اللّٰهُ بِكَ

அவ்ஃபைத்தனீ அவ்Fபல்லாஹு பிக்க

பொருள் :- நீ என்னுடைய கடனை நிறைவேற்றிவிட்டாய் அல்லாஹ் உனக்கு இம்மையிலும் மறுமையிலும் அதிகமாக்கித் தருவானாக!

தனக்கு பிரியமான பொருளைக் கண்டால் ஓதும் துஆ

اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِيْ بِنِعْمَتِهٖ تَتِمُّ الصَّالِحَاتُ ط

அல்ஹம்து லில்லாஹில்லதீ பிநிஃம(த்)திஹி த(த்)திம் முஸ்ஸாலிஹாத்து

பொருள்:- எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே உரியது. அவனுடைய அருட்கொடையைக் கொண்டு நல்லவை பூர்த்தியடைகின்றன.

கஷ்டங்கள் ஏற்படும்போது ஓதும் துஆ

لَآ اِلٰهَ اِلَّآ اَنْتَ سُبْحَانَكَ اِنِّيْ كُنْتُ مِنَ الظّٰلِمِيْنَ ط

லாஇலாஹ இல்லா அன்த்த ஸுப்ஹான(க்)க இன்னீ குன்த்து மினள்ளாலிமீன்

பொருள் :- அல்லாஹ்வே! வணக்கத்திற்குரியவன் உன்னைத் தவிர வேறு யாருமில்லை. நீ பரிசுத்தமானவன். நிச்சயமாக எனக்கு நான் அநியாயம் செய்து கொண்டேன்.

சிறப்பு :- இந்த துஆவை நபி யூனுஸ் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் மீன் வயிற்றினுள் இருக்கும்போது ஓதிவந்தார்கள்.

எவரொருவர் துஆ கேட்கும் பொழுது இந்த துஆவையும் சேர்த்து ஓதுவாரோ அவருடைய துஆ ஏற்றுக் கொள்ளப்படும். நோயுள்ளவர் இந்த துஆவை நாற்பது தடவைகள் ஓதி அந்நோயுடன் மரணித்தால் ஷஹீதுடைய அந்தஸ்தையடைவார்.

கஷ்டங்கள் ஏற்படும்போது ஓதும் மற்ற துஆ

حَسْبُنَا اللّٰهُ وَنِعْمَ الْوَكِيْلُ حَسْبُنَا اللّٰهُ وَنِعْمَ الْوَكِيْلُ

ஹஸ்புனல்லாஹு வநிஃமல் வகீல்

பொருள் :- அல்லாஹ்வே! நமக்குப் போதுமானவன். இன்னும் அவன் மேலான பாதுகாவலன்.

கண் வலி ஏற்படும்பொழுது ஓதும் துஆ

اَللّٰهُمَّ مَتِّعْنِىْ بِبَصَرِيْ وَاجْعَلْهُ الْوَارِثَ مِنِّىْ وَاَرِنِيْ فِى الْعَدُوِّ ثَارِيْ وَانْصُرْنِيْ عَلٰى مَنْ ظَلَمَنِىْ

அல்லாஹும்ம மத்திஃனி பிபஸரீ வஜ்அல்ஹுல் வாரித மின்னீ வஅரினீ Fபில் அதுவ்வி தஃரீ வன்ஸுர்னீ அலாமன் ளலமனீ

பொருள் :- அல்லாஹ்வே! என்னுடைய கண் பார்வையை எனக்கு பிரயோஜனமாக்கி வை. இன்னும் அதை எனக்கு வாரிசாக்கி வை. இன்னும் அதை பகைவர் முன் பலமுடையதாக்கி வை. இன்னும் எனக்கு உதவி செய்தருள். என் மீது அநியாயம் செய்தவருக்கு எதிராக எனக்கு வெற்றியைக் கொடு.

சிறு பிள்ளைகளின் வியாதி நீங்க ஓதும் துஆ

أُعِيْذُكَ بِكَلِمَاتِ اللهِ التَّآمَّةِ مِنْ كُلِّ
شَيْطَانٍ وَّهَامَّةٍ وَّمِنْ كُلِّ عَيْنٍ لَّامَّةٍ ط

உயீதுக பிகலிமாத்தில்லாஹித் தாம்மத்தி மின் குல்லி ஷைத்தானிவ் வஹாம்ம(த்)தின்வ் வமின்குல்லி அய்னில்லாம்மா

3. நினைவில் வைத்துக் கொள்வது கஷ்டமில்லை.

4. நீண்ட வாசகமாகவுமில்லை.

5. இதனை பாடம் செய்வது கஷ்டமில்லை.

6. மீஸான் தராசில் நன்மையின் எடை மிகவும் கனமுள்ளதாக இருக்கும்

7. இந்த கலிமா அல்லாஹ்விற்கு மிகவும் பிரியமானது.

8. இமாம் புஹாரீ ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் புகாரீ என்னும் கிதாபில் இந்த கலிமாவை கொண்டே முடித்து இருக்கிறார்கள்.

9. படைப்பினங்கள் யாவும் இந்த தஸ்பீஹை ஓதுகின்றன.

ஸுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி என்று நூறு முறைகள் ஓதினால் ஓர் இலட்சத்து இருபத்தி நான்காயிரம் நன்மைகள் கிடைக்கும். (ஹதீஸ்)

மேற்கண்ட கலிமாக்களை எந்த நேரத்திலும் மேற்குறிப்பிட்டுள்ள கணக்குப்படியோ அதற்கதிகமாகவோ அவரவரின் வசதிக்கேற்ப ஓதிக் கொள்ளலாம்.

தேள் கடிக்கு செய்ய வேண்டிய கிரியைகள்

தேள் கடியின் விஷம் நீங்குவதற்கு தண்ணீரில் உப்பைக் கரையச் செய்து விரலை அத்தண்ணீரில் நனைத்து தேள் கடித்த இடத்தில் தடவிக் கொண்டு கீழ்க்காணும் ஸூராக்களை ஓதவும்.

قُلْ يَاَيُّهَا الْكٰفِرُوْنَ ۝

1. குல்யா அய்யுஹல் காFபிரூன்

قُلْ اَعُوْذُ بِرَبِّ الْفَلَقِ

2. குல் அஊது பிரப்பில் Fபலக்

قُلْ اَعُوْذُ بِرَبِّ النَّاسِ

3. குல் அஊது பிரப்பின்னாஸ்

முஸாபஹா (கைலாகு) செய்யும்பொழுது ஓதும் துஆ

تَقَبَّلَ اللّٰهُ مِنَّا وَغَفَرَ اللّٰهُ لَنَا وَلَكُمْ

தகப்ப லல்லாஹு மின்னா வஙFபரல்லாஹு லனா வலகும்.

பொருள்:- அல்லாஹ் நம்மைப் பொருந்திக் கொள்வனாக! இன்னும் எங்களையும் உங்களையும் அல்லாஹ் மன்னிப்பானாக!

சிறப்பு :- இரு முஸ்லிம்கள் சந்திக்கும் பொழுது ஒருவருக்கொருவர் முஸாபஹா (கைலாகு) செய்வதின் காரணமாக இருவரின் பாவங்களையும் அல்லாஹ் மன்னித்து விடுகிறான்.

இஃதிகாபின் விளக்கங்களும், துஆவும்

இஃத்திகாப் என்பதற்கு உள்பள்ளியில் தரிபடுவதற்குக் கூறப்படும். எந்த நேரத்தில் பள்ளியினுள் நுழைந்தாலும் இஃதிகாப் நிய்யத் வைத்தால் மிகுந்த நன்மைகள் கிடைக்கும். இதில் மிகவும் சிறந்தது ரமழான் மாதத்தில் பிந்தின பத்திலிருப்பதாகும். சிலர் ஒவ்வொரு மாதமும் பிறை 13, 14, 15 ஆகிய மூன்று தினங்களிலிருப்பதை வழக்கமாக கடைபிடித்து வருகின்றனர். ஹனபி மத்ஹபின்படி பெண்களும் வீடுகளில் ஓர் இடத்தை ஒதுக்கி இஃதிகாப் இருக்கலாம். இஃதிகாப் சம்பந்தப்பட்ட மற்ற விஷயங்களை ஆலிம்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளவும்.

இஃதிகாபின் துஆ

بِسْمِ اللّٰهِ دَخَلْتُ عَلَيْهِ تَوَكَّلْتُ وَنَوَيْتُ
سُنَّةَ الْاِعْتِكَافِ

பிஸ்மில்லாஹி தவக்கல்த்து அலைஹி(த்) தவக்கல்த்து வநவைத்து ஸுன்ன(த்)தல் இஃதிகாப்

பொருள்:- அல்லாஹ்வின் திருநாமத்தைக் கொண்டு நுழைந்தேன். அவன் மீதே நம்பிக்கை வைத்தேன். இன்னும் இஃத்திகாபின் சுன்னத்தை நிய்யத்து வைத்தேன்.

வெள்ளிக்கிழமையின் சிறப்பு

1. மலக்குகள் ஆஜராகும் நாள்.

2. ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பிறந்த நாள்.

3. ஆதம் அலைஹிஸ்ஸாலாம் அவர்கள் மரணம் அடைந்த நாள்.

4. முதல் ஸூரும் இரண்டாம் ஸூரும் ஊதப்படும் நாள்.

5. நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தாய் வயிற்றில் தரித்த நாள்.

6. நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஓதக் கூடிய ஸலவாத்துக்களை அன்னாரிடம் சமர்ப்பிக்கப்படும் நாள். எனவே வெள்ளிக்கிழமைகளில் அதிகம் ஸலவாத்து ஓத வேண்டும். குறைந்தது 300 ஸலவாத்துகள் ஓதுவது சிறந்ததென்று கூறப்படுகிறது.

7. கிழமைகளுக்கெல்லாம் தலையான நாள்.

8. மிஸ்கீன்களுக்கு ஹஜ்ஜுடைய நாள்.

9. ஏழைகளுக்குப் பெருநாள்.

குறிப்பு:- வெள்ளிக்கிழமையன்று குத்பாவின் பாங்கு கூறிய பிறகு வியாபாரங்கள், கொடுக்கல் வாங்கல் செய்வது ஹராம்.

ஜுமுஆவுக்கு முன்னதாகவே வரக் கூடியவர்களுக்கு கிடைக்கும் நன்மைகள்

1. அதிகாலையில் ஜுமுஆ பள்ளிக்கு வரக் கூடியவருக்கு ஓர் ஒட்டகையை குர்பானி கொடுத்த நன்மை கிடைக்கும்.

2. அதற்கடுத்து வருபர்களுக்கு ஒரு மாட்டை குர்பானி கொடுத்த நன்மை கிடைக்கும்.

3. அதற்கடுத்து வருபர்களுக்கு ஓர் ஆட்டை குர்பானி கொடுத்த நன்மை கிடைக்கும்.

4. அதற்கடுத்து வருபவர்களுக்கு ஒரு கோழியைக் கொடுத்த நன்மை கிடைக்கும்.

5. அதற்கடுத்து வரக் கூடியவருக்கு ஒரு முட்டையை கொடுத்த நன்மை கிடைக்கும்.

6. இமாம் மிம்பரை நெருங்கி விட்டால் நன்மைகளைப் பதிவு செய்யும் வானவர்கள் நன்மைகளை பதிவு செய்யும் ஏட்டை சுருட்டி விட்டு, குத்பா ஓதுவதை செவி சாய்க்க முனைந்து விடுகின்றனர்.

வெள்ளிக்கிழமை அனுஷ்டிக்க வேண்டிய சுன்னத்தான காரியங்கள்

முக வேலை செய்து கம்புக் கட்டு முடியைக் களைந்து நகங்களையும் வெட்ட வேண்டும்.

1. மிஸ்வாக் செய்து பற்களைச் சுத்தம் செய்ய வேண்டும்.

2. குளித்துக் கொள்ள வேண்டும். (குளிக்க முடியாத நிலையிலுள்ளவர்கள் அக்குளியலுக்காக தயம்மும் செய்வது சுன்னத்து.)

3. தம்மிடமுள்ள உயர்வான ஆடைகளை அணிந்து கொள்ள வேண்டும். (தலைப்பாகைக் கட்டுவதும், தாடியை சீப்பினால் சீவுவதும் சுன்னத்து.)

4. அத்தர் போன்ற கண்களுக்குத் தென்படாத நறுமணங்களைப் பூசிக் கொள்ள வேண்டும். மேலும் இரு கண்களுக்கும் சேர்த்து ஒற்றைப் படை சுர்மா இட வேண்டும்.

5. ஜுமுஆவுக்கு கால்நடையாக நடந்து செல்வது ஏற்றம். மேலும் ஜுமுஆவுக்குப் போகும்போது நீளமான பாதையிலும் திரும்பி வரும்பொழுது சுருக்கமான பாதையிலும் வருவது ஏற்றம்.

6. முன்னதாகவே ஜுமுஆவுக்குச் செல்வது ஏற்றம்.

7. ஜுமுஆ பள்ளியை சென்றடைந்ததும் முன்வரிசையில் அமர முயற்சிக்க வேண்டும். மேலும் இஃதிகாப் நிய்யத்து செய்து உடனே இரண்டு ரக்அத்து தஹிய்யத்துல் மஸ்ஜித் தொழுகையை நிறைவேற்ற வேண்டும்.

8. இமாம் மிம்பரில் ஏறி விட்டால் அத்தொழுகையைத் தொழக் கூடாது என்று ஹனபி மத்ஹபில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் ஷாபியீ மத்ஹபில் அத்தொழுகையை விரைவாக தொழுது முடிக்க வேண்டுமென்றும், மேலும் இமாம் மிம்பரிலிருக்கும் பொழுது இந்த இரண்டு ரக்அத்தைத் தவிர வேறு எந்த தொழுகையையும் தொழக் கூடாதென்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஒருவர் பள்ளியினுள் வந்தமர்ந்த பிறகு இமாம் மிம்பரிலேறி விட்டால் இந்தத் தொழுகையும் தொழக் கூடாது.

9. இமாம் குத்பா ஓதும் பொழுது ஒருவருக்கொருவர் பேசிக் கொள்வது ஹனபி மத்ஹபில் ஹராம் என்றும், ஷாபியீ மத்ஹபில் மக்ரூஹ் என்றும்

குறிப்பிடப்பட்டிருக்கிறது. மற்ற மத்ஹபுகளிலும் ஹராமென்றிருப்பதினால் பேசுவது கூடாது. ஆனால் தவிர்க்க முடியாத சூழ்நிலையில் ஏற்படும் ஒரு விபத்திலிருந்து பாதுகாக்க பேசித்தான் ஆக வேண்டுமென்ற நிர்பந்தமேற்படின் பேசிக் கொள்வது கூடும்.

10. ஒருவர் பேசுவதை நிறுத்த வேண்டுமென்றிருந்தால் கை ஜாடை காட்டி நிறுத்த வேண்டும்.

11. இமாம் மிம்பரிலேறி குத்பா ஓதும் பொழுது மற்ற அமல்களை விட்டு விட்டு குத்பா ஓதுவதை செவி சாய்த்து கவனத்துடன் கேட்க வேண்டும். (குத்பா ஓதுவது காதில் விழாவிட்டால், வாய்க்குள் திக்ர் செய்து கொள்ளலா மென்று ஷாபியீ மத்ஹபில் குறிப்பிடப்பட்டுள்ளது.)

12. முன் வரிசையில் இடமில்லாத சமயம் அங்குள்ளவர்களைத் தாண்டிக் கொண்டு முன்னே செல்லாமல் பின் வரிசையிலமர்ந்து கொள்ள வேண்டும்.

குறிப்பு :- வெள்ளிக்கிழமை செய்ய வேண்டிய முடி எடுப்பதையும், நகம் களையும் வேலைகளையும் வியாழன் அஸரிலேயே செய்து கொள்ளலாம்.

குறிப்பு :- சில ஊர்களில் இமாம் மிம்பரிலேறி குத்பா ஓதுமுன் கீழே நின்று பயான் செய்வது வழக்கம். எனவே இவ்வாறு கீழே நின்று பயான் செய்யும் சமயம் தொழுவதும் கூடும். மேலே குறிப்பிட்டுள்ள எல்லா சட்டங்களும் இமாம் மிம்பரிலேறி குத்பா ஓதும்பொழுதுதான் பொருந்தும்.

மேலும் இமாம் குத்பா ஓதும்பொழுது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய பெயரைக் கூறக் கேட்டு மஃமூம்கள் ஸலவாத்து ஓதும் பொழுதும், இமாமுடைய துஆவிற்கு ஆமீன் கூறும் பொழுதும் சப்தமில்லாமல் தம்முடைய காதுகளுக்குக் கேட்கும் அளவிற்கு சொல்ல வேண்டுமென்றும், கைகளை

உயர்த்த வேண்டியதில்லை என்றும் ஷாபியீ மத்ஹபில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் ஹனபி மத்ஹபில் தம்முடைய மனதிற்குள் மட்டும் கூறிக் கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஜுமுஆத் தொழுகைக்குப் பிறகு ஓதக் கூடியவை

1. ஸூரத்துல் Fபாத்திஹா (அல்ஹம்து ஸூரா)

قُلْ هُوَ اللّٰهُ اَحَدٌ ۚ

2. ஸூரத்துல் இக்லாஸ்

قُلْ اَعُوْذُ بِرَبِّ الْفَلَقِ ۙ

3. ஸூரத்துல் Fபலக்

قُلْ اَعُوْذُ بِرَبِّ النَّاسِ

4. ஸூரத்துன்னாஸ்

மேற்கண்ட ஸூராக்களை ஜுமுஆத் தொழுது ஸலாம் கொடுத்த பிறகு அத்தஹிய்யாத்திலிருப்பிலிருந்து கொண்டே யாருடனும் பேசாமல் ஏழு தடவைகள் ஓதுவது சுன்னத்து.

சிறப்பு:- எவரொருவர் மேற்கண்டவற்றை ஜுமுஆத் தொழுகைக்குப் பிறகு ஓதுவாரோ அவருக்கு அடுத்த ஜுமுஆ வரை எந்தவிதமான ஆபத்துகளும் வராமல் அல்லாஹு தஆலா பாதுகாப்பு அளிப்பான்.

மேலும் எவரொருவர் ஜுமுஆத் தொழுகைக்குப் பிறகு, ஸுப்ஹானல்லாஹில் அளீம் வபிஹம்திஹீ என்று

நூறு தடவை ஓதுவாரோ அவருக்கு ஓர் இலட்சம் பாவங்களையும், மேலும் அவருடைய பெற்றோருக்கு இருபத்தி நான்காயிரம் பாவங்களையும் அல்லாஹ் மன்னிப்பான். (ஹதீஸ்)

வெள்ளிக்கிழமை அஸர் தொழுகைக்குப் பின் ஓதும் ஸலவாத்து

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدِنِ النَّبِيِّ الْاُمِّيِّ وَعَلٰى اٰلِهٖ وَسَلِّمْ تَسْلِيْمًا

164

அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதினின்னபிய்யில் உம்மிய்யி வ அலா ஆலிஹீ வஸல்லிம் தஸ்லீமா.

சிறப்பு :- இந்த ஸலவாத்தை வெள்ளிக்கிழமையன்று அஸர் தொழுகைக்குப் பிறகு அதே இடத்தில் அமர்ந்து எண்பது த்டவைகள் ஓதியவருக்கு எண்பது வருடங்களின் பாவங்கள் மன்னிக்கப்படுமென்று நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றுள்ளார்கள்.

குறிப்பு:- ஒரு வருடத்தில் எண்பது வருடங்களின் பாவங்கள் இல்லாதிருந்தால் அவருக்கு அந்தஸ்துகள் உயரும்.

ஸூரத்துல் கஃFப் ஓதுவதின் சிறப்பு

வெள்ளிக்கிழமை இந்த ஸூராவை ஓதினால் ஓதக் கூடியவருடைய கால்கள் தொடுத்து, வானம் வரை ஒரு பிரகாசம் ஏற்பட்டு அது மறுமை நாளையில் அவருக்கு முன் பிரகாசித்துக் கொண்டிருக்கும். மேலும் இந்த ஸூராவை ஓதின வெள்ளிக்கிழமையிலிருந்து அடுத்த வெள்ளிக்கிழமை வரையிலுள்ள பாவங்கள் மன்னிக்கப்படுவதுடன் மேலும் மூன்று தினங்களின் பாவங்களும் மன்னிக்கப்படும். வெள்ளிக்கிழமை இரவிலும் பகலிலும் சேர்ந்து இந்த

ஸூராவை மொத்தம் ஐந்து தடவைகள் ஓதினால் மிகுந்த நன்மைகள் அடையலாம்.

வெள்ளிக்கிழமை இரவு 44-ம் ஸூராவாகிய ஸூரா துகான் ஓதினால் பாவங்கள் மன்னிக்கப்பட்டு, எழுபதினாயிரம் மலக்குகள் ஓதியவரின் பாவமன்னிப்புக்காக துஆ செய்கிறார்கள். மேலும் வெள்ளி இரவிலோ, பகலிலோ இந்த ஸூராவை ஓதினால் ஓதியவருக்கு சொர்க்கத்தில் ஒரு மாளிகை எழுப்பப்படும். மேலும் ஸூரா ஆல இம்ரான், ஸூரா ஹூது இவற்றை வெள்ளிக்கிழமை ஓதலாம்.

ஒவ்வொரு நாள் இரவிலும் 32-ம் ஸூராவாகிய ஸூரா ஸஜ்தாவையும், 56-ம் ஸூராவாகிய ஸூரத்துல் வாக்கிஆவையும் ஓதி வந்தால் லைலத்துல் கத்ரின் இரவில் இபாதத் செய்த நன்மையை அடையலாம். மேலும் ஒவ்வொரு நாள் இரவிலும் 67-ம் ஸூராவாகிய தபாரக் கல்லதீ ஸூராவை ஓதினால் கப்ருடைய வேதனையிலிருந்து ஈடேற்றம் கிடைக்கும்.

குர்ஆனுடைய இதயம்

'கல்புல் குர்ஆன்' என்று சொல்லக் கூடிய 'யாஸீன்' ஸூராவை காலையின் ஆரம்பத்தில் ஓதி வந்தால், அன்றைய தேவைகளை அல்லாஹு தஆலா சிரமமின்றி பூர்த்தி செய்து வைப்பான். மேலும் ஒரு தடவை இந்த ஸூராவை ஓதிவந்தால் பத்து தடவை குர்ஆன் ஓதின நன்மை கிடைக்கும். மேலும் கடன் தொல்லையுள்ளவர்கள் ஓதி வந்தால் கடன் தொல்லைகள் நீங்கும். மேலும் பல சிறப்புகளும் உள்ளன.

ஸூரா Fபத்ஹின் சிறப்பு

இந்த ஸூராவை ரமழான் பிறை கண்டதும் மூன்று முறை ஓதினால் மற்ற எல்லா ஆண்டுகளிலும் நோன்பு

வைப்பதற்கு அல்லாஹ் இலகுவாக்கி வைப்பான். மேலும் கப்பலில் பிரயாணம் செய்யும்போது இந்த ஸூராவை ஓதி வந்தால் சமுத்திரத்தின் ஆபத்திலிருந்து பாதுகாப்பு கிடைக்கும். மேலும் பல சிறப்புகளும் உள்ளன.

ஸூரா முஸம்மிலின் சிறப்பு

இந்த ஸூராவை கஷ்டத்தில் அகப்பட்டவர்கள் ஓதி வந்தால் கஷ்டம் நீங்கி விடும். மேலும் இந்த ஸூராவை வழக்கமாக ஓதி வந்தால் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை கனவில் காணும் பாக்கியம் கிடைக்கும். மேலும் இதை ஓதிக் கொண்டு அதிகாரிகளுக்கு முன் சென்றால் அந்த அதிகாரி இதை ஓதிச் சென்றவருக்கு மரியாதை செய்வார். மேலும் இதை தினந்தோறும் ஏழு தடவை ஓதிவந்தால் உணவில் அபிவிருத்தி (பரக்கத்) உண்டாகும்.

ஆயத்துல் குர்ஸீயின் சிறப்பு

இந்த ஆயத்து 'தில்க்கர் ரஸூலு' என்ற ஜுஸ்உவில் உள்ளது. இந்த ஆயத்தை ஓதுவதினால் ஏற்படும் நன்மைகளைப் பற்றி ஹதீஸ்களில் நிறைய வந்துள்ளன. ஒவ்வோர் அமலுக்குப் பின்னால் இதை ஓதி வருவதினால் நிறைய நன்மையுண்டு. யாருக்கேனும் ஏதேனும் தேவையிருப்பின் இந்த ஆயத்தை பதிமூன்று தடவை ஓதி துஆ செய்தால் துஆ கபூலாகும். நோயுள்ளவருக்கு இதை பதினோரு தடவை ஓதி ஊதினால் நோய் சுகமாகி விடும்.

ஸூரா ஜுமுஆவின் சிறப்பு

வெள்ளிக்கிழமை குளித்து சுத்தமாகி விட்டு இந்த ஸூராவை ஓதி வந்தால் உணவில் பரக்கத் (அபிவிருத்தி) உண்டாகும். மேலும் கணவனுக்கும் மனைவிக்குமிடையே ஒற்றுமை இல்லாதிருந்தால் வெள்ளிக்கிழமையன்று இந்த

ஸூராவை மூன்று தடவைகள் ஓதி தண்ணீரில் ஊதி இருவரையும் குடிக்கச் செய்தால் இருவருக்குமிடையில் ஒற்றுமையுண்டாகும்.

ஆடைகள் அணிவதின் சுன்னத்துகள்

சட்டை அணியும் பொழுது முதலில் வலது கையிலும் பிறகு இடது கையிலும் அணிய வேண்டும். சட்டையை கழற்றும் பொழுது முதலில் இடது கையிலும் பிறகு வலது கையிலும் கழற்ற வேண்டும். காலணி அணியும் பொழுது முதலில் வலது காலிலும் பிறகு இடது காலிலும் அணிய வேண்டும். கழற்றும் பொழுது முதலில் இடது காலிலும் பிறகு வலது காலிலும் உள்ளதை கழற்ற வேண்டும். தலைப்பாகை கட்டும் பொழுது நின்று கொண்டு கட்ட வேண்டும். பைஜாமா, பேண்ட் அணியும் பொழுதும் முதலில் வலதையும் பிறகு இடதையும் அணிய வேண்டும். ஆண்கள், பெண்கள் முழுக்கை சட்டை அணிவதுதான் சிறந்தது.

எச்சில் துப்புவதின் ஒழுக்கங்கள்

1. வலது பக்கமும், கிப்லா திசையின் பக்கமும் எச்சில் துப்பக் கூடாது.

2. இடது பக்கம்தான் எச்சிலையும், காரலையும் துப்ப வேண்டும்.

3. இடது பக்கம் கிப்லாவின் திசையாக இருந்தால் இரு கால்களுக்கு நடுவில் துப்ப வேண்டும்.

4. கண்ட கண்ட இடங்களில் எச்சிலையும் காரலையும் துப்பக் கூடாது. இது போன்றே மூக்குச் சளியையும் சிந்தக் கூடாது. ஒரு பெரியார் அவர்கள் வீதிகளில் செல்லும் பொழுது படிக்கனையும் கையில் எடுத்துச் செல்வது

வழக்கமாக இருந்தது அச்சமயம் எச்சில் துப்புவதாக இருந்தால் அந்த படிக்கனில் துப்பிக் கொள்வார்கள்.

நகங்கள் வெட்டுவதின் சுன்னத்துகள்

கைகளின் நகங்களை வெட்டும் பொழுது முதலில் வலது கையின் கலிமா (ஆள்காட்டி) விரலில் ஆரம்பித்து சின்ன விரலை முடித்து பிறகு பெரு விரலில் முடிக்க வேண்டும். பிறகு இடது கையின் சின்ன விரலில் ஆரம்பித்து வரிசையாக கடைசியில் பெரு விரலில் முடிக்க வேண்டும். கால்களில் வலது சின்ன விரலிருந்து ஆரம்பித்து தொடர் படியாக அறுத்து கடைசியாக இடது சின்ன விரலில் முடிகக வேண்டும்.

இஷ்ராக் தொழுகையின் சிறப்பு

எவரொருவர் ஸுப்ஹு தொழுகையை ஜமாஅத்துடன் தொழுது முடித்து சூரியன் உதயமாகும் வரை உளூ முறியாமலும் துன்யாவின் பேச்சுக்களை பேசாமலும் இருந்து வருவாரோ அவருடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டு அன்று பிறந்த குழந்தையை போன்று ஆகி விடுகின்றார். மேலும் சூரியன் உதயமாகி சுமார் இருபது நிமிடங்கள் கழித்து இரண்டு ரக்அத்துகள் நபில் தொழுதால் ஒப்புக் கொள்ளப்பட்ட நபிலான ஹஜ்ஜும் உம்ராவும் செய்த நன்மைகள் கிடைக்கும். மேலும் இரண்டு ரக்அத்துக்கள் தொழுதால் அன்றைய தினத்தின் தேவையை அல்லாஹ் நிறைவேற்றி வைப்பான்.

பஜ்ர் தொழுகையை ஜமாஅத்துடன் தொழுது விட்டு சூரியன் உதயமாகும் வரை அல்லாஹ்வின் திக்ரில் ஈடுபட்டிருப்பவர்களுடன் நான் அமர்ந்திருப்பது இந்த உலகமும் இந்த உலகத்திலுள்ள அனைத்துப் பொருள்களும் கிடைப்பதை விட எனக்கு மிகவும் விருப்பமானது என்றும், மேலும் குறைந்த நேரத்தில் அதிகமான

நன்மைகளை சம்பாதிப்பதற்கு இந்த நேரம் மிகவும் மேலானது என்றும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அருளினார்கள். மேலும் இந்த நேரத்தில் அல்லாஹ்வின் திக்ரில் ஈடுபட்டிருப்பதின் காரணமாக, நான்கு அடிமைகளை உரிமை அளித்த நன்மைகளை விடவும் அதிக நன்மையை அடைய முடியுமென்றும் ஒரு ஹதீஸின் கருத்துண்டு.

தஹஜ்ஜுத் தொழுகையின் சிறப்பு

1. பர்ளான தொழுகைக்கு அடுத்த அந்தஸ்த்து தஹஜ்ஜுத் தொழுகைக்குத்தான்.

2. கப்ரில் ஒளி கிடைக்கிறது.

3. முகத்தில் ஒளி உண்டாகிறது.

4. எல்லா நோய்களையும் நிவாரணமாக்குகிறது.

5. இருதய நோயை விட்டுப் பாதுகாக்கின்றது.

6. சிறிய பாவங்களெல்லாம் மன்னிக்கப்படுகின்றன.

7. அமல்களில் இக்லாஸ் உண்டாகின்றது.

8. எந்த கண்களும் பார்த்திராத, எந்த காதுகளும் கேட்டிராத, எந்த உள்ளமும் சிந்தித்திராத பெரிய நிஃமத்துக்களை அல்லாஹ் அளிப்பான்.

9. பாவ காரியங்கள் செய்வதை விட்டும் தடுக்கின்றது.

10. அல்லாஹ்வுடைய நெருக்கம் கிடைக்கின்றது.

11. இல்மில் பிரகாசம் உண்டாகிறது.

12. மனதை விசாலமாக்குகின்றது.

13. ஆயுளை அதிகரிக்கின்றது.

14. மேலும் அத்தொழுகையை நிறைவேற்றியவருக்கு சொர்க்கத்தில் ஒரு கண்ணாடி மாளிகை கிடைக்கும்.

அம்மாளிகையின் வெளியே இருந்து பார்த்தால் உள்ளே உள்ளதெல்லாம் தெரியும். உள்ளே இருந்து பார்த்தால் வெளியே உள்ளதெல்லாம் தெரியும்.

15. சுவர்க்கத்தில் ஒரு மரம் உள்ளது. அதன் மேல் பட்டாடைகள் வெளியாகின்றன. அதன் அடியில் யாகூத் என்னும் முத்துக்களால் அலங்கரிக்கப்பட்ட குதிரை இருக்கும். அந்த குதிரையில் தஹஜ்ஜுத் தொழுபவர்கள் தாம் நாடிய இடத்திற்கெல்லாம் செல்லலாம்.

16. உள்ளமும் நாவும் ஒன்றுபடுகிறது.

17. என்னுடைய உம்மத்திற்கு சிரமமில்லையென்றிருந்தால் இத்தொழுகையை நான் கடமையாக்கி இருப்பேன்.
(ஹதீஸ்)

18. (1) தஹஜ்ஜுத் தொழுகையை நிறைவேற்றுதல், (2) நோன்பு நோற்றல், (3) அல்லாஹ்வின் பாதையில் ஜிஹாத் செய்தல்-அதாவது தீனுடைய முன்னேற்றத்திற்காக பாடுபடுதல், (4) அல்லாஹ்வின் பாதையில் பொருள்களை செலவு செய்தல். மேற்கண்ட அமல்களை நிறைவேற்றியவர்களுக்கு அல்லாஹு தஆலா சொர்க்கத்தில் பறக்கும் குதிரையை அளிப்பான். (ஹதீஸின் கருத்து)

19. எவரொருவர் தஹஜ்ஜுத் தொழுகையை நியமமாக (தொடர்ந்து) தொழுது வருவாரோ அவர் அல்லாஹ்வுடைய (நேசராக) வலியாக மரணமடைவார். அல்லாஹ்வுடைய நேசர்களுக்கு பயமென்பது கிடையாது. மேலும் கவலைப் படவும் மாட்டார்கள் என்று அல்லாஹு தஆலா கூறுகிறான்.

20. தஹஜ்ஜுத்துடைய நேரத்தில் துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. இத்தொழுகை குறைந்தது இரண்டு ரக்அத்துகள், அதிகபட்சம் இரண்டு இரண்டு ரக்அத்துகளாக எவ்வளவும் தொழுது கொள்ளலாம்

ஆனால் ஹனபி மத்ஹபின்படி அதிகபட்சம் பன்னிரண்டு ரக்அத்துகளென்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்தொழுகையை நடுநிசியிலிருந்து பஜ்ருடைய வக்துக்கு பத்து நிமிடங்களுக்கு முன்பு வரை தொழுது கொள்ளலாம்.

அவ்வாபின் தொழுகையின் சிறப்பு

மக்ரிபுடைய சுன்னத்து தொழுகைக்குப் பிறகு ஆறு ரக்அத்துகள் தொழுது கொண்டால் பன்னிரண்டு ஆண்டுகள் இபாதத் செய்த நன்மை கிடைக்குமென்றும் மக்ரிப் தொழுகைக்குப் பிறகு யாருடனும் பேசாமல் இத்தொழுகையைத் தொழுதால் கடலின் நுரையளவு பாவங்களிலிருந்தாலும் மன்னிக்கப்படுமென்றும் ஹதீஸ்களில் காணப்படுகின்றன.

ளுஹா தொழுகையின் சிறப்பு

இத்தொழுகையை தொழுது வந்தால் வாழ்க்கையில் அபிவிருத்தியுண்டாகும். மேலும் இத்தொழுகையை எட்டு ரக்அத்துக்கள் தொழுது வந்தால், சொர்க்கத்தில் அவருக்கு ஒரு மாளிகை எழுப்பப்படும். பன்னிரண்டு ரக்அத்துகள் தொழுது வந்தால், அவருக்கு சொர்க்கத்தில் ஒரு மாளிகை எழுப்பப்படும். மேலும், சொர்க்கத்தில் ளுஹா என்ற ஒரு வாசலுண்டு; எவர் வழக்கமாக ளுஹா தொழுது வந்தாரோ அவரை அந்த வாசல் வழியாக நுழையும்படி அறிவிப்பு உண்டாகும் என்றும் ஹதீஸில் காணப்படுகின்றது இந்த தொழுகையை காலை 10 மணியிலிருந்து 11.30 மணி வரை தொழுது கொள்ளலாம். ஷாபியீ மத்ஹபின்படி குறைந்தது இரண்டு ரக்அத்துகளென்றும், ஹனபி மத்ஹபின்படி குறைந்தது நான்கு ரக்அத்துகளென்றும் குறிப்பிடப் பட்டுள்ளது.

குறிப்பு :- இஷ்ராக், லுஹா, அவ்வாபீன், தஹஜ்ஜுத் இவற்றை தொழும் சமயம் ஹனபிகள் நபில் என்றும் ஷாபியீகள் சுன்னத்து என்றும் நிய்யத்து வைக்க வேண்டும்.

மஷ்வராவின் விளக்கமும், துஆவும்

மஷ்வரா என்பதற்கு ஆலோசனை என்று பொருள் கூறப்படும். நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காலத்தில், தீனுடைய விஷயமாக இருந்தாலும் அல்லது துன்யாவுடைய விஷயமாக இருந்தாலும் ஸஹாபாக்களை ஒன்று கூட்டி மஷ்வரா செய்வார்கள். எனவே மஷ்வரா செய்வது ஒரு சுன்னத்தான அமலாகும். மஷ்வரா செய்து முடிவு செய்யப்பட்ட காரியங்களில் அல்லாஹ்வினுடைய உதவியிருக்கிறது. மேலும் எந்த காரியத்தைப் பற்றியும் முறையோடு மஷ்வரா செய்து செயல்படுத்தினால், அந்த காரியத்தில் நஷ்டம் என்பது கிடையாது. நம் வாழ்க்கையில் ஏதேனும் பிரச்சனைகள் குறுக்கிட்டால், மஷ்வரா செய்து செயல்படுவதின் மூலமும் அல்லது இஸ்திகாரா தொழுகையைத் தொழுத பின்பு செயல்படுவதின் மூலமும் நஷ்டம் என்பது ஏற்படாது. மேலும் மஷ்வரா செய்வதின் மூலம் உள்ளங்கள் ஒன்றுபட்டு ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்கும் மனப்பக்குவம் உண்டாகும். முறையோடு மஷ்வரா செய்யப்பட்டு முடிவு செய்யப்பட்ட விஷயங்களில் வெளித் தோற்றத்தில் நஷ்டம் போல தெரிந்தாலும் முடிவு நன்மையாக இருக்கும். மஷ்வரா செய்யப்படாத காரியங்களில் அல்லாஹ்வின் உதவி இல்லாத காரணத்தினால் அந்த காரியத்தை நிறைவேற்றும் பொழுது குழப்பங்களும், சிக்கல்களும் உண்டாகும். நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காலத்திற்குப் பிறகும் ஸஹாபாக்கள் மஷ்வரா அமலைக் கடைபிடித்து வெற்றி கண்டுள்ளார்கள்.

இந்தக் காலத்திலும் கூட மஷ்வரா செய்து செயல்பட்டு அவரவர்கள் அடைந்த நன்மைகளை பலர் சொல்வதைக் கேட்டு உணர்ந்து கொள்ள முடியும். நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காலத்தில் தொழுகைக்காக மக்களை எவ்வாறு அழைப்பது என்ற பிரச்சினை குறித்து மஷ்வராவில் ஹைாபாக்களிடம் அபிப்பிராயம் கேட்ட சமயம் அவர்களின் அபிப்பிராயங்களைக் கூறினார்கள். சிலர் மணி அடிக்கலாம் என்றனர். ஆனால் அந்த மஷ்வராவில் எதுவும் முடிவு செய்யப்படவில்லை. அச்சமயம் ஒரு ஸஹாபி மிகவும் கவலையுடன் தூங்கின பொழுது, தற்பொழுது கூறப்படும் பாங்கு கூறுவதைக் கனவு கண்டு மறுநாள் அவர்கள் கண்ட கனவின் சம்பவத்தை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் கூறினார்கள். நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு இது பிடித்தமாகி விட்டது. எனவே அப்பொழுதிலிருந்து பாங்கு கூறும் முறை அமல் செய்யப்பட்டது. இன்று உலக முழுவதிலும் தொழுகைக்கு அழைக்க பாங்கு கூறப்படுவதால் பாங்கு சொல்லப்படாத நேரமே இல்லை.

இதைப் போன்றே உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் காலத்தில் ஒரு பிரச்சினை வந்து விட்டது. அதாவது உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு ஒரு கடிதம் வந்திருந்தது. அதில் ஷஃபான் மாதம் என்று கூறப்பட்டிருந்தது. ஆனால் அந்த ஷஃபான் மாதம் என்பது சென்ற ஆண்டா? இந்த ஆண்டா? வரக்கூடிய ஆண்டா? என்ற சந்தேகம் வந்து விட்டது. காரணம் அந்தக் காலத்தில் முஸ்லிம்களுக்கு ஆண்டு இல்லாமல் மாதங்கள் மட்டும்தான் இருந்து வந்தன. எனவே, முஸ்லிம்களுக்கு ஆண்டு தேவை யென்பதை முடிவு செய்ய மஷ்வரா செய்வதற்காக, ஸஹாபாக்களை ஒன்று கூட்டி அபிப்பிராயங்கள்

கேட்கப்பட்டது. அச்சமயம் அவரவர்களின் அபிப்பிராயங்களைத் தெரிவித்தனர்.

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பிறந்த மாதத்தை வருட ஆரம்பமாக வைக்கலாமென்று சில ஸஹாபாக்கள் அபிப்பிராயம் தெரிவித்தனர். இன்னும் சிலர் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குக் நபிப்பட்டம் கிடைத்த மாதத்தை வருட ஆரம்பமாக வைக்கலாமென்றனர். ஆனால் அலீ ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் புனித மக்காவிலிருந்து தீனுடைய முன்னேற்றம் கருதி மதீனாவிற்கு 'ஹிஜ்ரத்' சென்றது தான் இஸ்லாத்தின் மிகவும் முக்கிய நிகழ்ச்சியாகும். எனவே அதைத்தான் முஸ்லிம்களின் ஆண்டாக வைக்க வேண்டுமென்று அபிப்பிராயம் சொன்னார்கள். இந்த அபிப்பிராயம் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்குப் பிடித்து விட்டது. எனவே மஷ்வராவில் அவ்வாறே முடிவு செய்யப்பட்டது; அன்று முதல் ஹிஜ்ரி ஆண்டு ஆரம்பமாகி விட்டது.

இன்னும் இதைப் போன்று சில அம்சங்கள் உள்ளன. இன்று 1400 ஆண்டுகள் கடந்து விட்டன. ஆனால் அன்று மஷ்வரா செய்யப்பட்டு முடிவு செய்யப்பட்டவற்றை ஓர் இம்மியளவு கூட கூட்டவோ குறைக்கவோ யாராலும் முடியவில்லை. இந்த உலகத்தில் ஒவ்வொரு விஷயத்தைப் பற்றியும் அடிக்கடி மாற்றுவதும், அதனால் பல குழப்பங்கள் ஏற்படுவதும் சாதாரணமாக நடைபெறுவதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். எனவே நம்முடைய எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் நாம் மஷ்வரா செய்து செயல்பட்டால் இன்ஷா அல்லாஹ் நிச்சயம் வெற்றியடையலாம்.

மஷ்வராவில் பின்பற்ற வேண்டிய விஷயங்கள்

(1) குறைந்தது நான்கு நபர்கள் இருப்பது சிறந்தது.

(2) அமீரை (முடிவு செய்யக்கூடியவரை) ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

(3) இடைவெளி இல்லாமல் நெருங்கி நெருங்கி அமர்ந்து கொள்ள வேண்டும்.

(4) குறைந்த கூட்டமாக இருந்தால் வட்டமாக அமர்ந்து கொள்வது சிறந்தது.

(5) மஷ்வராவில் இருப்பவர்கள் கவலையுடனும் பொறுப்புடனுமிருக்க வேண்டும். மேலும் மஷ்வராவின் முடிவில் அல்லாஹ்வின் உதவியிருப்பதாக நம்ப வேண்டும்.

(6) அமீர் எல்லோரிடத்திலும் அபிப்பிராயம் கேட்க வேண்டுமென்ற நிபந்தனையில்லை. எல்லோரிடத்திலும் அபிப்பிராயம் கேட்க வேண்டுமென்ற நிர்ப்பந்தம் ஏற்பட்டால் அவ்வாறு கேட்பதுதான் சிறந்தது.

(7) அமீர் யாரிடத்தில் அபிப்பிராயம் கேட்கின்றாரோ அவர் மட்டும்தான் பேச வேண்டும்.

(8) ஒருவர் அபிப்பிராயம் சொல்லி முடிக்குமுன் மற்றவர்கள் இடையில் பேசக் கூடாது.

(9) அபிப்பிராயம் சொல்லக்கூடியவர் தாம் சொல்வதைத்தான் ஏற்று கொள்ள வேண்டும் என்று பிடிவாதம் செய்யக் கூடாது. இவ்வாறு ஒவ்வொருவரும் பிடிவாதமாக அபிப்பிராயம் சொன்னால் ஒருவருக்கொருவர் மனக் கசப்பேற்பட்டு உள்ளங்கள் வேறுபட்டு விடும்.

(10) ஒருவர் சொன்ன அபிப்பிராயத்தை ஆமோதித்து மற்றவர் அபிப்பிராயம் சொல்லாமல், தம்முடைய மனதில்

தோன்றியதை அமானிதமாக அமீர் இடத்தில் சொல்லி விட வேண்டும்.

(11) அபிப்பிராயம் சொல்லும் பொழுது நன்கு சிந்தித்து சொல்ல வேண்டும். அவ்வாறு சொல்லும் பொழுது யாருடைய மனதையும் புண்படுத்தும் நோக்கத்துடன் சொல்லக் கூடாது. மேலும் அபிப்பிராயத்தை அமீரிடத்தில்தான் சொல்ல வேண்டும்.

(12) ஒருவர் சொன்ன அபிப்பிராயம் ஏற்றுக் கொள்ளப்படாவிட்டால் அதில் ஏதோ கெடுதி இருந்ததன் காரணமாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்று நினைத்து பொறுமையை மேற்கொள்ள வேண்டும்.

(13) ஒருவர் சொன்ன அபிப்பிராயத்தை ஏற்று அதை மஷ்வராவில் முடிவு செய்யப்பட்டால், அதற்காக சந்தோஷப் படாமல் அந்த காரியம் நன்மையாக முடிய வேண்டுமென்று துஆ செய்ய வேண்டும்.

(14) மஷ்வராவின் முடிவு மெஜாரிட்டி, மைனாரிட்டி என்ற அடிப்படையில் இருக்கக் கூடாது. மஷ்வராவில் அமர்ந்திருப்பவர் அனைவரிடமோ அல்லது உசிதப்படி சிலரிடமோ அபிப்பிராயங்களைக் கேட்டு முடிந்தவுடன் அமீரானவர் நன்கு சிந்தித்து தம் மனதில் அல்லாஹ் எதைப் போடுகின்றானோ அதன்படி முடிவு செய்ய வேண்டும். அமீரானவர் தம் மனதில் தோன்றியதற்கு மாற்றமாக முடிவு செய்யக் கூடாது.

(15) ஒருவர் அபிப்பிராயம் சொல்லும் சமயம் சபையிலிருக்கும் அனைவரும் அமீரும் கவனத்துடனும் கண்ணியத்துடனும் கேட்க வேண்டும்.

(16) அபிப்பிராயம் சொல்லும் பொழுது கருத்து வேறுபாடிருக்கலாம். ஆனால் மஷ்வராவில் முடிவு

செய்யப்பட்ட விஷயத்தை செயல்படுத்துவதில் யாவரும் ஒன்றுபட்டிருக்க வேண்டும். மேலும் மஷ்வராவில் முடிவான விஷயம் குறித்து குறை கூறுதல் கூடாது. 'யார் அமீரைக் குத்தல் பேசுகின்றாரோ அவருக்கு கடும் தண்டனை உண்டு' என்ற ஹதீஸ் கருத்தை மறந்து விடக் கூடாது.

மஷ்வராவின் துஆ

اَللّٰهُمَّ اَلْهِمْنَا مَرَاشِدَ اُمُوْرِنَا وَاَعِذْنَا مِنْ
شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّاٰتِ اَعْمَالِنَا

அல்லாஹும்ம அல்ஹிம்னா மராஷித உமூரினா வஅஇத்னா மின்ஷுரூரி அன்Fபுஸினா வமின் ஸய்யிஆத்தி அஃமாலினா

பொருள்:- அல்லாஹ்வே! எங்களுடைய காரியங்களில் நேர்மையானதை எங்களுடைய உள்ளங்களில் உதிக்கச் செய்வாயாக! மேலும் எங்களுடைய நப்ஸின் தீங்கை விட்டும் எங்களுடைய அமல்களின் தீங்கை விட்டும் எங்களை பாதுகாத்துக் கொள்வாயாக!

பனிரெண்டு விஷயங்கள்

நான்கு விஷயங்களில் நேரத்தை அதிகமாக செலவு செய்ய வேண்டும்.

1-வது தஃவத் இலல்லாஹ். (அல்லாஹ்வின் பக்கம் மக்களை தனியாகவும் கூட்டமாகவும் அழைக்க வேண்டும்)

2-வது தஃலீம் வதஅல்லும். (மார்க்கக் கல்வியைக் கற்றுக் கொள்வதும் பிறருக்குக் கற்றுக் கொடுப்பதும்)

பளாயில் (அமல்களின் சிறப்பு பற்றிய) இல்முகளை (கல்வியை) கூட்டாகப் படிப்பதும், படிப்பதைக் கேட்பதும்,

மஸாயில் (அமல் செய்யும் முறைகளின்) இல்முகளைத் தனிமையில் படித்து தெரிந்து கொள்வதுடன் ஆலிம் களிடமும் கேட்டு தெரிந்து கொள்ள வேண்டும்.

3-வது இபாதத் செய்தல். (தொழுதல், குர்ஆன் ஓதுதல், திக்ர் செய்தல், துஆகேட்டல்)

4-வது கித்மத் (ஊழியஞ்) செய்தல்.

(அ) கூடியவரை தன்னுடைய தேவைகளைத் தானே பூர்த்தி செய்து கொள்ள வேண்டும்.

(ஆ) நம்முடன் இருப்பவர்களுக்கு கித்மத் செய்ய வேண்டும். அதாவது ஜமாஅத்தில் செல்லும் சமயமும், பள்ளிகளிலும், மத்ரஸாக்களிலும் இன்னும் அலுவலகங்களிலும், கடைகளிலும் இருக்கும் சமயங்களிலும் மேலும் பிரயாண சமயங்களிலும் நம்முடன் இருப்பவர்களுக்கு நம்மால் முடிந்தவரை ஊழியம் செய்ய வேண்டும்.

(இ) அமீர், தாய், தந்தை, ஆசிரியர்கள் மற்றும் பொறுப்பாளிகளுக்கும் ஊழியம் செய்ய வேண்டும். இதில் மஷ்வராவில் முடிவான விஷயங்களைச் செயல்படுத்த ஒத்துழைப்பு கொடுப்பதுதான் உயர்வானது.

(ஈ) முஸ்லிம்கள், முஸ்லிம் அல்லாதவர்கள் மற்றும் படைப்புகள் அனைத்திற்கும் ஊழியம் செய்ய வேண்டும். நம்முடைய வீடுகளில் வளர்க்கப்படும் மிருகங்கள், பறவைகள் மற்றுமுண்டான உயிரினங்களுக்கும் அப்போதைக்கப்போது உணவளிப்பதுடன் மேலும் வெயில், மழை குளிர் ஆகியவற்றிலிருந்தும் பாதுகாப்புக் கொடுக்க வேண்டும். இதில் வழி தவறியவர்களை (ஹிதாயத்) நேர்வழியின் பக்கம் திருப்பி விடுவது மேன்மையானதாகும்.

நான்கு விஷயங்களில் நேரத்தைக் குறைத்து செலவு செய்ய வேண்டும்

(1) சுய தேவைகள், குளித்தல், மல ஜலம் கழித்தல், துணி துவைத்தல் இன்னும் இது போன்ற மற்ற தேவைகளிலும் நேரத்தைக் குறைத்து செலவு செய்ய வேண்டும்.

(2) தூங்கும் நேரத்தைக் குறைத்து செலவு செய்ய வேண்டும். (தினசரி ஆறு மணி நேரம் தூங்குவது போதும்)

(3) உணவருந்தும் நேரத்தையும் குறைக்க வேண்டும்.

(4) ஆகுமான பேச்சுக்களையும் குறைத்துப் பேச வேண்டும்.

மேற்கண்ட நான்கு விஷயங்களிலும் நேரங்களைக் குறைத்து செலவு செய்ய பழகி வந்தால் தீனுடைய விஷயங்களில் ஈடுபடுவதற்கு நேரம் கிடைக்கும்.

நான்கு விஷயங்களை அறவே செய்யக் கூடாது

(1) இஷ்ராப் (மற்றவர்களின் பொருளில் ஆசை) கொள்ளக் கூடாது.

(2) இஸ்ராப் (எந்தப் பொருளையும் வீண் விரயம்) செய்யக் கூடாது.

(3) ஸுவால் (பிறரிடம் யாசகம்) கேட்கக் கூடாது.

(4) யாருடைய பொருளையும் ஊசியாக இருந்த போதிலும் அனுமதி இல்லாமல் எடுக்கக் கூடாது.

தஃலீமுடைய மஜ்லிஸில் அமர்வதின் சிறப்புகள் (ஹதீஸின் கருத்துகள்)

தஃலீமுடைய மஜ்லிஸில் அமர்வதானது ஆயிரம் ரக்அத்துகள் நபில் தொழுவதை விடவும், ஆயிரம் தடவைகள் குர்ஆன் ஓதுவதை விடவும், ஆயிரம் வியாதியஸ்தர்களைச் சந்திப்பதை விடவும், ஆயிரம் தடவைகள் ஜனாஸாக்களுடன் செல்வதை விடவும் சிறந்தது. மேலும் தஃலீமுடைய மஜ்லிஸில்,

(1) ரஹ்மத்துடைய மலக்குகள் சூழ்ந்து கொள்கிறார்கள்.

(2) அல்லாஹ்வுடைய ரஹ்மத் இறங்குகிறது.

(3) ஸக்கீனா என்ற மன அமைதி கிடைக்கிறது.

(4) அல்லாஹு தஆலா தன்னுடைய நெருக்கமான மலக்குகளிடம் தஃலீமின் மஜ்லிஸில் அமர்ந்திருப்பவர்களைப் பற்றி பெருமை பாராட்டி கூறுகிறான்.

எந்த மனிதர் என்னுடைய வார்த்தையைக் கேட்டு அதை மனதில் பதிய வைத்து அதன்படி செயல்பட்டு, மேலும் என்னுடைய வார்த்தையைக் கேட்டது போன்று மற்றவர்களுக்கும் எத்தி வைக்கிறாரோ அவருடைய வாழ்க்கையை அல்லாஹ் செழிப்பாக்கி வைப்பானாக!

- நபி (ஸல்)

தஃலீம், பயான் மஜ்லிஸ்களில் அமர்வதின் ஒழுக்கங்கள்

1. கவனமாகவும் ஒழுக்கத்துடனும் கேட்க வேண்டும். கேட்டவற்றை மனதில் பதிய வைக்க வேண்டும்.

2. கற்ற அறிவின்படி செயலாற்றும் நோக்கத்துடன் கேட்க வேண்டும்.

3. நம்மிடம் அமல் உண்டாக்குவதற்காகவும், கேட்டவற்றை மற்றவர்களுக்கு எத்தி வைக்கும் நோக்கத்துடனும் கேட்க வேண்டும்.

4. கேட்கக் கூடிய நல்ல விஷயங்கள் நம்மிடமிருந்தால் அல்லாஹ்விற்கு நன்றி செலுத்த வேண்டும். நம்மிடம் அந்த நல்ல விஷயங்கள் இல்லாவிட்டால் இனிமேல் செயலாற்றுவதற்கு எண்ணம் கொள்ள வேண்டும்.

5. கேட்டவற்றை தனிமையில் அமர்ந்து சிந்தித்து ஆராய்ச்சி செய்ய வேண்டும்.

6. கேட்கக்கூடிய விஷயங்களில் ஏதேனும் சந்தேகமேற்பட்டால் நம்பிக்கையான ஆலிம்களிடத்தில் கேட்டு விளங்கிக் கொள்ள வேண்டும். பொழுதைப் போக்கும் நோக்கத்துடன் கேட்கக் கூடாது.

7. மற்றவர்களின் குறைகளை கண்டுபிடிக்கும் நோக்கத் துடனும் கேட்கக் கூடாது.

8. நெருங்கி நெருங்கி அமர வேண்டும். மேலும் ஒரு வருக்கொருவர் இடையில் பேசிக் கொள்ளக் கூடாது. ஒளூவுடனிருப்பது சிறந்தது.

9. சொல்லக்கூடிய விஷயங்களை எத்தனை தடவைக் கேட்டிருந்த போதிலும், புதிதாகக் கேட்பதைப் போன்று ஆர்வத்துடனும், ஆசையுடனும் கேட்க வேண்டும்.

10. கேட்டவை நம்முடைய அமலில் வருவதற்காக அல்லாஹ்விடம் துஆ செய்ய வேண்டும்.

குறிப்பு:- பயான், தஃலீம் செய்யக்கூடியவர்கள் மற்றவர்களை விட தாம் அறிவாளி என்ற எண்ணத்தை நீக்கி தமக்கும், கேட்கக் கூடியவர்களுக்கும் ஹிதாயத் கிடைக்க உள்ளத்தில் துஆ செய்ய வேண்டும்.

ஹஜ்ரத்ஜீ அவர்கள் ஓதி வந்த துஆ

اَللّٰهُ لَآ اِلٰهَ اِلَّا هُوَ الْحَيُّ الْقَيُّوْمُ ۝ الٓمّٓ ۝ اَللّٰهُ لَآ
اِلٰهَ اِلَّا هُوَ الْحَيُّ الْقَيُّوْمُ ۝ وَعَنَتِ الْوُجُوْهُ لِلْحَيِّ
الْقَيُّوْمِ ۝ لَآ اِلٰهَ اِلَّآ اَنْتَ سُبْحٰنَكَ اِنِّيْ كُنْتُ
مِنَ الظّٰلِمِيْنَ ۝ يَا اَحَدُ الصَّمَدُ الَّذِيْ لَمْ يَلِدْ وَلَمْ
يُوْلَدْ وَلَمْ يَكُنْ لَّهٗ كُفُوًا اَحَدٌ ۝ يَآ اَرْحَمَ الرَّا
حِمِيْنَ ظَلَمْنَآ اَنْفُسَنَا وَاِنْ لَّمْ تَغْفِرْ لَنَا وَتَرْ
حَمْنَا لَنَكُوْنَنَّ مِنَ الْخَاسِرِيْنَ ۝ رَبَّنَا اغْفِرْ لَنَا
وَتُبْ عَلَيْنَا اِنَّكَ اَنْتَ التَّوَّابُ الرَّحِيْمُ رَبِّ اغْفِرْ
وَارْحَمْ وَتَجَاوَزْ عَنْ مَّا تَعْلَمُ اِنَّكَ اَنْتَ الْاَعَزُّ
الْاَكْرَمُ ۝ اَللّٰهُمَّ اِنَّكَ عَفُوٌّ كَرِيْمٌ تُحِبُّ الْعَفْوَ
فَاعْفُ عَنَّا اَللّٰهُمَّ مُصَرِّفَ الْقُلُوْبِ صَرِّفْ
قُلُوْبَنَا عَلٰى طَاعَتِكَ يَا مُقَلِّبَ الْقُلُوْبِ ثَبِّتْ

قُلُوْبَنَا عَلٰى دِيْنِكَ ط اَللّٰهُمَّ اِنَّ قُلُوْبَنَا وَنَوَاصِيَنَا
وَجَوَارِحَنَا بِيَدِكَ لَمْ تُمَلِّكْنَا مِنْهَا شَيْئًا ط فَاِذَا
فَعَلْتَ ذَالِكَ بِنَا فَكُنْ اَنْتَ وَلِيَّنَا وَاهْدِنَا اِلٰى سَوَآءِ
السَّبِيْلِ ط اَللّٰهُمَّ اَرِنَا الْحَقَّ حَقًّا وَّارْزُقْنَا اِتِّبَاعَهٗ
وَاَرِنَا الْبَاطِلَ بَاطِلًا وَّارْزُقْنَا اجْتِنَابَهٗ اَللّٰهُمَّ
ارْزُقْنَا حُبَّكَ وَحُبَّ رَسُوْلِكَ وَحُبَّ مَنْ يَنْفَعُنَا
حُبُّهٗ عِنْدَكَ يَا حَيُّ يَا قَيُّوْمُ بِرَحْمَتِكَ نَسْتَغِيْثُ
نَسْتَغْفِرُكَ رَبَّنَا وَنَسْئَلُكَ التَّوْبَةَ وَاَصْلِحْ لَنَا
شَأْنَنَا كُلَّهٗ وَلَا تَكِلْنَا اِلٰى اَنْفُسِنَا طَرْفَةَ عَيْنٍ
فَاِنَّكَ اِنْ تَكِلْنَا اِلٰٓى اَنْفُسِنَا تَكِلْنَا اِلٰى ضَعْفٍ
وَّعَوْرَةٍ وَّذَنْبٍ وَّخَطِيْئَةٍ اَللّٰهُمَّ لَا سَهْلَ اِلَّا
مَا جَعَلْتَهٗ سَهْلًا وَّاَنْتَ تَجْعَلُ الْحَزْنَ سَهْلًا

إِذَا شِئْتَ ۖ لَآ إِلٰـهَ إِلَّا اللّٰهُ الْحَلِيْمُ الْكَرِيْمُ

سُبْحَانَ اللّٰهِ رَبِّ الْعَرْشِ الْعَظِيْمِ ۖ وَالْحَمْدُ

لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۔ نَسْئَلُكَ مُوْجِبَاتِ رَحْمَتِكَ

وَعَزَآئِمَ مَغْفِرَتِكَ وَالْغَنِيْمَةَ مِنْ كُلِّ بِرٍّ وَّالسَّلَامَةَ

مِنْ كُلِّ إِثْمٍ لَا تَدَعْ لِيْ ذَنْبًا إِلَّا غَفَرْتَهٗ يَا

أَرْحَمَ الرّٰحِمِيْنَ وَلَا هَمًّا إِلَّا فَرَّجْتَهٗ وَلَا حَاجَةً

هِيَ لَكَ رِضًا إِلَّا قَضَيْتَهَا يَآ أَرْحَمَ الرَّاحِمِيْنَ

إِلَيْكَ رَبِّ فَحَبِّبْنَا وَفِيْٓ أَنْفُسِنَا لَكَ رَبِّ فَذَلِّلْنَا

وَفِيْٓ أَعْيُنِ النَّاسِ فَعَظِّمْنَا وَمِنْ سَيِّئِ الْأَخْلَاقِ

فَجَنِّبْنَا وَعَلٰى صَالِحِ الْأَخْلَاقِ فَقَوِّمْنَا وَعَلَى الصِّرَاطِ

الْمُسْتَقِيْمِ فَثَبِّتْنَا وَعَلَى الْأَعْدَآءِ أَعْدَائِكَ أَعْدَاءِ

الْإِسْلَامِ فَانْصُرْنَا اَللّٰهُمَّ انْصُرْنَا وَلَا تَنْصُرْ عَلَيْنَا

اَللّٰهُمَّ امْكُرْ لَنَا وَلَا تَمْكُرْ عَلَيْنَا اَللّٰهُمَّ زِدْنَا وَلَا تَنْقُصْنَا وَلَا تُسَلِّطْ عَلَيْنَا مَنْ لَّا يَرْحَمُنَا اَللّٰهُمَّ اشْرَحْ صُدُوْرَنَا لِلْاِسْلَامِ اَللّٰهُمَّ حَبِّبْ اِلَيْنَا الْاِيْمَانَ وَزَيِّنْهُ فِيْ قُلُوْبِنَا وَكَرِّهْ اِلَيْنَا الْكُفْرَ وَالْفُسُوْقَ وَالْعِصْيَانَ اَللّٰهُمَّ اجْعَلْنَا مِنَ الرَّاشِدِيْنَ ط

பொருள்:- வணக்கத்திற்குரிய நாயன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை. அவன் என்றும் ஜீவித்திருப்பவன்; நிலைத்திருப்பவன்; அலீப் லாம் மீம். அல்லாஹ்வாகிறவன் வணக்கத்திற்குரிய இறைவன். அவனைத் தவிர யாருமில்லை. அவன் ஜீவித்திருப்பவன். ஜீவித்து நிலைத்து இருக்கும் அவன் முன் எல்லா முகங்களும் கவிழ்ந்து விடும்.

(யா அல்லாஹ்!) வணக்கத்திற்குரிய நாயன் உன்னைத் தவிர வேறு யாருமில்லை. நீ தூய்மையானவன். நிச்சயமாக நான் அநியாயக்காரர்களில் ஆகிவிட்டேன். தனித்தவனே! தேவையற்றவனே! அவன் யாரையும் பெறவுமில்லை. அவன் யாராலும் பெறப்படவுமில்லை. அவனுக்கு நிகரானவர் யாருமில்லை.

கருணை புரிபவருக்கெல்லாம் மிக்க கருணை புரிகிறவனே! நாங்கள் எங்கள் ஆத்மாக்களுக்கு அநியாயம் செய்து கொண்டோம். நீ எங்களை மன்னிக்காவிட்டால். எங்களுக்கு அருள் புரியாவிட்டால் நாங்கள் மிகவும் நஷ்டப்பட்டவர்களாகி விடுவோம். எங்கள்

இரட்சகனே! எங்களை மன்னித்து விடு. எங்கள் பாவமன்னிப்பை ஏற்றுக் கொள். நிச்சயமாக, நீ மன்னிப்பை ஏற்பவனாகவும் அருள் பாலிப்பவனாகவும் இருக்கின்றாய். என் இறைவனே! என்னை மன்னித்து விடு. அருள் புரி! நீ அறிந்தவற்றை விட்டும் என்னைக் காப்பாற்று. நிச்சயமாக நீ மிகவும் கண்ணியமுடையவனாகவும், சிறப்பு டையவனாகவும் இருக்கிறாய். யா அல்லாஹ்! நிச்சயமாக நீ மன்னிப்பவன்; சிறப்புடையவன்; மன்னிப்பை நீ விரும்புகிறாய்! எங்களை மன்னித்தருள். யா அல்லாஹ்! இருதயங்களை உன் வணக்கத்தில் திருப்பி வை. இருதயங்களை மாற்றி வைப்பவனே! எங்கள் இருதயங்களை உன் சன்மார்க்கத்தில் நிலைப்படுத்தி வைப்பாயாக.

யா அல்லாஹ்! எங்களுடைய இருதயங்களும் எங்கள் அவயவங்களும் எங்கள் பக்கவாட்டுகள் யாவும் உன் வசமே இருக்கின்றன. அதிலிருந்து எதற்கும் நீ எங்களுக்கு உரிமை யளிக்கவில்லை. எனவே எங்களுக்கு ஏதேனும் அவை மூலம் நீ செய்தால் நீயே எங்களுக்கு உதவியாளனாக ஆகி விடு. நேர்மையான பாதையில் எங்களுக்கு நேர்வழி காட்டியருள்வாயாக!

எங்கள் இறைவனே! சத்தியமானதை சத்தியமானதென்று எங்களுக்கு காட்டிக் கொடு. அதைப் பின்பற்றும் நற்பேற்றையும் எங்களுக்கு அளித்தருள். அசத்தியத்தை அசத்தியமாகவே எங்களுக்கு காட்டுவாயாக! அதை விட்டும் ஒதுங்கும் நற்பேற்றையும் எங்களுக்கு அளித்தருள். இஸ்லாத்தின் விரோதிகள் மீதும் எங்களுக்குச் சாதகமான உதவியைச் செய்தருள்!

எங்கள் இறைவனே! எங்களுக்கு சாதகமான உதவி செய். எங்களுக்கு பாதகமான உதவி செய்யாதே. எங்கள் இறைவனே! எங்களுக்குப் பாதகமான ஆலோசனையைக் கொடுக்காதே. எங்கள் இறைவனே! எங்களுக்கு அபிவிருத்தியைக் கொடு. எங்களுக்கு நஷ்டத்தைக் கொடுக்காதே எங்கள் மீது இரக்கம் கொள்ளாதவர்களை எங்கள் மீது சாட்டி விடாதே!

யா அல்லாஹ்! இஸ்லாத்திற்காக எங்கள் இதயங்களை விசாலமாக்கி வைப்பாயாக. எங்கள் இறைவனே! ஈமானை

எங்களுக்குப் பிரியமானதாகச் செய்து வைப்பாயாக. எங்கள் உள்ளங்களில் ஈமானை அலங்கரித்து வைப்பாயாக. குப்ரியத்தையும், பாதகத்தையும், பாவத்தையும் எங்களுக்கு வெறுப்பானதாகச் செய். எங்கள் இறைவனே! எங்களை உத்தமர்களில் ஆக்கி வைப்பாயாக! (ஆமீன்)

எங்கள் இறைவனே! உன் அன்பையும், உன் ரஸூலுடைய அன்பையும் எவரின் அன்பு உன்னிடம் எங்களுக்கு நன்மை தருமோ, அவர்களுடைய அன்பையும் எங்களுக்கு அளிப்பாயாக! ஏ ஜீவித்திருப்பவனே! ஏ நிலைத்திருப்பவனே! உன் கிருபையினால் எங்களுக்கு அருள் புரிவாயாக. உன்னிடம் உதவி தேடுகிறோம். உன்னிடம் மன்னிப்பு கோருகிறோம். இன்னும் எங்கள் இரட்சகனே! உன்னிடம் பாவமன்னிப்பு கேட்கிறோம். எங்களுடைய அந்தஸ்து அனைத்தையும் எங்களுக்கு சீர்திருத்தி வைப்பாயாக! கண் இமைக்கும் நேரங்கூட எங்களை எங்கள் இச்சைகளிடம் ஒப்படைக்காதே. ஏனெனில், நீ எங்களை எங்கள் இச்சைகளிடம் ஒப்படைத்து விடுவாயேயானால் நாங்கள் பலஹீனத்திலும், நஷ்டத்திலும், பாவத்திலும் தவறி விழுந்து விடுவோம்.

யா அல்லாஹ்! நீ எங்களுக்கு சுலபமாக்கி வைத்ததைத் தவிர எதிலும் எங்களுக்குச் சுலபமே கிடையாது. நீ நாடினால் எப்படிப்பட்ட கஷ்டத்தையும் சுலபமாக்கி விடுகின்றாய். வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் கிடையாது. அவன் பொறுமையானவன்; சிறப்பானவன்; அல்லாஹ் தூயவன்; மகத்தான அர்ஷூக்கும் அதிபதி. எல்லா புகழும் சர்வலோக இரட்சகனாகிய அல்லாஹ்வுக்கே உரியதாகும். உன் அருளுக்குரிய சாதனங்களை நாங்கள் உன்னிடம் வேண்டிக் கொள்கிறோம். உன் பாவமன்னிப்பின் ஆதரவையும், எல்லா நற்காரியங்களிலும் உன் சன்மானத்தையும், எல்லா பாவங்களிலிருந்தும் ஸலாமத்தையும் உன்னிடம் வேண்டுகிறோம். நீ மன்னித்தருளாத எந்த பாவத்தையும் எங்களுக்கு விட்டு வைக்காதே!

கிருபையாளர்களுக்கெல்லாம் மகா கிருபையாளனே! எந்த கவலையையும் நீ அதை சந்தோஷமாக்காமல் விட்டு விட வேண்டாம்.

உனக்கு பொருத்தமான யாதொரு தேவையையும் நீ அதை நிறைவேற்றாமல் விட்டு விட வேண்டாம். ஏ கிருபையாளர் களுக்கெல்லாம் மகா கிருபையாளனே! உன்னளவில் எங்களை நேசமாக்கி வைப்பாயாக! எங்கள் உள்ளங்களில் உனக்குப் பணிவை உண்டாக்குவாயாக.

இறைவனே! ஜனங்களுடைய பார்வையில் எங்களை கண்ணியமாக்கி வைப்பாயாக. கெட்ட குணங்களை விட்டும் எங்களைக் காப்பாற்று; நல்ல குணங்களில் எங்களை நிலைப்படுத்தி வைப்பாயாக. இன்னும் எங்களை நேர்மையான பாதையில் நிலைநாட்டி வைப்பாயாக! எங்கள் விரோதிகளின் மீதும், உன்னுடைய விரோதிகளின் மீதும் எங்களுக்கு சாதகமான உதவியைச் செய்தருள்.

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஓர் அழகிய துஆ

اَللّٰهُمَّ اِنَّا نَسْئَلُكَ مِنْ خَيْرِ مَا سَئَلَكَ مِنْهُ نَبِيُّكَ
مُحَمَّدٌ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ وَنَعُوْذُ بِكَ مِنْ شَرِّ
مَا اسْتَعَاذَكَ مِنْهُ نَبِيُّكَ مُحَمَّدٌ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ
وَاَنْتَ الْمُسْتَعَانُ وَعَلَيْكَ الْبَلَاغُ وَلَا حَوْلَ وَلَا قُوَّةَ
اِلَّا بِاللّٰهِ۔

அல்லாஹும்ம இன்னா நஸ்அலு(க்) மின் கைரி மாஸஅல(க்)க மின்ஹு நபிய்யு(க்)க முஹம்மதுன்

ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் வநஊது பி(க்)க மின்ஷர்ரி மஸ்தஆத(க)க மின்ஹு நபிய்யு(க்)க முஹம்மதுன் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் வஅன்த்தல் முஸ்தஆனு வ அலைக்கல் பலாகு வலாஹவ்ல வலாக்குவ்வ(த்)த இல்லா பில்லாஹி.

பொருள்:- அல்லாஹ்வே! உன்னுடைய திருத் தூதர் முஹம்மத் ஸல்லல்லாஹு அலை வஸல்லம் அவர்கள் உன்னிடம் கேட்ட நன்மைகள் அனைத்தையும் நாங்கள் உன்னிடம் கேட்கிறோம். மேலும் உன்னுடைய நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உன்னிடம் பாதுகாவல் தேடிய தீமைகள் அனைத்தையும் விட்டு நாங்கள் உன்னிடம் காவல் தேடுகிறோம். நீயே உதவி தேடப்படுகிறவன். சகல தேவைகளையும் எத்தி வைப்பது உன் மீதுள்ள பொறுப்பு. பாவங்களிலிருந்து தப்பித்துக் கொள்ளும் எந்த சக்தியும், நன்மையைச் செய்யும் எந்த திறனும் அல்லாஹ்வைக் கொண்டேயல்லாது வேறில்லை.

சிறப்பு :- அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எங்களுக்கு அதிகமான துஆக்களைக் கற்றுத் தந்துள்ளார்கள். அவை அனைத்தையும் எங்களால் மனனம் செய்து கொள்ள முடியவில்லை. எனவே நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை அணுகி, அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தாங்கள் எங்களுக்கு அதிகமான துஆக்களைக் கற்றுத் தருகிறீர்கள். அவற்றை நாங்கள் மனனம் செய்து கொள்ள இயலவில்லை என்று கூறினோம். அதற்கு அவர்கள் அந்த துஆக்கள் அனைத்தையும் தன்னுள் அடக்கிய ஒரு துஆவைக் கற்றுத் தருவதாகக் கூறி மேற்கண்ட துஆவை எங்களுக்கு கற்றுத் தந்தார்கள்.

அறிவிப்பவர் : அபூ உமாமா ரலியல்லாஹு அன்ஹு

குறிப்பு :- தொழுகைக்குப் பிறகும் மற்றும் மஜ்லிஸ் களிலும் ஓதப்படும் துஆக்களுடன் இந்த துஆவையும் சேர்த்து ஓதுவது சிறந்தது.

எல்லா நேரங்களிலும் அல்லாஹ்வின் திக்ர்கள் (நினைவுகள்)

1. எதையும் செய்ய ஆரம்பிக்கும்பொழுது:

بِسْمِ اللّٰهِ

பிஸ்மில்லாஹி

பொருள்:- அல்லாஹ்வின் திருநாமத்தால்,

2. பிஸ்மில்லாஹ் கூறமறந்து விட்டால்:

بِسْمِ اللّٰهِ اَوَّلَهُ وَاٰخِرَهُ

பிஸ்மில்லாஹி அவ்வலஹு வ ஆகிரஹு

பொருள்:- ஆரம்பத்திற்கும் கடைசிக்கும் பிஸ்மில்லாஹ்

3. எதையும் செய்ய நாடும் பொழுது:

اِنْشَآءَ اللّٰهُ

இன்ஷா அல்லாஹ்

பொருள் :- அல்லாஹ் நாடினால்.

4. ஆச்சரியமானவற்றைப் பார்க்கும் பொழுதும், கேட்கும் பொழுதும்:

سُبْحَانَ اللّٰهِ

ஸுப்ஹானல்லாஹ்

பொருள் :- அல்லாஹ் தூயவன்.

5. எதையும் பாராட்டும் பொழுது:

مَا شَآءَ اللّٰهُ

மாஷா அல்லாஹ்,

பொருள் :- எல்லாம் அல்லாஹ்வின் நாட்டப்படியே.

6. பிறருக்கு நன்றி தெரிவிக்கும் பொழுது:

جَزَاكَ اللّٰهُ

ஜஸா(க்)கல்லாஹ்

பொருள் :- அல்லாஹ் உங்களுக்கு நற்கூலி அளிப்பா னாக!

7. தும்மின பிறகு:

اَلْحَمْدُ لِلّٰهِ

அல்ஹம்துலில்லாஹ்

பொருள் :- புகழனைத்தும் அல்லாஹ்வுக்கே.

8. தும்மியவர் அல்ஹம்துலில்லாஹ் கூறியதற்கு:

يَرْحَمُكَ اللّٰهُ

யர்ஹமுகல்லாஹ்

பொருள் :- அல்லாஹ் உமக்கு அருள் பாலிப்பானாக.

9. தும்மியவர் மேற்கண்டதைக் கேட்ட பொழுது:

يَهْدِيكُمُ اللّٰهُ

யஹ்தீக்குமுல்லாஹ்

பொருள் :- அல்லாஹ் உங்களுக்கு நேர்வழி காட்டுவானாக.

10. தருமம் செய்யும்பொழுது:

فِىْ سَبِيْلِ اللّٰه

Fபீஸபீலில்லாஹ்

பொருள் :- அல்லாஹ்வின் பாதையில்.

11. பிறர் மீது அன்பு பாராட்டும் பொழுது:

لِحُبِّ اللّٰهِ

லிஹுப்பில்லாஹ்

பொருள் :- அல்லாஹ்வின் அன்பிற்காக.

12. பிறரிடமிருந்து விடை பெறும்பொழுது:

فِىْ اَمَانِ اللّٰهِ

Fபீ அமானில்லாஹ்

பொருள் :- அல்லாஹ்வின் பாதுகாப்பில்.

13. பிரச்சனைகள் எழும் பொழுது:

تَوَكَّلْتُ عَلَى اللّٰهِ

தவக்கல்த்து அலல்லாஹ்

பொருள் :- அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைத்தேன்.

14. விரும்பியவை நடக்கும்பொழுது:

فَتَبَارَكَ اللّٰهُ

Fபத் தபாரகல் லாஹ்

பொருள் :- அல்லாஹ் உயர்வானவன்.

15. விரும்பாத வார்த்தைகளைக் கேட்கும் பொழுதும், கூறும் பொழுதும்:

نَعُوْذُ بِاللّٰهِ

நஊதுபில்லாஹ்

பொருள் :- அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகிறோம்.

16. பொருள் தவறும் பொழுதும் மரணச் செய்தியைக் கேட்ட பொழுதும்:

اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيْهِ رَاجِعُوْنَ

இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்

பொருள் :- அல்லாஹ்விடமிருந்து வந்தோம். மேலும் அவனிடமே திரும்புபவர்களாக இருக்கிறோம்.

மேற்கண்ட திக்ர்களை அந்தந்த நேரங்களில் ஓதி வந்தால் நிறைந்த நன்மைகளை அடையலாம்.

சிறப்பு :- சொர்க்கவாசிகளுக்கு எந்த கவலையும் இருக்காது. ஆனால் இவ்வுலகில் அல்லாஹ்வை திக்ர் செய்யாமல் கழித்த நேரத்தைப் பற்றி மட்டும்தான் கவலை இருக்கும். நம்முடைய எல்லா நிலைகளிலும் அல்லாஹ்வை திக்ர் செய்வதானது அவனை நெருங்க காரணமாக இருக்கும்.

ஐந்து நேர பர்ளுத் தொழுகைக்குப் பின் ஓத வேண்டிய முக்கியமான அவ்ராதுகள்

ளுஹர், அஸர், இஷா-பர்ளுத் தொழுகை முடிந்ததும் சுன்னத்து தொழுவதற்கு முன்பாக ஓத வேண்டிய முக்கியமான சுன்னத்தான அவ்ராதுகள்:

1. அஸ்தஃஃபிருல்லாஹல்லதீ லா இலாஹ இல்லல்லாஹு வல் ஹய்யுல் கய்யூம் வஅதூபு இலைஹி.

2. அல்லாஹும்ம அன்(த்)தஸ் ஸலாம் வமின் கஸ்ஸலாம் தபாரக்த யாதல் ஜலாலி வல் இக்ராம்.

3. அல்லாஹும்ம லாமனிஅ லிமா அஃதய்த்த வலா முஃதிய லிமா மனஃத்த வலா ராத்தலி மா களைத்த வலாயன்பஉதல் ஜத்தி மின்கல் ஜத்து.

4. ஆயத்துல் குர்ஸீ (1 தடவை)

5. லில்லாஹி மாபிஸ்ஸமாவாத்தி & ஆமனர் ரஸூல்.

6. ஷஹிதல்லாஹு & குலில்லாஹும்ம (ஒரு தடவை)

7. ஸூரத்துல் இக்லாஸ் (11 தடவை)

8. ஸூரத்துல் பலக் (1 தடவை)

9. ஸூரத்துன்னாஸ் (1 தடவை)

10. ஸூரத்துல் பாத்திஹா (1 தடவை)

11. ஸுப்ஹானல்லாஹ் (33 தடவை)

அல்ஹம்து லில்லாஹ் (33 தடவை)

அல்லாஹு அக்பர் (34 தடவை)

12. நான்காம் கலிமா (1 தடவை)

13. லா இலாஹ இல்லல்லாஹு (10 தடவை)

ஸுப்ஹு, மக்ரிப் பர்ளு தொழுகை முடிந்ததும் ஓத வேண்டிய முக்கியமான சுன்னத்தான அவ்ராதுகள்

1. நான்காம் கலிமா (10 தடவை)

2. அஸ்தஃFபிருல்லாஹல்லதீ லாஇலாஹ இல்லா ஹுவல் ஹய்யுல் கய்யூம் வ அதூபு இலைஹி (1 தடவை)

3. அல்லாஹும்ம அஜிர்னீ மினன்னார் (7 தடவை) இத்துடன் மேற்கூறிய நெ. 4 முதல் 13 வரை ஓதி முடிக்க வேண்டும்.

குறிப்பு :- மக்ரிபில் மட்டும் பர்ளுத் தொழுகை தொழுத பிறகு 1-லிருந்து 3-வரை ஓதி விட்டு, சுன்னத்து தொழுத பின் 4-லிருந்து 13-வரை ஓதி முடிக்க வேண்டும்.

(ஹனபிய்யாக்கள் பிந்திய சுன்னத்துள்ள எல்லா நேரங்களிலும், பர்ளுக்குப் பின்னுள்ள சுன்னத்துத் தொழுத பின் மேற்கண்ட அவ்ராதுகளை ஓதிக் கொள்ள வேண்டும்.)

பெற்றோருக்குச் செய்யும் கடமை (துஆ)

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ رَبِّ السَّمٰوٰتِ وَرَبِّ الْاَرْضِ
رَبِّ الْعٰلَمِيْنَ وَلَهُ الْكِبْرِيَاۤءُ فِى السَّمٰوٰتِ وَالْاَرْضِ
وَهُوَ الْعَزِيْزُ الْحَكِيْمُ لِلّٰهِ الْحَمْدُ رَبِّ السَّمٰوٰتِ وَرَبِّ
الْاَرْضِ رَبِّ الْعٰلَمِيْنَ وَلَهُ الْعَظَمَةُ فِى السَّمٰوٰتِ

وَالْاَرْضِ وَهُوَ الْعَزِيْزُ الْحَكِيْمُ هُوَ الْمَلِكُ رَبُّ
السَّمٰوٰتِ وَرَبُّ الْاَرْضِ وَرَبُّ الْعَالَمِيْنَ وَلَهُ النُّوْرُ
فِى السَّمٰوٰتِ وَالْاَرْضِ وَهُوَ الْعَزِيْزُ الْحَكِيْمُ

பெற்றோருக்குச் செய்யும் கடமை

அல்லாமா அய்னீ (ரஹ்மதுல்லாஹி அலைஹி) புஹாரீயில் விரிவுரையில் எழுதியுள்ளதாவது: எவர் ஒரு தடவை மேற்கண்ட துஆவை ஓதி, 'யா அல்லாஹ்! இதன் நன்மையை என் பெற்றோருக்குச் சேர்த்திடுவாயாக!' என துஆச் செய்வாரோ அவர் பெற்றோரின் கடமையை நிறைவேற்றியவராவார்.

மேலும், குல்ஹுவல்லாஹு, ஸூரா பாத்திஹா, ஸலவாத்து ஒவ்வொன்றையும் மும்மூன்று தடவை ஓதிச் சேர்த்தால் பெற்றோருக்கு வழிப்பட்டவர் என கணிக்கப்படுவார். மேலும், நபிலான ஸதக்கா செய்து, அதனைப் பெற்றோருக்குச் சேர்த்து வைத்தால், அது அவர்களுக்குச் சேருவதுடன் அவருக்குரிய நன்மையும் குறைக்கப்பட மாட்டாது.

"பெற்றோர் உயிரோடு இருக்கும்போது அவர்களுக்கு வழிப்படாதிருந்தவர் அவர்கள் மரணத்திற்குப் பின் அவர்களுக்குப் பாவமன்னிப்புப் கோரி, கடனிருந்தால் நிறைவேற்றி, அவர்களைப் பற்றி எக்குறையும் கூறாமல் இருந்தால் அவரும் பெற்றோருக்கு வழிப்பட்டவராவார்."

பெற்றோர் வாழும்போது அவர்களுக்கு வழிப்பட்டிருந்தவர் அவர்கள் மரணத்திற்குப் பின் அவர்களைக் குறை கூறியும், கடன்களை நிறைவேற்றாமலும், அவர்களுக்குப் பாவ மன்னிப்புத் தேடாமலும் இருந்தால், அவர் பெற்றோருக்கு வழிப்படாதவர் என கணிக்கப்படுவார்.

என அவ்ஜாயீ (ரஹ்மதுல்லாஹி அலைஹி) அறிவிக்கிறார்கள்.

காய்ச்சல் குணமடைய ஓதும் துஆ

بِسْمِ اللّٰهِ الْكَبِيْرِ اَعُوْذُ بِاللّٰهِ الْعَظِيْمِ مِنْ
شَرِّ كُلِّ عِرْقٍ نَّعَارٍ وَّمِنْ شَرِّ حَرِّ النَّارِ

காய்ச்சல் குணமடைய நபி ஸல்லல்லாஹு அலைஹி வஹல்லம் அவர்கள் சொல்லித் தந்த அபூர்வ துஆ:

பிஸ்மில்லாஹில் கபீரி அஊது பில்லாஹில் அளீமி மின்ஷர்ரி குல்லி இர்கின் நஃஆரின் வமின் ஷர்ரி ஹர்ரின்னாரி.

மாபெரிய அல்லாஹ்வின் திருநாமம் கொண்டு, துடித்துக் கொண்டிருக்கும் நரம்பின் கெடுதியை விட்டும், நரக நெருப்பின் உஷ்ணத்தின் தீங்கை விட்டும் கண்ணியமிக்க அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகிறேன். நூல் : ஹிஸ்னுல் ஹஸீன்.

குறிப்பு :- இந்த துஆவை 7 தடவை ஓதும்படியும் ஓதும் முன்பு பதினொரு ஸலவாத்துக்களும் ஓதிய பின்பு பதினொரு ஸலவாத்துக்களும், ஓதும்படி பெரியார்கள் கூறியுள்ளார்கள்